ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 04 | 15 - 28 மே 2018 | முழக்கம் 073



ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL

லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி. லென்ஸ். என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30

உங்கள் வீடுகளை
விற்க | வாங்க
i@D IMMOBILIER
Bondyயில் புத்தம் புது வீடு விற்பனைக்கு
✓45m² அளவு கொண்ட F2 வீடு
✓மார்ச் மாதம் குடியமரக்கூடியது
✓விலை. 179 000€
110% கடன்
எந்தவித முதலீடும் இன்றி 110% வீதக் கடன் செய்து தரப்படும்
Gare de Bondyயில் இருந்து 1 நிமிட நடைதூரத்தில்
தொடர்பு: சுதன் 07 64 08 93 83

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com





மே 18
அழுவதற்கான நாளல்ல
எழுவதற்கான நாள்
முள்ளிவாய்க்கால்
முடிவல்ல தொடக்கம்
விடுதலைப் போருக்கான
நீண்ட பயணத்தின்
ஒரு திருப்பம்
இழந்தவர்களுக்காக
குனிந்த தலைகள்
மீண்டும் நிமிர்ந்து
முன்னேற உறுதி
எடுக்க வேண்டிய
உறுதிமிக்க நாள்
இனம் சிந்திய குருதி
இழப்புக்கானதல்ல
இனவிடுதலைக்கானது
கார்த்திகைப் பூக்களும்
சிலிர்க்கும் சுதந்திரக் காற்று
எம் மண்ணில் வீச
சபதமெடுக்கும் நாளிது.


V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்

64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

Rani Restaurant
Spécialités Cuisines Indiennes & Srilnakaises
Rani Restaurant - Traiteur
உங்கள் இல்ல விழாவிற்கு வேண்டிய
சைவ-அசைவ உணவுகள்
Tél.:01 49 44 01 28
09 80 58 20 60
Port.:06 27 51 29 50
Rani Restaurant Traiteur
www.ranirestaurant.fr
8 Ave. Victor Hugo - 93360 Neuilly Plaisance
email: ranirestaurant@hotmail.com

Crédits - Solutions
வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
திரு.சிவா: 0973255923 - 0665660305
Fond de Commerce மற்றும் Mur Commerciaux
ஆகியவற்றிற்கு கடன் உதவிகள் செய்து தரப்படும்
2-4 rue de l'Orillon - 75011 Paris
email: creditssolutions@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

ASCES

28 ஆண்டுகளாக நடைபெறும்
பதிவு செய்யப்பட்ட பாடசாலை

வீதி விதிமுறைகள் (Code de la Route) தமிழில் வகுப்புகள் ஆரம்பம்

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் www.asces.fr Tél : 07 82 88 59 16 E-mail : asces@free.fr

வீதி விதிமுறைகள் (Code de la Route) தமிழில் வகுப்புகள் ஆரம்பம்

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்
08-04-2018 சனி ஞாயிறு மாலை 5.30 மணி
20-03--2018 செவ்வாய் வியாழன் மாலை 5 மணி
14-04-2018 சனி ஞாயிறு காலை 9 மணி
05-03-2018 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
18-04-2018 சனி பி.ப 3.30 மணி (Nationality வகுப்பு)
18-04-2018 புதன் பி.ப 3.30 மணி
20-04-2017 செவ்வாய் வெள்ளி பி.ப 2 மணி (Bobigny)

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

Epinay sur seine 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers,Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்
திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

Bridal makeup & cake icing
மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்,
வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்




SEREE MAHAL
ARTICLES DE CADEAUX, BRICOLAGE

வீட்டு விழாக்களுக்குத் தேவையான
தரமான அன்பளிப்புப் பொருட்கள் மலிவு விலையில்!
100% எலி, பூச்சி கொல்லி மருந்துகள்
எம்மிடம் கிடைக்கும்!
14, rue Cail, 75010 Paris
Tel: 06 69 58 61 61
09 51 15 82 03
M La Chapelle ou Gare du Nord

கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி
வகைகளையும்,
விசேடமாக
ஆட்டிறைச்சிப் பங்கையும்
பெற்றுக்கொள்ள...

BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42


ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 04 15 – 28 மே 2018 முழக்கம் 073

"கடந்து சென்ற இந்த நீண்ட கால ஓட்டத்தில், சிங்கள அரசுகள் உலகத்தை ஏமாற்றியதைத் தவிர, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு உருப்படியான எந்தவொரு தீர்வினையும் முன்வைக்கவில்லை."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



## மே-18

# தமிழர்களின் உயிர்ப்புக்கான நாளாக மாற்ற அனைவரும் உறுதியெடுத்துக்கொள்வோம்!

'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்

அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கின்ற தமிழ் மக்கள் சாம்பல் மேட்டில் இருந்து சபதம் எடுக்க மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. அக்கினிச் சுவாலைகளில் இருந்து எழும் தீ நாக்குகளுக்கு முன் நின்று சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு மீண்டும் ஒரு நாள் வந்திருக்கின்றது. புதை குழிகளுக்கு முன் நின்று புதுப் பரணி எழுத மீண்டும் ஒரு காலம் கனிந்திருக்கின்றது. அதுதான் மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம்.

எங்கள் தேசத்தில் வசிக்கும் ஒவ்வொரு தமிழ் மக்களும் இப்போது துடிக்கின்றனர். ஏன் எமக்கு இத்தனை அழிவென்று கண்ணீர் வடிக்கின்றனர். எங்களுக்கு இனி மீட்பர்களே இல்லையா என வேதனைப்படுகின்றனர். இந்த வேதனைகளுக்கும் கண்ணீருக்கும் பதிலளிக்கவேண்டிய நாள் மே-18.

தமிழர் தேசம் வீழ்ந்த நாள் என அந்த நாளில் சிங்களம் ஆண்டாண்டு கொக்கரிக்கும். ஆனால், தமிழர் தேசம் எழுவதற்கான நாள் என்பதை எமது தேசம் இம்முறை வெளிப்படுத்தும். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் எட்டுத் திக்கிலும் உள்ள தமிழ் மக்கள் ஆர்ப்பரித்து எழுந்து தமிழினத்தின் விடுதலை வேட்கையை உலகுக்கு உரத்துக் கூறவேண்டும்.



விடுதலைக்காகப் போராடிய தமிழ் இனத்தின் கட்டமைப்புக்களை வேரோடு சாய்த்துவிட்டதாக சிங்களம் எக்காளத் தொனி எழுப்பிக்கொண்டிருக்கின்றது. 2009 இற்குப் பின்னர் வருகின்ற ஒவ்வொரு மே-18 ஆம் திகதியும் தெற்கே சிங்கள தேசம் வெற்றி முழக்கத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றது. ஆனால், வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் துக்கம் மனங்களை அடைக்கிறது.

எட்டுத் திக்கும் அரசாண்ட தமிழன் இன்று எமது தேசத்து நிழற் குடைகளின் கீழ் நின்று அழக்கூட முடியாத நிலையை சிங்கள தேசம் ஏற்படுத்தியிருக்கின்றது.

யுத்தம் என்ற பெயரில் வன்னியில் நடைபெற்ற அநியாயத்தை, கொடூரத்தை எந்தவொரு நாகரிக சமூகமும் ஏற்றுக்கொள்ளாது. அது போர் அல்ல. யுத்தம் அல்ல. பன்னாட்டுப் படைகளின் உதவியுடன் வன்னிக்குள் நுழைந்த சிங்களப் படை அங்கு நிகழ்த்தியது இனப்படுகொலை. அதில் எந்தவித மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை.

பல மாதங்களாக முற்றுகைக்குள் வைக்கப்பட்டு தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டனர். உலகில் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் எல்லாம் கொண்டுவரப்பட்டு தமிழர் தலைகளில் கொட்டப்பட்டது. தமிழர் தாயகம் தீப்பற்றி எரிந்தது. பூக்களும் பிஞ்சுகளும் பொசுக்கப்பட்டதைப் போல எரியூட்டப்பட்டனர் எமது குழந்தைகள்.

உலகில் யுத்தத்தை நிறுத்துவதற்கு என அமைக்கப்பட்ட ஐ.நா சபையில் இருந்த அதிகாரிகள் கேவலம் சிங்கள அரசின் எலும்புத் துண்டுகளுக்காக அமைதியாக இருந்தனர். ஓர் இனத்தின் சுதந்திர வேட்கை நீறுபூத்த நெருப்பாக எரிந்து கொண்டிருந்தபோது ஐ.நாவும் அதன் மேய்ப்பர்களும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

இறுதிவரை வன்னியில் நின்ற ஊடகவியலாளர்கள் அங்கு நடைபெற்ற சம்பவங்களை தொகுப்பாக்கி வெளியே அனுப்பிக்கொண்டிருந்தனர். கொத்துக் குண்டுகளும் இரசாயனக் குண்டுகளும் அங்கு பயன்படுத்தப்பட்டமை அப்போதே உறுதியானது. ஆனால், ஐ.நாவும் வல்லமை பொருந்திய அனைத்து நாடுகளும் அமைதியாக இருந்தன.

கண்ணுக்கு முன்னே தமிழினம் கருவறுக்கப்பட்டது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற பெயரில் மகிந்த ராஜபக்ச அரசும் படைகளும் கோரத் தாண்டவம் ஆடின. ஏறக்குறைய இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் அங்கு கொன்று குவிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி 04ம் பக்கம்

விரைவில்...
மாணவர்முரசு®
www.eelamurazu.com

மக்கள் கடை
NEW CASTEL
உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

Drancyயில் பசுமை இறைச்சிக் கடை
BOUCHERIE PASUMAI
HALAL
உங்கள் வீடுக்குத் தேவையான
மளிகைப் பொருட்களும் இங்கு கிடைக்கும்
Tél: 09 81 99 36 40
150, Ave. Henri Barbusse, 93700 Drancy

ARC PRIX MARCHE
மலிவு விலைகளில்
மரக்கறிவகைகள்...
50€ க்கு மேல் பொருட்கள்
வாங்கினால் குறிப்பிட்ட
இடங்களுக்கு விநியோகம்
இலவசம்!*
10 AV HENRI BARBUSSE
93150 LE BLANC MESNIL
Tél: 09 81 46 34 39

ARC EUROPE DRANCY
TAXI
PHONE
138 AV. HENRI BARBUSSE
93700 Drancy
Tél: 09 53 43 32 35
Fax: 01 39 32 23 24

ஈழமுரசு

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்
**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
சுஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

**லாச்சப்பலில்**
**ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு**
**பாலன்:**
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

# மே தினத்தின் மூலமும் கூட்டமைப்பால் தமிழர் மனங்களை வெல்லமுடியவில்லை

**'கிழக்கில் இருந்து'**
**எழுவான்**

உலக நாடுகளில் ஏற்பட்ட புரட்சியினால் ஏற்பட்ட மறுமலர்ச்சி உழைப்பாளர்களை பாதுகாத்துள்ளது எனலாம். ஆனால் ஆசியக் கண்டத்தில் என்றும் இல்லாதவாற மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம். உலக நாடுகளில் இத்தினமானது மே மாதம் முதலாம் திகதி அனுஸ்ட்டிக்கப்படுகிறது. ஆனால் இலங்கை போன்ற நாடுகள் தாம் விரும்பிய தினத்தில் உழைப்பாளர் தினத்தைக் கொண்டாடுவதை எவ்வாறு அழைப்பது?

2018ஆம் ஆண்டு இலங்கையில் சிங்கள தேசம் உலக நாடுகளின் வழக்கத்திற்கு மாறான நிகழ்வை நடாத்தியிருப்பது உழைப்பாளர்களின் மத்தியில் பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம். அதுமாத்திரமல்ல மே தினம் என்றால் உழைப்பாளர்கள் அன்றைய தினம் ஓய்வில் இருப்பார்கள். ஆனால், இலங்கையில் அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்கட்பட்ட பெரிய நீலாவணை பகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தொடர்மாடிக் கட்டடம், கடந்த 28 பெப்ரவரி மாதம் வீசிய புயல்காற்றில் சேதமடைந்த கட்டங்களை திருத்தும் வேலை தொழிலாளர் தினத்தில் இடம்பெற்றது. தொழிலாளர் தினத்தில் தொழிலாளர்க்கு விடுமுறை வழங்காத நாடு என்றால் ஆசியாவில் இலங்கையாகத்தான் இருக்க வேண்டும்.

உலகில் தொழிலாளர் தினத்தை வேறு ஒரு தினத்திற்கு மாற்றிய சரித்திரம் இலங்கையே சாரும். சிங்கள அரசாங்கத்தை வேறு ஒரு சக்தி ஆட்டிவிக்கின்றது என்பதை இதில் இருந்து விளங்கிக் கொள்ள முடியும். இவ்வாறுதான், ஈழத்தமிழர்களுடன் ஒன்றிணைந்து செயல்படுகிறோம் என்பதை காட்டுவதற்காக மகிந்த ஆட்சிக் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையில் ராஜபக்ச தமிழ் மொழியில் உரையாற்றிருந்தார். அவ்வாறான நிகழ்வு 2018 ஆண்டு மே மாதம் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.



எல்லாவிடயத்திலும் மாறுபாடுகளை கையாண்டுவரும் கொழும்பு அரசாங்கம் மே தினத்திலும் அரசியல் மற்றும் உலக நாடுகளை ஏமாற்றும் நடவடிக்கையை கையாண்டுள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது. ஆனால், இந்த விடயத்தில் மாத்திரம் கூட்டமைப்பு கோமாளிகள் இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து செயல்பட்டுள்ளதையும் காணமுடிகிறது. அதாவது, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத்த வேண்டும் என்பதில் மைத்திரி அரசாங்கம் ஏன் ஆர்வம் காட்டியது. இதற்கு ஏன் கூட்டமைப்பு கோமாளிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற கேள்வி எழுகிறது?

கொழும்பு அரசாங்கத்தின் மே தின நிகழ்வு கிழக்கு மாகாணத்தை இடம்பெற வேண்டும் என்பது பேரினவாத சக்திகளின் சதித் திட்டமாகவும், வல்லரசு நாடுகளினதும் கூட்டுச்சதியாக இடம்பெற்றுள்ளது. தமிழர்களின் மனங்களை வென்றெடுப்பதற்காக இந்நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துள்ளது. இந்நிகழ்வுக்கு தமிழ் மக்கள் சமூகம் கொடுக்கமாட்டார்கள் என்பதை அறிந்த சிங்களப் பேரினவாதம் தென்பகுதியிலிந்து பெருமளவில் சிங்களவர்களை ஏற்றி இறக்கியதை அவதானிக்க முடிந்தது.

தமிழ் மக்களை ஏமாற்றும் நடவடிக்கையில்தான் தென்னிலங்கை தொடர்ந்து முயற்சிகளை முன்னெடுத்துவருகிறது. இதற்கு தமிழ் கட்சிகளும் பின்னால் எடுபட்டுக் கொண்டு செல்கிறது. ஆனால், தமிழ் மக்கள் ஒரு பாதையில்தான் பயணிக்கின்றார்கள் என்பதை கடந்த கால எழுக தமிழ் மூலம் நிருபித்துவிட்டார்கள். இதனை தென்னிலங்கை பேரினவாத சக்திகள் இன்னும்தான் புரிந்து கொள்ளவில்லை. போரில் தமிழர்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்துவிட்டு இன்று நல்லிணக்கம் பேசுவோம் வாருங்கள் என்று அழைத்தால் பாதிக்கப்பட்ட தமிழன் செல்வானா? சொகுசு வாகனங்களுக்கும், குளு, குளு அறைக்கும் ஆசைப்பட்டவர்கள்தான் தென்னிலங்கையில் ஒன்றுசேர்ந்து கூத்தடிக்க முடியுமே தவிர சிங்கள சக்திகளினால் பாதிக்கப்பட்ட எந்தொரு தமிழ் மகனும் செல்லமாட்டான் என்பது திண்ணம்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனங்களை ஆற்றுப்படுத்துவதற்காக சிங்கள அரசாங்கம் மட்டுமின்றி உலக நாடுகளும் பல விடயங்களை குறைந்த பட்சம் ஐக்கிய நாடுகள் சபையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களையாவது நடைமுறைப்படுத்த வேண்டும்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

## சிங்களக் குடியேற்றத்துக்காகவே வடக்கில் சிங்கள அதிகாரிகள்!

வடக்கு மாகாணத்தின் எல்லைப்புற மாவட்டங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை முன்னெடுக்கவே மாவட்டச் செயலர்கள் சிங்களவர்களாக நியமிக்கப்படுகின்றனர் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றஞ் சாட்டியுள்ளார். வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது: வடக்கு மாகாணத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த அதிகாரிகள் அண்மைக் காலமாக நியமிக்கப்பட்டு வருவதாக அறிகின்றேன். அதிலும் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாகாணத்தின் எல்லைப் புற மாவட்டங்களின் மாவட்டச் செயலர்களாக சிங்கள அதிகாரிகளே நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்திற்கு சிங்கள அலுவலர்களை நியமிப்பதாயின் யாழ்.மாவட்டத்திற்கு நியமிக்க வேண்டும். அல்லது கிளிநொச்சிக்கு அனுப்ப வேண்டும். ஏன் முல்லைத்தீவு, வவுனியா, மன்னாருக்கு அனுப்புகிறார்கள்.

இவ்வாறான நியமனத்தின் பிரதான நோக்கம் இந்தப் பிரதேசங்களில் தென்னிலங்கை சக்திகள் மேற்கொள்ள வேண்டிய திட்டமிட்ட குடியேற்றங்களை தடையின்றி செயற்படுத்தவே. வடக்கில் உள்ள அதிகாரிகளை தெற்குக்கும் தெற்கில் உள்ள அதிகாரிகளை வடக்குக்கும் நியமிக்க வேண்டியிருப்பின் வடக்கு மாகாணத்துக்கு நியமிக்க வேண்டிய சிங்கள அதிகாரிகளை யாழ்ப்பாணத்துக்கு நியமியுங்கள். அதனை விடுத்து எல்லைப்புற பிரதேசங்களுக்கு நியமிப்பதை நிறுத்துங்கள் என்றார்.

## மே-18 தமிழர்களின்...

கங்கை தொட்டு கடாரம் வரை கோலோச்சிய தமிழர்கள் முள்ளிவாய்க்கால் கடலோரம் நாதியற்றுக் கிடந்தனர். மனிதர்களை உயிரோடு குழிதோண்டிப் புதைக்கும் கொடூரத்தை சிங்களப் படை வன்னியில் அரங்கேற்றியது. மனித இனத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத, கற்பனை செய்து பார்க்க முடியாத அவலங்களை சிங்களப் படை தமிழினத்திற்கு எதிராகச் செய்தது.

அவ்வாறான சிங்கள தேசத்துடன் இனியும் எப்படி நட்புரிமை பூண முடியும்? எமக்கென்று ஒரு தனித் தேசத்தை நாம் அமைக்க என்ன தடங்கல்? யுத்தத்தால் மட்டும்தான் புதிய தேசம் பிறக்கும் என்பதில்லை. யுத்தத்தின் வலிகளைக் கொண்டும் புதிய தேசத்தை அமைக்க முடியும்.

தமிழினத்திற்கு இப்போது உள்ள ஒரேயொரு வழி, தமிழர் பிரச்சினையில் தமிழினத்தின் ஆழமான கரிசனையை உள்ளீர்ப்பதேயாகும். இதுவரை எதையும் செய்யாத சர்வதேசம் இனி எதைச் செய்யும் என்ற கேள்விகள் ஒருபுறம் இருக்கட்டும். முயற்சி செய்வோம். அதிலும் தோற்றாலும் நாம் தொடர்ந்து முயல்வோம்.

இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழர்களின் சுதந்திர தாகத்தை உலகுக்கு உரத்துச் சொல்லும் நாளாக அமையட்டும். நாம் விடுதலைக்காக ஏங்குகின்றோம் என்ற செய்தியை உலகின் காதுகளில் இடித்துரைப்போம்.

எத்தனை யுகம் கடந்தாலும் தமிழர்கள் சுதந்திரத் திருநாட்டை அமைக்காமல் ஓயமாட்டார்கள் என்ற உணர்வுபூர்வமான உண்மையை வல்லரசுகளுக்கு வார்த்தைகளால் உரைப்போம்.

தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் வாழும் அன்பான உறவுகளே!

ஏதிர்வரும் மே-18 ஆம் திகதியை தமிழர்களின் உயிர்ப்புக்கான நாளாக மாற்ற அனைவரும் உறுதியெடுத்துக்கொள்ளுங்கள். அன்று வீடுகளை விட்டு வெளியே வந்து தீபமேற்றி உரத்துக் குரல் எழுப்புங்கள். எந்தத் தடை வந்தாலும் நாம் எமது இலட்சியத்தை வென்றெடுப்போம் என்ற வெற்றிச் சபதத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

தமிழர்கள் அனைவரும் அன்று வீடுகளுக்கு முன்பாக தீபமேற்றி தீப்பந்தப் போராட்டத்தை முன்னெடுப்போம். இழப்புகளுக்கு நிகரான தீர்வைத் தாருங்கள் என சர்வதேசத்திடம் கோரிக்கை முன்வையுங்கள்.

தாயகத்தில் உள்ள தமிழ் மக்கள், எமக்காக வலி சுமந்தவர்களுக்காக முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வில் பங்கெடுத்துக்கொள்ளுங்கள். அங்கு செல்ல முடியாதவர்கள் ஊர்களில் உள்ள பொது இடங்களில் ஒன்றுகூடி தீபமேற்றி அஞ்சலி செலுத்துங்கள்.

அப்படி இன்றேல், அனைத்து மக்களும் வீடுகளுக்கு வெளியே வந்து தீபமேற்றுங்கள். ஊரெங்கும் எழுச்சி, தெருவெங்கும் பேரெழுச்சி என்ற அடிப்படையில் தமிழர் தேசம் அன்று எழுச்சி கொள்ளட்டும்.

புலம்பெயர் தேசத்தில் இருப்பவர்களுக்கு இந்த விடயத்தில் அதிகமான பங்கும் உரிமையும் உள்ளது என்பதை இடித்துரைக்கின்றோம். இது ஒரு முக்கியமான காலகட்டம். எமது மண் ஆக்கிரமிக்கப்படுகின்றது. எமது வரலாற்றுச் சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. எமது கலை, பண்பாடு, கலாசாரம் அனைத்தும் மோசமாகச் சீரழிக்கப்படுகின்றது இவ்வாறான நிலையில், நீங்கள் பொறுமையோடு இருக்கப்போகின்றீர்களா?

அன்பானவர்களே, எதிர்கால வரலாற்றின் பழிச்சொல்லுக்கு ஆளாகாதீர்கள். வீடுகளை விட்டு வெளியே வாருங்கள். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை இம்முறை பேரெழுச்சியாக அனுஷ்டிப்பதன் மூலம் தமிழர்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம், மரபுவழித் தாயகம் என்பவற்றை அங்கீகரிக்கக் கோருவோம்.

ஈழமுரசு®

# முள்ளிவாய்க்கால் தமிழனுக்கு கற்றுத்தந்தது அனுபவப் பாடம்

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டுப் போரில், அதிபர் பசார் அல் ஆசாத் அரசின் படையினர், தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்துவதான குற்றச்சாட்டை, அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் தொடர்ந்து முன்வைத்து வருகின்றன.

கடந்த மாதம் சிரியாவின் கிழக்கு கூட்டா பகுதியில் அரசுக்கு எதிரானவர்களின் பிடியில் உள்ள கடைசி நகரமான டூமாவில் இரசாயன ஆயுத தாக்குதல் நடந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டது. அங்கு சர்வதேச இரசாயன ஆயுத கண்காணிப்பு அமைப்பின் (Organisation for the Prohibition of Chemical Weapons) நிபுணர்கள் குழுவை ஆய்வு நடத்துவதற்கு சிரியாவும், ரஷ்யாவும் அனுமதி மறுப்பதாக அமெரிக்காவும், பிரித்தானியாவும் பிரான்சும் கடுமையாகக் குற்றம் சாட்டின. இரசாயனத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இடத்திலுள்ள ஆதாரங்களை, ரஷ்யா அழித்திருக்கலாம் எனவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டியது. நெதர்லாந்து தி ஹேக் நகரில் நடந்த சர்வதேச இரசாயன ஆயுத கண்காணிப்பு அமைப்பின் கூட்டத்தில் பேசிய இரசாயன ஆயுதங்களைத் தடுப்பதற்கான அமைப்பின் அமெரிக்கத் தூதுவர் கென்னத் வார்ட், இரசாயனத் தாக்குதல் நடந்த இடத்தில் ரஷ்யப் படையினர் தடயங்களை அழித்துவிட்டதாக அஞ்சுவதாகவும் குற்றம்சாட்டியிருந்தார். அதாவது தடையங்களை அழிப்பதற்கு முன்பாக அங்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டு சிரியாவைக் குற்றவாளியாக்குவதற்கு மேற்குலகம் துடியாய் துடித்ததை, இந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து புரிந்துகொள்ள முடியும். தாக்குதல் நடைபெற்றதாக குற்றம்சாட்டப்பட்ட 11 நாட்கள் கடந்த நிலையில், சர்வதேச இரசாயன ஆயுத கண்காணிப்புக் குழு அமைப்பினர் அங்கு சென்று ஆய்வு நடத்துவதற்கு ரஷ்யாவும் சிரியாவும் அனுமதி வழங்கின. அங்கு இருந்து மண் உள்ளிட்ட பல்வேறு தடயங்களை சேகரித்து அவற்றை இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்துகிறபோது, அவற்றில் இரசாயன ஆயுத தாக்குதல் நடந்ததற்கு ஆதாரம் உள்ளதா என்பது தெரியவரும்.

ஆனால் அதற்குள், டூமாவில் இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றம்சாட்டி அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியக் கூட்டுப்படையினர் இணைந்து சிரியப் படையினரின் இலக்குகள் மீது தாக்குதலையும் நடத்தியிருந்தனர். சிரியாவில் இனிமேல் இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தப்பட்டால் அந்த நாட்டின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்துவோம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், அதற்குத் துணை போகின்ற ரஷ்யாவுக்கு எதிராக மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிப்போம் என்றும் ஐ.நா. சபையில் எச்சரித்தும் உள்ளன.

மியான்மாரில் ரோஹிங்யோ முஸ்லிம்கள் மீது அந்நாட்டு இராணுவத்தினர் மேற்கொண்டு வருவது ஓர் இனஅழிப்பு என்று அமெரிக்கா மற்றும் மேற்குலக



நாடுகள் தாக்குதல் இடம்பெற்று ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே வெளிப்படையான குற்றச்சாட்டை ஐ.நா. சபையில் முன்வைத்துள்ளன. உயிர் தப்பிப்பதற்காக அங்கிருந்து ஆறு இலட்சம் மக்கள் அயல் நாடான பங்களாதேசில் தஞ்சமடைந்துள்ள நிலையில், மியன்மார் ஆட்சியாளர்கள் மீது கடும் அழுத்தங்களை ஐ.நா. உட்பட மேற்குலக நாடுகள் பிரயோகித்து வருகின்றன. ரோஹிங்யோ முஸ்லிம்கள் மீதான இனஅழிப்பு வன்முறைக் குற்றச்சாட்டுகள் குறித்து அந்த நாட்டு அரசு வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்பு சபை வலியுறுத்தியுள்ளது. இந்நிலையில், தற்போது மியான்மார் வடக்கே சான் பகுதியில் சுயாட்சி கோரி போராடி வரும் கிறிஸ்தவ மதம் சார்ந்த குழுக்கள் மீதும் வன்முறையைக் கட்டுவிழ்த்து விட்டுள்ளதாக மியான்மார் மீது மேலுமொரு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இதனால் மியன்மார் ஆட்சியாளர்கள் சர்வதேசத்தின் கடும் அழுத்தங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

உலகில் எங்கு அப்பாவிப் பொது மக்கள் பாதிக்கப்பட்டாலும் அதற்கு எதிராக குரலெழுப்ப வேண்டியது உலக ஆட்சியாளர்களின் தார்மீகக் கடமை. ஐ.நா. சபையின் சட்டக் கடமை. ஆனால், சிரியாவிலும் மியன்மாரிலும் பாதிக்கப்படும் மக்கள் மீதேற்பட்ட கரிசனை, இலங்கைத் தமிழர்கள் மீது மட்டும் இந்த உலகிற்கும் ஐ.நா. சபைக்கும் இல்லாமல் போனது ஏனோ..?

இறுதி இன அழிப்புப் போரில் சிங்களப் பேரினவாத அரசு இரசாயனக் குண்டுகளைப் பயன்படுத்தியது. ஆனந்தபுரத்தில் அத்தனை போராளிகளும் பொது மக்களும் கொத்துக் கொத்தாக மடிவதற்கும், தமிழர்களின் விடுதலைப் போராட்டம் முழுமையான தோல்வியைத் தழுவுவதற்கும் மூல காரணமாக அமைந்தது ஆனந்தபுரம் மீதான இரசாயனத் தாக்குதல்தான் என்பதில் தமிழ் மக்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. முள்ளிவாய்க்கால் வரையான சிங்களப் பேரினவாதத்தின் இன அழிப்புப் போரில், இரசாயன ஆயுதங்கள் மட்டுமல்ல சர்வதேச ரீதியாகத் தடை செய்யப்பட்ட 'கிளஸ்ரர்' எனப்படும் கொத்துக் குண்டுகள் உட்பட எத்தனையோ ஆயுதங்களை சிறீலங்கா பயன்படுத்திப் படுகொலைகளைச் செய்தது.

ஆனால், இன்று வரை இரசாயன ஆயுதங்களையும் தடை செய்யப்பட்ட ஆயுதங்களையும் பயன்படுத்தியதாக சிறீலங்கா ஆட்சியாளர்கள் மீது எந்தவொரு நாடும் குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை. அவ்வாறான ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து ஆதாரத்தை தேடுவதற்கு ஐ.நா. சபை உட்பட எந்தவொரு நாடும் இன்று வரை முயலவில்லை. முயன்றும் இனிப் பலனில்லை. ஏனெனில், இத்தனை ஆண்டுகள் கழிந்து அங்கு சென்று ஆதாரங்களைத் தேடியெடுப்பது அத்தனை இலகுவல்ல. சிங்கள இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் மாறிய அப்பகுதிகளில் தாக்குதல் நடந்ததற்கான ஆதாரங்கள் அத்தனையும் இப்போது அழிக்கப்பட்டிருக்கும்.

சிரியாவிலும் மியன்மாரிலும் அரச படையினரால் பாதிக்கப்படும் அப்பாவி மக்களுக்காக குரலெழுப்பும், நடவடிக்கையில் நேரடியாக இறங்கும், வல்லரசுகளையே பகைத்துக்கொள்ளத் துணியும் எந்தவொரு நாடும் முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட மக்களுக்காக இன்றுவரை இவ்வாறான ஒரு நடவடிக்கையை ஏன் முன்னெடுக்கவில்லை?

சிரியாவிலும் மியன்மாரிலும் அரசுக்கு எதிராகப் போராடுபவர்கள் போராளிகள். இலங்கையில் அரசுக்கு எதிராகப் போராடுபவர்கள் பயங்கரவாதிகள் என்ற மேற்குலகின் முரணான பார்வைதான் இத்தனைக்கும் காரணம். சிரிய ஆட்சியாளர்களும், மியன்மார் ஆட்சியாளர்களும் மேற்குலகிற்கு வேண்டப்படாதவர்கள். அதனால், வேண்டாப் பெண்டாட்டி கை பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்பதுபோல அவர்களின் எல்லா நடவடிக்கைகளையும் எதிர்க்கும் இந்த மேற்குலகம், அரசுக்கு எதிராகப் போராடுபவர்களை ஆதரவுக்கரம் கொண்டு காப்பாற்றுகின்றது.

ஆனால் மாறாக, சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பதில் அவர்களின் கவனம் இன்று வரை முழுமையாக இருக்கின்றது. சுயநலன்கள் சார்ந்த உலகின் இந்த முரணான போக்கை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

முள்ளிவாய்க்கால், இந்த உலகத்தை தெரிந்தும், புரிந்தும் கொள்வதற்கு தமிழனுக்கு தந்துள்ள மிகச்சிறந்த அனுபவப் பாடம். இந்தப் பாடத்தையும் புரிந்துகொள்ளவில்லை என்றால், வரலாற்றில் என்றைக்குமே தமிழர்கள் மீண்டெழ முடியாது.

## இலங்கையில் நல்லிணக்கம்

~~அரோகரா... அல்லாகு அக்பர்... பிதா சுதன் பரிசுத்த ஆவியே...~~

## புத்தம், சரணம், கச்சாமி...

நிலவன்

இலங்கை எங்கும் பௌத்த கலாசாரம் நிலைபெற்றால் மட்டுமே நல்லிணக்கம் பாதுகாக்கப்படும். இந்நாடு பௌத்த நாடு. அரசாங்கம் பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளிப்பது அரசியலமைப்பின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இந்நாட்டில் இந்து, இஸ்லாமிய, கிறித்தவ மதங்களும் பின்பற்றப்படுகின்றன. அவற்றின் வணக்கத்தலங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு பௌத்த தரப்பில் இருந்து எதிர்ப்புக் காட்டப்படவில்லை. பௌத்தம் என்பது நல்லிணக்கமாகும். இலங்கையில் பௌத்தம் நிலைநிறுத்தப்பட்டால் மாத்திரமே நல்லிணக்கம் நிலைபேறாக இருக்கும்.

– சிறீலங்கா தேசிய சுதந்திர முன்னணி உறுப்பினர் ஜயந்த சமரவீர

வடக்கு, கிழக்கு மாகாணங்களில், புதிதாக பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்படுவதைத் தடைசெய்ய வேண்டுமென நான் கூறவில்லை. பௌத்த மக்கள் வாழாத பிரதேசங்களில், புத்தர் சிலைகளைப் பிரதிஷ்டை செய்வதால் எந்தப் பயனுமில்லை என்றே நான் கூறினேன்.. ஆனால், நான் தெரிவித்த கருத்தைத் திரிபுபடுத்தி வெளியிட்டதன் மூலம், பௌத்த மக்களைக் கோபப்படுத்திப் பார்ப்பதற்கு சிலர் முயன்றுள்ளனர். இச்சம்பவத்துக்கு எதிராக நான் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

– தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்



## உலகின் சிறந்த தொடருந்துப் பயணத்திற்கு யாழ்தேவி!

உலகின் சிறந்த 18 தொடருந்துப் பயணங்கள் குறித்து இலண்டனில் இருந்து வெளியாகும் த கார்டியன் (The Guardian) இணையத்தளம் பட்டியலிட்டுள்ளது. குறித்த இணையத்தளம் வெளியிட்டுள்ள மிகச் சிறந்த 18 தொடருந்து சேவைகள் பட்டியலில் ஆசியா கண்டத்தில் இலங்கையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் யாழ்தேவி தொடருந்து சேவையும் இடம்பெற்றுள்ளது. தொடருந்துப் பயணத்தின் போது பயணிகளின் மனதுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய அழகிய இயற்கைக் காட்சிகளை இரசிக்கக்கூடிய பல்வேறு கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் கட்டடங்கள்




என பயணத்தை இனிமையாக்கும் அனுபவத்தை வைத்து இந்தத் தரப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்தேவி தொடருந்து இலங்கையின் வடக்கு மற்றும் தென் பகுதியை கலை, பண்பாடு, வர்த்தகம் என பலதரப்பட்ட வகைகளில் ஒன்றிணைக்கின்றது. ஏழு மணித்தியாலங்கள் கொண்ட யாழ்தேவியின் பயணத்தில், தாமதங்கள் ஏற்படுவது வழக்கம். முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு பயணச் சீட்டுகள் 30 நாட்களுக்கு முன்னர் தொடக்கம் முன்பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் இணையமூலம் முன்பதிவுகள் இல்லை. பெரிய சாளரங்களின் மூலம், உலர்ந்த பசுமையான காட்சிகளையும் பிரகாசமான கோவில்களையும் காண முடியும் என்றும் இலண்டன் கார்டியன் தெரிவித்துள்ளது. இப்பட்டியலில் இந்தியாவின் நீலகிரி மலை தொடருந்தும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்காவின் சாதனை

சிறீலங்கா காவல்துறை விசேட படையினரால் மேற்கொள்ளப்பட்ட, போதைப் பொருள் கைப்பற்றல் தொடர்பிலான 3 வருட கணக்கெடுப்பில், 2015 தொடக்கம் 22.04.2018 வரையில் 75 மில்லியன்ரூபாய்பெறுமதியானஹெரோய்ன் போதைப் பொருள் இதுவரையில் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015ம் ஆண்டு 151 சுற்றிவளைப்புகளில், 169 பேர் கைது செய்யப்பட்டதுடன், 434 கிராம் அளவிலான ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது. 2016ம் ஆண்டில் 85 சுற்றிவளைப்புகளில் 94 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 535 கிராம் ஹெரோய்னும், 2017ம் ஆண்டில் 299 சுற்றிவளைப்புகளில், 317 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 5,396 கிராமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வாண்டு 2018 125 சுற்றிவளைப்புகளுடன் 131 கைது செய்யப்பட்டுள்ளதோடு, 7,414 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதாக காவல்துறை விசேட பிரிவினர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## வரலாறாய் வாழ்தல்





முன்பள்ளியில் ஆண்டு ஒன்பது
ஒன்பது கோளும் ஒரேயடியாய்
பார்த்துப் பாராமல்
பலன்களை அள்ளி வழங்குமென
பார்த்திருக்கப் போகின்றோமா..?
தந்தை செல்வாவோடு
கொடிய பௌத்த வெறிபிடித்த
சிங்களரைக் கற்றுணர்ந்தோம்.
தனக்குவமை தானேயான
தமிழர் தேசியத் தலைவனின்
தொடரும் பயணத்தில்
முதலில் சறுக்கி விழுந்த
தளபதி அமிர்தலிங்கம் காலமும்
தன்னிலை இழந்துபோன இயக்கங்களும்
அடுத்துக் கெடுக்கும்
இந்தியத்தையும் கற்றுணர்ந்தோம்.
முள்ளிவாய்க்காலோடு
அணைத்துக் கெடுக்கும் அனைத்துலகை
மக்களாட்சியின் மகத்துவம் பேசுவோர்
மதங்களாட்சி செய்வோர்
மாக்சியவாட்சி செய்வோர்
இவர்களையெல்லாம் மேய்ப்பதாகக் கூறும்
ஐக்கிய நாடுகள் மன்றம் வரை
ஐயம் தெளிவுறக் கற்றுணர்ந்தோம்.
முள்ளிவாய்க்காலில் வாசல் திறந்தது
எண்ணித் துணிந்து எண்ணியாங்கு எய்தி
எண்ணற்றவர்கள் கொடுத்தவுயிருக்கும்
பட்ட துன்பத்திற்கும்
திட்டமிட்ட இனவழிப்பில்
கொன்றொழிக்கப்பட்ட எம்மின மக்கள்
கொளுத்தியழிக்கப்பட்ட
வரலாற்று அறிவுக் களஞ்சியங்கள்
பண்பாட்டடையான தேட்டங்கள்
எல்லாவற்றிகும் பொருள்தானென்ன
பட்டறிவும் பாடம்தானென்ன
படிப்பறிவும் பாடம்தானென்ன
பாடுபட்டுழைப்பது தானெதற்கு
இவ்வரலாற்றுக் காலத்தில் வாழும்
குவலயமெங்கும் குடியிருக்கும் தமிழர் நாம்
இனிவரும் வரும் தமிழர் தலைமுறையெல்லாம்
எமை இழிவாயப் பேசிப் பேசி
துன்பம் சூழ வாழ வழிவிட்டு
எமக்கென்னவென வாழ்ந்தொழிந்து
போகப்போகின்றோமா..?
அன்பும் பண்பும் அறிவும் தெளிவும்
விழிப்பும் உழைப்பும் கொண்டு
உலகியலில் தேறியோராய்
இனி உறுமின்னலுமில்லை
உயிரீகமும் இல்லையென
வினைத்திட்பம் கொண்டோராய்
விடுதலைப் பாதையில்
அணிதிரளப் போகின்றோமா..?

– அராலியூர் கலைமகள்

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### தந்தையின் வாகனத்தில் மோதி சிறுமி பலி

வவுனியா செட்டிக்குளம் வீரபுரம் பகுதியில் தந்தையின் ஹயஸ் ரக வானுடன் மோதுண்டு 5 வயது மகள் பலியாகிய சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுகந்தன் துசாந்தினி என்ற சிறுமியே இவ்வாறு பலியாகியுள்ளார். காலையில் வீட்டிலிருந்து ஆடைத்தொழிற்சாலைக்கு பணியாளர்களை ஏற்றிச் செல்லும் தந்தை, தனது தொழிலுக்குச் செல்கின்ற போது, தனது மகளையும் முன்பள்ளிக்கு ஏற்றிச்சென்று இறக்கி விடுவதை வழக்கமாக கொண்டிருந்தார். அவ்வாறே கடந்த 9ம் திகதி புதன்கிழமையும் காலை வீட்டிலிருந்து வானில் மகளை ஏற்றிக்கொண்டு சென்ற தந்தை, முன்பள்ளியில் மகளை இறக்கிவிட்டு வாகனத்தை திருப்பிய போது, வழமைக்கு மாறாக மகள் வாகனத்தின் முன்பகுதியின் ஊடாக முன்பள்ளிக்குள் நுழைவதற்கு எத்தனித்த போது தந்தையின் வாகனத்துடன் மோதுண்டுள்ளார். உடனடியாக தந்தை, மகளை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்துள்ளார். எனினும், சிகிச்சை பலனின்றி 10ம் திகதி குறித்த சிறுமி உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சிறுமி பெற்றோருக்கு ஒரேயொரு மகள் என்பது குறிப்பிடத்தக்கது.



### விபத்தில் காதலி பலி - காதலனுக்கு விளக்கமறியல்

திருகோணமலை, சம்பூர் கட்டைப்பறிச்சான் பகுதியில் இடம்பெற்ற உந்துருளி விபத்தில் காதலி உயிரிழந்துள்ளார் என்பதுடன், விபத்துடன் தொடர்புடைய காதலனை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். வவுனியா, கிடாச்சூரி பகுதியைச் சேர்ந்த தெய்வலோகசிங்கம் விதூசிகா (17 வயது) என்ற இளம் யுவதியே, சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். முல்லைதீவு, அலம்பில், கெனேடியன் வீதியைச் சேர்ந்த பிரபாகரன் அனுசன் (23 வயது) என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



சம்பவம் குறித்து தெரியவருவதாவது, குறித்த இளைஞனும் யுவதியும் காதலித்து வந்துள்ளனர். இந்நிலையில், வீட்டாருக்குத் தெரியாமல் இளைஞனின் வீட்டுக்கு யுவதி வந்துள்ளார். எனினும், முல்லைதீவிலுள்ள சிறீலங்காக் காவல் நிலையத்தில் வைத்து யுவதி வீட்டாரிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து, மீண்டும் இளைஞனைப் பிரித்து, சம்பூர் பகுதியிலுள்ள தனது உறவினர்களின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அதனையடுத்து, மேற்படி யுவதி, காதலனுக்கு தான் சம்பூரில் இருப்பதாகவும் தன்னை அழைத்துச் செல்லுமாறும் கோரியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காதலனான பிரபாகரன் சம்பூர் பகுதிக்குச் சென்று, காதலியை ஏற்றி வந்தவேளை, யுவதியின் உறவினர்கள் உந்துருளிகளில் துரத்தி வந்ததாகவும் தெரியவந்துள்ளது. இதன்போது, குறித்த காதலர்கள் பயணித்த உந்துருளி வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் காதலி உயிரிழந்துள்ளார் என விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. உயிரிழந்த பெண்ணின் சடலத்தை சட்ட வைத்திய பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளதுடன் காயங்களுக்குள்ளான 23 வயதுடைய காதலன் திருகோணமலை பொது வைத்திய சாலையில் காவலுடன் சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

### யானை தாக்கி இருவர் பலி!

மட்டக்களப்பு, கித்துள் கார்மலைப் பகுதியில் காட்டு யானை வழிமறித்துத் தாக்கியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இந்த சம்பவத்தில் செங்கலடி ? குமாரவேலியார் கிராமம் சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான நாகண்டாப்போடி சங்கரப்பிள்ளை (வயது 61) என்பவரே உயிரிழந்துள்ளார். தனது மாடுகளை பட்டிக்கு மேய்த்துச் சென்ற வேளை திடீரென வழிமறித்த காட்டு யானைகளில் ஒன்று முதியவரை விரட்டிச் சென்று தாக்கியது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மட்டக்களப்பு வாகனேரி பிரதேசத்தில் யானைத் தாக்குதலில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 10ம் திகதி வியாழக்கிழமை இரவு உயிரிழந்தார். வாகனேரி சுற்றுலா விடுதி வீதியைச் சேர்ந்த 33 வயதுடைய கால்நடை வளர்ப்பாளரான 3 பிள்ளைகளின் தந்தையான சிவலிங்கம் குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த நபர் சம்பவதினமான இரவு 11 மணியளில் கால்நடைகளை பட்டியில் அடைத்துவிட்டு வாகனேரி குளத்தில் குளிக்கச் சென்றபோது குளப்பகுதியில் வைத்து யானை தாக்கியுள்ளது. யானையின் தாக்குதலில் அவர் சம்பவ இடத்திலே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.




சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 06 58 75 05 09
CITY EXPRESS We Move the Businessclass
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# ராஜீவ் கொலையில் தொடரும் மர்மம் அவிழ்க்கப்படாத முடிச்சுக்கள்

பழ.நெடுமாறன்

தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் கொழும்பு வீரகேசரி இதழுக்கு வழங்கிய செவ்வியில் இருந்து சில முக்கிய பகுதிகள் ஈழமுரசு வாசகர்களுக்காக....

ராஜீவ் காந்தியின் மரணம் இந்தியாவை மாற்றியதா?

நான் அந்தக் குடும்பத்துடன் நெருக்கமாக பழகியவன் என்ற அடிப்படையில் ராஜீவ் காந்தியின் மரணம் என்பது மிகவும் வருத்தத்திற்கு உரியதான விடயம். ஆனால் ராஜீவின் படுகொலைக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்பதை உறுதியாக என்னால் சொல்ல முடியும். ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது பதவியில் இருந்திருக்கவில்லை.

அக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் ராஜீவினை சந்திப்பதற்கு விரும்பினார்கள். நானே நேரடியாக அதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தேன். இந்த சமயத்தில் விடுதலைப் புலிகள் சார்பில் காசி ஆனந்தன் ராஜீவ் காந்தியை நேரில் சந்திக்கின்றார். அச்சமயத்தில் அவர் பல்வேறு தெளிவுபடுத்தல்களை வழங்கியிருந்தார். குறிப்பாக குமரப்பா, நடைபெறப்போகின்றது. இதில் அதிகாரத்திற்கு நானே வரப்போகின்றேன். வந்தவுடன் புலிகளுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் நான் வழங்குவேன் என்பதை பிரபாகரனிடத்தில் உறுதியாக கூறுங்கள் குறிப்பிட்டார். இதனை காசி ஆனந்தன் என்னிடத்தில் கூறினார். அந்த தகவல் பிரபாகரனுக்கும் அனுப்பப்பட்டது.

இதனடிப்படையில் பார்க்கின்றபோது பதவியில் இல்லாத ஒருவரையும் எதிர்காலத்தில் தமக்காக செயற்படப்போவதாக வாக்குறுதி அளித்த ஒருவரையும் கொலை செய்ய வேண்டிய அவசியம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்படாது. அதன் காரணத்தால் ராஜீவ் கொலை வழக்கில் 26 பேருக்கு வழங்கப்பட்ட தூக்குத்தண்டனை தீர்ப்பு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வாதாடும் சட்டத்தரணிகள் குழுவுக்கான நிதி சேகரிக்கும் குழுவிற்கு தலைமை தாங்கினேன். அந்த வழக்கு பொய்யானது என நிரூபிக்கப்பட்டு அதில் 19 பேர் விடுதலையாக்கப்பட்டுள்ளனர்.

அந்த வழக்கின் தலைமைநீதிபதி கே.டி. தோமஸ், இந்தியாவின் பிரதமரை படுகொலை செய்த வழக்கில் யாரையும் தண்டிக்காது விட்டால் தவறாகிவிடும் என்பதால் தவறிழைத்துவிட்டேன் என்று கருத்து வெளியிட்டுள்ளார். அதேபோன்று இந்த கொலைவழக்கின் மத்திய புலனாய்வுத்துறை அதிகாரி வி.தியாகராஜன், வாக்குமூலத்தினை திருத்தி எழுதியாக குறிப்பிடுகின்றார். இதனைவிடவும் ராஜீவ் கொலையின் பின்னணி சதி இருக்கின்றதா என்பது தொடர்பில் ஆராய கூட்டு ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்ட போதும் தற்போது வரையில் அவர்கள் எவ்விதமான அறிக்கையையும் வெளியிடவில்லை.

தற்போது ராஜீவ் கொலைவழக்கு விசாரணை சிறப்பு புலனாய்வுக்குழு தலைவராக செயற்பட்ட கார்த்திகேயன் உண்மையான குற்றவாளிகளை மறைத்துவிட்டதாக குற்றச்சாட்டுள்ளதால் கூட்டு ஆணைக்குழு விசாரணை செய்வதாக கூறியுள்ளது. ஆனால் இன்னமும் முடியவில்லை. ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாக கூறப்படுகின்றவர்களின் ஒருவர் வீட்டுத்தரகரான ரங்கநாத்.

சிவராஜன் ரங்கநாத்தை சந்தித்து வீடு வாடகைக்கு தேவை எனக் கோரியதனையடுத்து இருவருக்கும் நட்பு ஏற்பட்டுள்ளது. சிவராஜன் டெல்லிக்குச் சென்றபோதும், சந்திரசாமியைச் சந்திக்கச் சென்றபோதும் ரங்கநாத் சென்றுள்ளார். ரங்கநாத்தை கைது செய்தபோது இந்த விடயங்களை அவர் கூறியுள்ளார். இருப்பினும் கார்த்திகேயன் அவரை தாக்கி வாக்குமூலம் பெற்றுள்ளார் என்பதை ரங்கநாத்தே கூறியுள்ளார்.

இவ்விடயங்கள் தொடர்பில் இதனை 'தவீக்' என்ற பத்திரிகை கார்த்திகேயனிடத்தில் கேள்வி எழுப்பியபோது அவர் கடுந்தொனியில் சத்தமிடவும் அக்கருத்துகள் அனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான கட்டுரையொன்றை வெளியிட்டது.

அந்த பத்திரிகை சோனியா கந்தியின் பார்வைக்குச் செல்லவும் அதிர்ச்சியடைந்த அவர் அமைச்சராக இருந்த அர்ஜன்சிங்கிடத்தில் ரங்கநாத்தை பார்க்க வேண்டும் என்று சோனியா காந்தி கூறியுள்ளார். அர்ஜன் சிங் உடனடியாக ரி.ஆர்.தங்கபாலுவிடத்தில் தகவல் தெரிவிக்கவும் அவர் என்னை வந்து சந்தித்தார். காரணம் ரங்கநாத் என்னுடைய அலுவலகத்தில் தான் தங்கியிருந்தார். அச்சமயத்தில் ரங்கநாத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தினால் அவரை அனுப்ப தயார் என்று



புலேந்திரன் உள்ளிட்டவர்கள் சென்னை சென்று தங்களது அலுவகத்தில் சில ஆவணங்களையும் பொருட்களையும் எடுக்க வேண்டியிருந்தது. இந்த வியடத்தினை திபீந்தர் சிங்கிடத்தில் தெரிவித்து விட்டே தமிழகத்திற்கு வந்தனர். இதனை எவ்வாறோ அறிந்த தீட்சித் இலங்கை இராணுவத்திற்கு தகவல் வழங்கி விட்டார். அத்துடன் தீட்சித் இவர்களின் பயணம் தனக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் கைவிரித்தமையால் ஈற்றில் அவர்கள் மரணமடைய வேண்டியேற்பட்டது. இதனால் தான் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் மோதல்கள் உருவாக வேண்டிய நிலைமைகள் எழுந்தன.

அதனைத் தவிர விடுதலைப்புலிகள் இந்திய இராணுவத்துடன் மோதவேண்டிய எந்தவொரு சூழலும் ஏற்பட்டிருக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். இதனை ஆழமாக கேட்டுக்கொண்டிருந்த ராஜீவ் காந்தி - பிரபாகரனிடம் கூறுங்கள் தவறு நடைபெற்று விட்டது. எனக்குத் தெரியாது அந்தத் தவறு இழைக்கப்பட்டு விட்டது. தற்போது தேர்தல்

நான் கோரவும் உடனடியாக ரங்கநாத்துக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதாக பகிரங்க அறிவிப்பனை அர்ஜன் சிங் விடுத்தார்.

இதனையடுத்து பொலிஸ் பாதுகாப்புடன் சோனியா காந்தியை ரங்கநாத் சந்தித்தார். தனக்கு நிகழ்த்தப்பட்ட சித்தவதைகள் உட்பட தனது குடும்பத்தை புலனாய்வு அதிகாரிகள் சிதைத்தது வரையில் அனைத்தையும் கூறி அழுதுள்ளார். இதனால் சோனியா காந்தி எங்கோ தவறு நடந்திருக்கின்றது என்பதை உணர்ந்துகொண்டதோடு தனது கணவரின் கொலைச் சம்பவத்தை கண்டறிந்தவர் என்ற வகையில் கார்த்திகேயன் மீது வைத்திருந்த மரியாதையை தாண்டி அவரை சந்திப்பதையும் தவிர்க்கலானார்.

இதுவொருபக்கமாக இருக்கையில் ராஜீவ் மரணமடைந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவுக்கு வருகை தந்திருந்த யசீர் அரபத், ராஜீவுக்கு எதிராக சர்வதேச சதி உள்ளது. ஆகவே கூட்டமான பகுதிகளுக்குள் செல்லவேண்டாம் என அவரை எச்சரித்திருந்தேன் என்று பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்.

அவ்வாறு யசீர் அரபத் தெரிவித்திருந்த நிலையில்

தொடர்ச்சி 14ம் பக்கம்

## புலம்பெயர் தமிழர்களின் நிதிக்கு தடை

புலம்பெயர் தமிழர்களின் நிதிகளை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பெறுவதற்கு அரசாங்கமே தடையாகவுள்ளதென வடமாகாண முதலமைச்சர் சிவி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். வலிவடக்கில் மீளக் குடியேறிய மக்களை பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார். முதல்வர் இங்கு மேலும் தெரிவிக்கையில், புலம்பெயர் தமிழர்களின் நிதி எங்கள் பொருளாதாரத்திற்கும் வளமான எதிர்காலத்திற்கும் மிகவும் முக்கியமானது. எனினும் இதனை எமது மக்கள் அனுபவிப்பதற்கு அரசாங்கம் தடையாக உள்ளது. எமது மக்கள் இழந்த பொருளாதார பலத்தை பெறுவதற்கு புலம்பெயர் தமிழர்களின் நிதிஉதவி உதவக்கூடும். இது தொடர்பில் அரசாங்கத்துடன் சேர்ந்த பலருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐரோப்பிய ஒன்றியம் சிறீலங்காவிற்கு ஆதரவு

இலங்கையின் நல்லிணக்க மற்றும் சீர்திருத்த முயற்சிகளிற்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்கப்போவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் டுங் லாய் மார்கியூ இதனை தெரிவித்துள்ளார். இந்த விவகாரங்களில் ஏற்படும் முன்னேற்றம் இலங்கையில் நிரந்தரசமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் வழிகோலும் என ஐரோப்பிய ஒன்றியம் உறுதியாக நம்புகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றிய தினத்தை குறிக்குமுகமாக கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். இலங்கைக்கு ஜிஎஸ்பி வரிச்சலுகையை வழங்கியதன் காரணமாகவும் மீன்பிடித்தடையை நீக்கியதன் காரணமாகவும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள சாதகமான மாற்றங்களையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சிறீலங்காவிற்கு கியூபா ஒத்துழைப்பு

சிறீலங்கா அரசின் சுகாதார சேவையை மேம்படுத்த கியூபா அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக தெரிவித்துள்ளது. கியூபாவில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டுள்ள சிறீலங்கா சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவை சந்தித்த கியூபாவின் சுகாதார அமைச்சர் ரொபேற்றோ மொராலே இதனைத் தெரிவித்துள்ளார். கியூபாவில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள், உபகரணங்களை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கும் இரு நாட்டு அமைச்சர்களுக்கும் இடையிலான சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் விரைவில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM




# கந்தனின் வளவுக்குள்ள புத்தன்!

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
நாகதீப புத்தனின் வீட்டுக்குள்ள
நயினாதீவு அம்மன் அத்துமீறி போனதில்லை.
நயினாதீவு அம்மன் வளவுக்குள்ள
நாகதீப புத்தன் எட்டிப்பாத்ததுமில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
ஆரியகுளத்து புத்தனின் வளவுக்குள்ள
நல்லூர் கந்தன் போனதும் இல்லை.
நல்லூர் வீதிக்குள்ள ஆரியகுளத்து
புத்தன் அடாத்தாய் வரவுமில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்....
எங்கட வேலிகள் அறுக்கையாகவே இருந்தன!
எங்கட பொடியள் இருக்குமட்டும்...
நாங்கள் மட்டுமல்ல எங்கட தெய்வங்களும்
நிம்மதியாகவே இருந்தார்கள்.

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
கிடாயும் கோழியும் நேந்துவிட்டு
கவுணாவத்தை வேள்வி இனிதே நடந்தது!
ஆலமர உச்சியில் ஸ்பீக்கர்
கட்டித்தான் திருவிழா கொண்டாடினோம்!

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
அந்தோனியார் கோவிலில் கிடாய் அடிச்சு
அன்னதானம் செய்தோம்!
பண்டித்தலைச்சி அம்மனுக்கு
மூடை மூடையாய் அன்னதானம் செய்தோம்!

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
நீதிபதிகள் கட்டப்பஞ்சாயத்து செய்ததுமில்லை.
லோயர்மார் கொம்பு முழைச்சு திரிஞ்சதுமில்லை!
கண்ட கண்ட கழிசடைகளும்
மாலையோடும் வெள்ளை வேட்டியோடும்
நெஞ்சு நிமித்தி திரிஞ்சதில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
பிரேமானந்தாவுக்கும் நித்தியானந்தாவுக்கும்
யாழ்ப்பாணத்தில் பூசை வைச்சதில்லை!
யாழ்ப்பாணத்து குப்பத்தொட்டிகளில்
குழந்தைகளை ஆரும் போட்டதில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
பள்ளிக்கூடத்துக்கு அரசியல்வாதிகளை
கூப்பிட்டதுமில்லை.
கூப்பிட்டு மாலை போட்டதுமில்லை!
வெளிநாட்டில இருந்து ஆரும் குறைசொன்னதில்லை.
குறை சொல்லுற அளவுக்கு
அப்படி ஊரில் நடந்ததுமில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
கம்பஸ் பொடியளில் ஆரும் கைவச்சதும்மில்லை!
ரணிலுக்கு காவடி எடுத்ததுமில்லை
கிலாரி கிளிண்டனுக்கு தேங்காய் உடைத்ததுமில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
தோழர் எண்டு ஆரையும் கூப்பிட்டதுமில்லை!
இந்தியன் ஆமியோட நிண்டவங்களை
அருகில அண்டினதுமில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்....
இனப்படுகொலை நடக்கவில்லை எண்டு
எவனும் சொன்னதில்லை!
ஊழல் ஆரும் செய்ததில்லை!
அப்படி செய்தவனை மீண்டும்
பதவியில் விட்டதில்லை!
ஆமிக்காரன் காணி விட்டதுக்காய்
கொண்டாட்டம் வைப்பதில்லை!



எங்கட பொடியள் இருக்குமட்டும்...
ஆரும் கஞ்சா கடத்தினதில்லை
கள்ளச்சாராயம் காய்ச்சினதுமில்லை!
ஹிந்திக்காரன் யாழ்ப்பாணம் வந்ததுமில்லை
அவனை மாதிரி சினிமா எடுத்ததுமில்லை!
ஆரும் அரைகுறையா திரிஞ்சதும் இல்லை.
நடத்தை கெட்டு நிண்டதுமில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்....
றோட்டில ஆரும் பிச்சை எடுத்ததுமில்லை
காவல்த்துறை கைநீட்டி வாங்கினதுமில்லை!
வலுவிழந்த போராளிகள் கையேந்தியதில்லை
கண்கலங்கி கதியற்று நிண்டதுமில்லை
அப்பிடி நிக்க விட்டதுமில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்...
எவனும் தான் புலியெண்டு சொல்லித்திரிஞ்சதில்லை.
அப்பிடி சொன்னவங்களை
இயக்கத்தில வைச்சிருக்கவுமில்லை!
மாகாண சபை இருந்ததுமில்லை
பதவிக்காய் எவனும் அலைஞ்சதுமில்லை!

எங்கட பொடியள் இருக்குமட்டும்....
கள்ளமாடு இறைச்சிக்கடைக்கு வந்ததுமில்லை!
நாய் இறைச்சி அதுக்குள்ள கலந்து வித்ததுமில்லை!
எங்கட கோமணத்துக்குள்ள
எவனும் கைவிட்டதுமில்லை!
தொட்டவனின் கையை விட்டதும் இல்லை!

*– தமிழ்ப்பொடியன்*

முகநூல் Sabaratnam Vimaleshwara

## வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## கடலுக்கு அடியில் உணவகம்

மாலத்தீவில் உலகிலேயே முதன் முறையாக கடலுக்கு அடியில் சொகுசு உணவக விடுதி திறக்கப்பட உள்ளது. அங்குள்ள ரங்காளி என்ற தீவில் கடல் மட்டத்திலிருந்து 16.6 அடி ஆழத்தில் விடுதி அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு அடுக்குகள் கொண்ட



சொகுசு விடுதியை நியூசிலாந்தை சேர்ந்த நிறுவனம் வடிவமைத்துள்ளது. மேல் தளம் கடல் நீரில் வெளியே தெரிவது போல் 550 சதுர மீற்றர் அளவில் அறை அமைக்கப்பட்டுள்ளதால் காற்றை சுவாசிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. 180 பாகை கோணத்தில் கடலில் வாழும் உயிரினங்களை கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இரண்டு படுக்கை அறைகள், உடற்பயிற்சி கூடம், சமையல் அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. வரும் நவம்பர் மாதம் திறக்கபட உள்ள இந்த விடுதியில் தங்குவதற்கு 40 ஆயிரம் ஈரோ கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## மிதக்கும் நட்சத்திர விடுதி

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் பெயரை தாங்கிய பிரமாண்டமான சொகுசு கப்பலை கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் டுபாய் அரசு 100 மில்லியன் அமெரிக்கா டொலர்கள் கொடுத்து வாங்கி, அதனை மிதக்கும் விடுதியாக



மாற்றத் திட்டமிட்டது. ஆனால் பொருளாதார நெருக்கடி காரணமாக அத்திட்டம் அப்போது ஒத்திவைக்கப்பட்ட நிலையில் தற்போது பிரம்மாண்ட முறையில் நிறைவேற்றப்பட்டு, மினா ரஷீத் (Mina Rashid) துறைமுகத்தில் கப்பல் மிதக்கும் விடுதியாக மாற்றப்பட்டுள்ளது.

50 ஆண்டுகளுக்கு முன்னர் (1967) கட்டப்பட்டு 800 கடற்பயணங்களில் 25 இலட்சம் பயணிகளை சுமந்து சென்ற அந்த கப்பல் இப்போது, 1300 அறைகள், 13 உணவகங்கள், பார்கள், சூதாட்ட அரங்குகள், அருங்காட்சியகத்துடன் விடுதியாக உருமாறி நிற்கிறது. ஒக்டோபர் மாதம் திறக்கப்படவுள்ள இவ் விடுதியில், ஒரு நாள் தங்குவதற்கு 136 டொலர்கள் அறவிடப்படவுள்ளன.

# ஒப்பரேசன் டபிள் எட்ஜ்: 9

# மடையுடைக்கும் இரகசியங்கள்

கலாநிதி சேரமான்

'யார் அந்த மாறன்?'

'ஒரு மில்லியன் பவுண்களை கனடாவில் இருந்து உண்டியல் மூலம் பெற்றுக் கொண்ட மணி யார்?'

இந்த இரண்டு கேள்விகளுடனேயே 2009 வைகாசி மாதத்தின் இறுதி நாட்களையும், ஆனி மாதத்தின் முதல் இரண்டு வாரங்களையும் இலண்டன் வீதிகளில் கழித்த வாறு கே.பி, விநாயகம், நகுலன், ராம், தவேந்திரன் போன்றோரின் கையாட்கள் அலைந்து திரிந்த வண்ணம் இருந்தார்கள்.

இதில் மாறன் என்பவரை கோலாலம்பூரில் இருந்தவாறு கே.பியும், ஒஸ்லோவில் இருந்தவாறு அவரது வலது கையான சர்வே என்றழைக்கப்படும் தர்மலிங்கம் சர்வேந்திராவும் வலைவீசித் தேடியமைக்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. கே.பியின் தலைமைத்துவத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத்தின் பதில் பொறுப்பாளரான நெடியவன் அவர்கள் ஏற்க மறுத்த நிலையில், கே.பி–விநாயகம்போன்றோரின் ஆட்களுடனானநெடியவனின் தொடர்பாளராக மாறன் என்பவரே விளங்கினார். அனைத்துலகத் தொடர்பகத்தின் பரப்புரைப் பொறுப்பாளர் என்று தன்னைஅறிமுகம்செய்துகொண்ட மாறன், தன்னுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டோருடன் பிடி கொடுக்காமலேயே உரையாடினார். தான் யார் என்பதையும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தான் எப்பொழுது இணைந்து கொண்டார் என்பது பற்றிய தகவல்களைக் கூட அவர் சரியாகத் தெரிவிக்கவில்லை.



# குருடன் இருட்டில் கரும்பூனையைத் தேடிய கதையாக...



இதனால் அவர் ஒரு போராளியாக அல்லாது, வெளிநாட்டில் நீண்ட காலமாக வசிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளராக இருக்கலாம் என்ற ஐயமே விநாயகத்தின் ஆட்களுக்கு ஏற்பட்டிருந்தது. தவிர இலண்டனில் இவர் வசித்து வந்தாலும், இலண்டனில் இயங்கி வந்த விநாயகத்தின் ஆட்களுடன் தொலைபேசியில் உரையாடுவதைத் தவிர்த்து ஸ்கைப் இணைவலைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே அவர் உரையாடி வந்தார். இதனால் அவர் உண்மையில் எங்கு தங்கியிருக்கின்றார் என்ற குழப்பமும் விநாயகத்தின் ஆட்களுக்கு ஏற்பட்டிருந்தது. இதே குழப்பம் கே.பியின் ஆட்களிடையேயும் நிலவியது.

இவ்விடத்தில் தான் சர்வே அவர்களின் பாத்திரம் முக்கியத்துவம் பெற்றது. லெப்.கேணல் நாதன் அவர்களின் படுகொலையைத் தொடர்ந்து கே.பியால் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப் பொறுப்பாளராகவும், அனைத்துலக செயலக நிர்வாகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்ட சர்வே அவர்களுக்கு இலண்டனில் பணிபுரிந்த பெரும்பாலான தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களையும், ஆதரவாளர்களையும் நன்கு தெரியும்.

28.02.2001 அன்று பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கப்பட்ட பின்னரும் கூட நோர்வேயில் இருந்து அடிக்கடி இலண்டனுக்கு சென்று திரும்பியவர் சர்வே. எனினும் 11.09.2001 அன்று நியூயோர்க் இரட்டைக் கோபுரங்கள் மீது அல்கைடா பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலை அடுத்து இவரை பிரித்தானியாவிற்கு வர வேண்டாம் என்று பிரித்தானிய புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்திருந்தனர்.

ஆனாலும் இதன் பின்னர் 2003ஆம் ஆண்டு தை மாதம் இலண்டனில் தனது மனைவியின் உறவினர் ஒருவரின் மரண வீட்டிற்குச் செல்லும் சாக்கில் பிரித்தானியப் புலனாய்வுப் பிரிவினரின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு அயர்லாந்தின் டப்ளின் விமான நிலையம் ஊடாக இலண்டன் சென்று மீண்டும் அதே வழியில் ஒஸ்லோ திரும்பியவர் சர்வே. இது நடந்தது நிதி முறைகேட்டுக் குற்றச்சாட்டுக்களின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து சர்வே நீக்கப்படுவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னர். இவ்வாறு பிரித்தானியாவிற்கு அடிக்கடி சென்று வந்தவர் என்ற வகையில், தன்னால் எப்படியாவது மாறன் யார் என்பதை அடையாளம் காண முடியும் என்றநம்பிக்கை சர்வேஅவர்களுக்குஇருந்தது.

இதற்காக விநாயகத்தின் ஆட்களுக்கு சர்வே ஒரு யோசனை வழங்கினார்.

★★★★ ★★★★

கம்போடியாவில் இருந்து கோலாலம்பூர் நோக்கிப் பயணித்ததில் ஏற்பட்ட களை ஆறுவதற்காக தனக்கு ஒரு விடுதியை ஒழுங்குபடுத்தித் தருமாறு கே.பியிடம் கேட்டு, அது கைகூடாது கே.பியின் வீட்டிலேயே கைதி போன்று தான் தங்க வைக்கப்பட்டிருந்ததை அவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்தவரால் ஏற்க முடியவில்லை. தமிழீழத் தேசியத் தலைவரைத் தேடி மலேசியா வந்து கே.பியின் பிடியில் சிக்கிய கவலை இன்னொரு புறம். இதனால் அவர் அன்று இரவு முழுவதும் உறங்கவில்லை.

மறுநாள் காலையில் கூட அவரை அவரது அறையை விட்டு வெளியில் செல்வதற்கு கே.பியின் பாதுகாவலர்கள் அனுமதிக்காதது, தான் எப்படியான நிலையில்இருக்கிறேன்என்பதையேஅவருக்குஉணர்த்தியது.

ஒருவாறு நண்பகல் வேளை அண்மித்த பொழுது விருந்தினர் கூடத்திற்கு அவர் அழைக்கப்பட்ட பொழுது அங்கு கே.பி இருக்கவில்லை. இன்பமும், நடுத்தர உயரமுடைய, மெல்லிய ஒருவரும் அங்கு அமர்ந்திருந்தார்கள்.

அப்பொழுது இன்பம் பேசினார்:

"வாங்கோ... இவர் தான் சுகி. சுபன் என்றும் அழைப்போம். இயக்கத்தின் முதலாவது நீதிபதி. இவர் தான் கே.பி அண்ணையின்ரை நிர்வாக வேலைகளை கவனித்துக் கொண்டிருக்கிறார்."

★★★★ ★★★★

இலண்டனில் மணியை மட்டுமல்ல, சேகர் என்பவரையும் தமது வலைக்குள் கொண்டு வருவதற்கான பகீரத பிரயத்தனங்களில் விநாயகத்தின் ஆட்கள் ஈடுபட்டிருந்தமை பற்றி எமது ஏழாவது தொடரில் நாம் வெளிக்கொணர்ந்தமை வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம். இந் நடவடிக்கைக்குப் பொறுப்பாக திருஎன்றநபரேநியமிக்கப்பட்டிருந்தார்.

இதில் சேகர் என்றழைக்கப்படும் உருத்திராபதி சேகர் என்பவர் தளபதி கேணல் கிட்டு பிரித்தானியாவிற்கு வருவதற்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானிய கிளையின் ஒரு பிரிவிற்குப் பொறுப்பாக விளங்கியவர். நீண்ட காலமாக பிரித்தானியாவில் வசித்து வந்த அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு என்ற பெயரில் இயங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானிய கிளையின் ஒரு பிரிவிற்குப் பொறுப்பாக விளங்க, தமிழர் மறுமலர்ச்சிச் சங்கம் என்ற பெயரில் இயங்கிய அதே பிரித்தானிய கிளையின் இன்னொரு பிரிவிற்குப் பொறுப்பாக நாகேந்திரம் சீவரத்தினம் என்பவர் விளங்கினார். இவர்களில் சேகர் என்பவர் மாவீரர் குடும்ப உறுப்பினர். மற்றையவர் நைஜீரியாவில் ஆசிரியராகப் பணிபுரிந்த பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டிக் கொடுத்ததன் மூலம் இயக்கத்திற்கு அறிமுகமாகிய ஒருவர்.

இவர்கள் இருவருக்கும் இடையில் நீண்ட காலமாகவே அதிகாரப் போட்டி நிலவி வந்தது. சேகர் அவர்களின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு (பிரித்தானியா) இலண்டனில் ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்தால், அதற்குப் போட்டியாக அதன் எதிர்த்திசையில் இன்னொரு ஊர்வலத்தை சீவரத்தினம் அவர்கள் ஏற்பாடு செய்துவிடுவார்.

இவர்களின் அதிகாரப் போட்டி பிரித்தானியாவிற்கு தளபதி கேணல் கிட்டு சென்ற பின்னரே முடிவுக்கு வந்தது. அதுவும் சீவரத்தினத்தை இயக்க செயற்பாடுகளில் இருந்து நீக்கி விட்டு, தமிழர் மறுமலர்ச்சி சங்கத்தைத் தளபதி கிட்டு செயலிழக்க வைத்த பின்னரே அது முடிவுக்கு வந்தது.

இதேநேரத்தில் தளபதி கேணல் கிட்டுவின் வழிகாட்டலை ஏற்று செயற்பட்ட சேகரின் பெயரில் கிழக்கு இலண்டன் ஈஸ்ற்காம் பகுதியில் உள்ள கத்தரின் வீதியில் அமைந்திருக்கும் 211ஆம் எண்ணுடைய வீடு தமிழீழ விடுதலைப் புலிகளால் விலைக்கு வாங்கப்பட்டு, அது தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக செயலகத்தின் முகவரியாகப் பதியப்பட்டது.

பிரித்தானியாவை விட்டு கேணல் கிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட பொழுது, அவருடன் போலந்து சென்று சிறிது காலம் சேகர் தங்கியிருந்தார். அப்பொழுது ஒரு தடவை போலந்தில் நடைபெற்ற சிறுவர் மகிழ்வூட்டல் நிகழ்வொன்றிற்கு அவரை கேணல் கிட்டு அனுப்பியதும், அவர் கொடுத்த பணத்தில் அந்நிகழ்–விற்குச் சென்று தனது முழு நாளையும் கழித்து விட்டு வீடு திரும்பிய சேகரிடம் 'நிகழ்வு எப்படி இருந்தது?' என்று கேணல் கிட்டு கேட்டதும், 'நிகழ்வு நன்றாக இருந்தது...' என்று சேகர் பதில் கூறியதும், அங்கு என்னனென்ன இயந்திரங்களைப் பயன்படுத்தி சிறுவர்கள் மகிழ்வூட்டப்பட்டார்கள் என்று கேணல் கிட்டு குறுக்குக் கேள்வி கேட்ட பொழுது,

தொடர்ச்சி 12ம் பக்கம்

**ஒரு தடவை வன்னி சென்றிருந்த வேளையில் தளபதி சூசை அவர்களுடன் அவர் உரையாடிக் கொண்டிருந்த பொழுது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பற்றிய பேச்சு எழுந்த பொழுது 'அது ஒரு வெங்காய வேதாளம்' என்று தளபதி சூசை அவர்கள் நகைச்சுவையாகக் கூறியிருந்தார்.**

## 432 கைதிகள் விடுதலை

வெசாக் தினத்தை முன்னிட்டு 432 சிறைக்கைதிகளுக்கு விடுதலை வழங்கப்பட்டுள்ளது. மைத்திரிபால சிறீசேனவின் உத்தரவிற்கு அமைய சிறிய தவறுகள் தொடர்பில் சிறைபிடிக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்துள்ளதாக சிறைச்சாலை ஊடக பேச்சாளர் து'ார உபுல்தெனிய தெரிவித்தார். 432 சிறைக்கைதிகளுக்கு விடுதலை வழங்கப்பட்டபோதும், சித்திரைப் புத்தாண்டிற்கு விடுவிக்கப்படுவதாக மைத்திரிபாலவினால் உறுதி வழங்கப்பட்ட ஆனந்த சுதாகரன் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கையர்களின் பார்வை பாகிஸ்தானில்!

இலங்கை கண் தான சங்கம் 200 கண் விழித்திரைகளை பாகிஸ்தானுக்கு வழங்க முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் கண் விழித்திரை பொருத்த அவசியமானவர்க



ளுக்கு இலங்கையிலிருந்து வரும் கண் விழித்திரை உதவியாக இருக்கும் என ஹஸ்மனி வைத்தியர் மற்றும் நலன்புரி நிதியத்தின் விசேட வைத்திய நிபுணர் சரீப் ஹஸ்மனி தெரிவித்துள்ளார்.

## தங்க வேட்டை முடிந்து, ஆயுத வேட்டை!

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் தங்கங்களைத் தேடி புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு பெரும் செலுவுடன் ஒரு குண்டு மணித் தங்கத்தைக்கூட கண்டுபிடிக்காத சிறீலங்காப் படையினர் இப்போது புலிகளின் குண்டுகளைத் தேடும் புதையல் வேட்டையில் ஈடுபட்டுவருகின்றனர். தற்போது கிளிநொச்சி – அறிவியல்நகர் பகுதியில் புலிகளின் ஆயுதங்கள் காணப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அறிவியல்நகர் பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் காணப்படுவதாக ஏற்கெனவே அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் எவ்வித ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை. இந்நிலையில் தற்போது மீண்டும் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. கிடைக்கப்பெறும் இரகசியத் தகவல்களுக்கு அமைய இத்தேடுதல் வேட்டை இடம் பெறுவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த வாரம் வவுனியாவில் ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையினர் ஈடுபட்டனர். கூமாங்குளம், நூலக வீதியில் உள்ள சின்னம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ள தனியார் காணியில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கடற்படையினரின் கொழும்பு அலுவலகத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையேவே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது. அநுராதபுரம் பூனாவ கடற்படை முகாமைச் சேர்ந்தவர்களே தேடுதலில் ஈடுபட்டனர்.

அடையாளப்படுத்தப்பட்ட பகுதியில் சுமார் 10 அடி ஆழம்வரை அகழப்பட்டபோதும் எதுவும் கிடைக்கவில்லை.

# எங்கெங்கு பாதுகாப்பு வ
# அங்கெல்லாம் இராணுவம்

**முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 9ஆம் ஆண்டு நினைவேந்தல் நினைவுகளை சுமந்து நிற்கும் இந்த நாட்களில் முள்ளிவாய்க்கால் இறுதி நாள் வரை மக்களின் அவலங்களை சுமந்துசென்ற மருத்துவர்களின் பணி என்பதும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாதவை. அந்தவகையில் முள்ளிவாய்க்கால் இறுதி நாள்வரை அந்த மண்ணில் இருந்து பணிசெய்து, இன்றும் அந்த அவலங்களை சுமந்து புலம்பெயர்மண்ணில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மருத்துவர் நா.வண்ணன் அவர்கள் ஈழமுரசுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்.**

***முள்ளிவாய்க்கால் பேரவலத்திலிருந்து விடுபடாத நிலையில் உள்ள எம்மக்களுக்கு உங்களை அறிமுகம் செய்துவையுங்கள்...?***

நான் தாயகத்தின் முல்லைத்தீவை சொந்த இடமாகக்கொண்டவன். தாயகத்தில் வன்னிப் பகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் யுத்த காலங்களிலும் யுத்தமில்லாத காலங்களிலும் மருத்துவராகப் பணியாற்றியுள்ளேன். குறிப்பாகத் தமிழீழ சுகாதாரப் பிரிவினால் மருத்துவராகப் பயிற்றுவிக்கப்பட்ட ஒரு மருத்துவர் என்பதே எனது அடையாளம். தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையில் மருத்துவராகக் கடமையாற்றியதுடன், அரச மருத்துவமனைகளிலும் மருத்துவராகக் கடமையாற்றியுள்ளேன். நான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். போராட்ட சூழ்நிலை காரணமாக உந்தப்பட்டு, விடுதலை அமைப்பின்பால் பற்றுக்கொண்டு, போராட்டத்தின் பின்னால் சென்று, எனது குடும்பத்தின் சகோதரர்களின் தொடுசலாக என்னையும் இணைத்துக்கொண்டு, பிற்பகுதியில் மருத்துவக்கற்கையைக் கற்று, மருத்துவராக வெளியேறி எமது மக்களுக்கு சேவையாற்றினேன். அத்தோடு தமிழர் தாயகம் மீதும் தமிழ் மக்கள் மீதும் மிகுந்த பற்றுக்கொண்டவனாகவே இருந்துள்ளேன். இதற்கு ஒரு முக்கிய காரணத்தையும் குறிப்பிடவேண்டும்.

எனது சிறுபராயத்தில் 1995 ஆம் ஆண்டு யாழ்.இந்துக்கல்லூரியில் கற்றுக்கொண்டிருந்த காலம் யாழ் நவாலி சென்பீற்றர் தேவாலயத்தில் சிறிலங்காவின் புக்காரா விமானம் குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கொல்லப்பட்டு, கணிசமான மக்கள் படுகாயமடைந்த சம்பவத்தை என்னால் அறியக்கூடியதாக இருந்தது. அந்தக்காலத்தில், மாணவர் அமைப்பினூடாக வைத்தியசாலைகளில் காயமடைந்தவர்களைப் பராமரிக்கும் பணி இடம் பெற்றுக்கொண்டிருந்தது. எனக்கும் மாணவர் அமைப்பினூடாக யாழ்.போதனா வைத்தியசாலையில் காயமடைந்த மக்களை பராமரிக்கும் சந்தர்ப்பம் ஒருசில இரவுகள் கிடைத்தன. அந்த சம்பவத்தை எனது வாழ்நாளில் மறக்கமுடியாது என்றுதான் கூறவேண்டும். அதுதான் எனது வாழ்நாளில் அறிவு வந்த காலத்தில் முதன்முதலாகக் கண்ட படுகொலைச் சம்பவங்களாக, காயங்களாக இருந்துள்ளது.

அதற்கு முன்னர் இந்திய இராணுவத்தின் காலப் பகுதியில் எனக்கு 9, 10 வயது இருக்கும் என நினைக்கின்றேன். எமது ஊரான முல்லைத்தீவிலே இந்திய இராணுவமும் தேசவிரோத குழுக்களும் இணைந்து ஒருவரை எமது வீட்டிற்கு அருகில் வைத்துப் படுகொலை செய்தார்கள். அதன் பின்னர் இந்திய இராணுவம் எமது வீட்டை முற்றுகையிட்டு, எனது சகோதரர்களை எனது கண்முன்னே மிகமோசமாகத் தாக்கி சித்திரவதை செய்தார்கள். இச்சம்பவங்களும் எனது மனதில் ஆறாத வடுக்களாகப் பதிவாகியிருந்தது. இந்திய இராணுவத்தினால் தாக்கப்பட்ட எனது ஒரு சகோதரன், விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்துக்கொண்டு வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். (வீரவேங்கை பரணி – 07.07.1991 நெடுங்கேணிப்பகுதியில் வீரச்சாவு) மற்றொரு சகோதரர் இறுதியுத்தத்தில் காணாமல் போய்விட்டார்.

***நீங்கள் ஒரு மருத்துவராக உருவாகிய சந்தர்ப்பம் எப்படி உங்களுக்கு ஏற்பட்டது?***

நான் ஒரு மருத்துவராகவேண்டும் என்ற எண்ணமே எனக்கு இருக்கவில்லை. அதாவது நான் ஒரு மருத்துவராக உருவாகவேண்டும் என்ற கனவோடு பயணிக்கவில்லை. ஆரம்பகாலத்தில் தெரிவுசெய்யப்பட்ட முறையில் மருத்துவப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு, அங்கு களமருத்துவக் கற்கைநெறி, ஆரம்ப மருத்துவக் கற்கைநெறி என படிப்படியாக மருத்துவக் கற்கைகளைக்கற்று, பின்னர் ஒரு பொதுவைத்தியருக்குரிய கற்கைநெறியைப் பூர்த்திசெய்து, மக்களுக்கான ஒரு நிறைவான மருத்துவசேவையைச் செய்யக்கூடிய நிலைக்கு உருவாக்கப்பட்டேன். குறிப்பாக சொன்னால், மக்களிடையே இருக்கக்கூடிய நோய்களுக்கான சிகிச்சை முறைகள், அதற்கான மேற்சிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள், குழந்தை நோயியல் சம்பந்தமானது, மகப்பேறு சம்பந்தமான விடயங்கள் போன்றவற்றைக் கற்ற பின்னர், மக்களிடையே முழுமையாக சிகிச்சை செய்யக்கூடிய மருத்துவராக வெளியே வந்தேன். மருத்துவப்பிரிவில் இருந்த மேலதிக மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள் போன்றவர்களால் பயிற்றுவிக்கப்பட்டு, அதற்குரிய பொதுப் பரிட்சைகள் நிறைவுசெய்து, அதிலே போதுமான சித்திபெற்ற பின்னர்தான் வெளியில் சென்று பணியாற்றுவதற்கான அனுமதி இருக்கின்றது. தேவையைக் கருத்தில் கொண்டே எனது பணி ஆரம்பமானது.

நான் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவைப் பிரிவில் முதலாவது அணியில் வெளியேறியிருந்தேன்.

***தியாகதீபம் திலீபன் மருத்துவமனையின் உருவாக்கம் குறித்தும் அது எந்தளவிற்கு மாற்றத்தைக் கொண்டுவந்தது பற்றியும் குறிப்பிடுங்கள்...***

1996 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலத்தில் பாரிய ஒரு பொருளாதாரத் தடைக்கு உள்ளாகிய பிரதேசமே வன்னிப் பிரதேசமாகும். மருத்துவப் பொருட்கள், உணவுப்பொருட்கள், அத்தியாவசியப் பொருட்கள் அனைத்துமே தடையாகத்தான் இருந்தன. எரிபொருள், இலத்திரனியல் பொருட்கள் பற்றிசொல்லவேதேவையில்லை. அவை ஆரம்ப காலம் முதல் தடையாகவே இருந்துள்ளன. பொருளாதாரத் தடைக்குமத்தியிலும் போராடிக்கொண்டே விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள். அவர்கள் சார்பாகவே மக்கள் வாழ்கின்றபொழுது, அவர்களுக்காகவே செயற்படவேண்டும் என்ற எண்ணக்கரு தமிழீழத் தேசியத் தலைவரிடம் தன்னிச்சையாகவே எழுந்த ஒரு செயற்பாடு. அதாவது தன்னிச்சையான செயற்பாடாக தேசியத் தலைவரால் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை உருவாக்கம் பெற்றது. இதன்மூலம் அடிப்படை மருத்துவ வசதியற்ற இடங்களுக்கு போதுமான மருத்துவ வசதிகளைச் செய்து கொடுப்பதே இதன்நோக்கமாகும்.

ஒருநாடு முன்னேற்றமடையவேண்டும் என்றால், கர்ப்பிணிப் பெண்களின் மரணவீதம், சிசு மரணவீதம் போன்றவை கணக்கெடுக்கப்படும். அதுகளை மையமாக வைத்தும், வன்னிப் பிரதேசம் பாம்புத் தொல்லைகள் நிறைந்த பிரதேசம். அத்துடன் 1995, 1996 காலப்பகுதிகளில் மலேரியாத் தொற்று மக்களிடையே பரவலாகக் காணப்பட்டது. இதற்கு தமிழீழ சுகாதாரப் பிரிவினரும், அரச சுகாதாரப் பிரிவும் வன்னியில் மலேரியாத் தொற்றே இல்லை எனும் அளவிற்கு கொண்டுவந்தமையைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். டெங்கு தொற்று வன்னியில் எந்தப் பகுதிக்குள்ளும் பதிவாகவில்லை. தென்பகுதியில் கூட பாரிய தொற்றுநோய்கள் இருந்தன. ஆனால், அப்படியான தொற்றுநோய்களைக்கூட வன்னிப்பகுதிக்குள்வராமல் தடுத்து நிறுத்திய பெருமை தமிழீழ சுகாதாரப்பிரிவையும் ஏனைய மருத்துவ பிரிவுகளையும் சாரும். தொற்றுநோய்கள் வந்தபின்னர் அதனைத் தடுப்பதை விட வராமல் தடுப்பது இலகுவானது.

தியாகதீபம் திலீபன் மருத்துசேவையின் முதலாவது மருத்துவமனை ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதனை அப்போது தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளராக இருந்த சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும் தமிழீழ சுகாதாரசேவைக்கு பொறுப்பாக இருந்த வைத்தியர் சூரியகுமார் அவர்களும் மருத்துவமனைக் கட்டடத்தைத் திறந்துவைத்தார்கள். அதற்கு முன்னர் வன்னிப்பகுதியில் உள்ள பின்தங்கிய பகுதிகளை விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவிற்குட்பட்ட ஊரகவளர்ச்சிப் பிரிவின் உதவியுடன் இனங்காணப்பட்டு, நடமாடும் மருத்துவசேவையாக செய்துவந்திருக்கின்றோம். அப்படி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை மக்களிடையே தனது பணியைத் திறம்பட நடாத்திக்கொண்டிருந்த வேளையில்தான், கற்சிலைமடுப் பகுதியில் குறித்த முழுமையான மருத்துவமனை உருவாக்கம் பெற்றது. அதற்குப்பின்னர் நைனாமடு, பூநகரி, மாங்குளம், புளியங்குளம், மன்னார், வெற்றிலைக்கேணி, அளம்பில், நெடுந்தீவு, புங்குடுதீவு, திருகோணமலையில் பாட்டாளிபுரம், வாழைத்தோட்டம், மட்டக்களப்பில் கதிரவெளி, கொக்கட்டிச்சோலை, அம்பாறை உள்ளிட்ட அனைத்து தமிழீழ மாவட்டங்களிலும் 2002 இற்குப் பின்னரான சமாதான காலப்பகுதியில் தியாக தீபம் மருத்துவமனை உருவாக்கம் பெற்று சிறந்த மருத்துவ சேவையை மக்களுக்கு வழங்கியது. அதுமட்டுமல்லாமல் நடமாடும் மருத்துவ சேவைகளும் இருந்து–வந்துள்ளன. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அவர்களின் பெயரில், கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவை உருவாக்கம்பெற்று, அது மட்டக்களப்பு மற்றும் வன்னியின் பல பகுதிகளிலும் தனது சேவையை ஆற்றியது.

***வன்னிப்பகுதியில் உருவாக்கம்பெற்ற ஏனைய பிரிவுகளின் நிலை பற்றி...***

குறிப்பாக முதலில் ஊடகப்பிரிவைக் குறிப்பிட வேண்டும். ஊடகம் என்பது மிகவும் அவசியமானது. ஊடகமானது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இன்றியமையாததாக இருந்து வந்துள்ளது. தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் அதனை அறிந்து, உணர்ந்து சரியான முறையில் சரியான தகுதியை வழங்கி வளர்த்தெடுத்தவர். ஊடகம் இல்லையென்றால் இன்றுவரை எமது பிரச்சினையைக் கதைப்பதற்கு ஆட்கள் இல்லை என்றே சொல்லலாம். ஒரு பக்கக் கட்டுரையை வாசிப்பதைவிட ஒரு படம் அந்தச் செய்தியைச் சொல்லிவிடும். அதாவது ஒரு படம் சொல்லும் விடயத்தை எப்படிக் கத்திச்சொன்னாலும் எடுபடப்போவதில்லை. அப்படியான விடயங்களை வெளியில் கொண்டுவந்தது ஊடகத்தைச் சேர்ந்தவர்கள்தான். வன்னிக்குள் இருந்த ஈழநாதம், புலிகளின் குரல், தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி இவற்றுடன் இருந்து இயங்கிய ஊடகவியலாளர்கள், இறுதிக்காலத்தில், அதாவது முள்ளிவாய்க்கால் வேளையில், அவர்கள் செய்தியுடன் நிற்காமல், ஒரு காயப்பட்டவரைத் தூக்கிக்கொண்டுவந்து அவருக்கு சிகிச்சை கொடுக்கும் வரை, அதற்கான படத்தை எடுத்து வெளி உலகிற்கு கொண்டு வந்துள்ளார்கள். உதாரணத்திற்கு ஒரு செய்தியாளரைக் குறிப்பிட வேண்டும். ஆர்.பி.ஜி.செல் ஒரு பெண்ணின் காலிற்குள் புகுந்து வெடிக்காமல் நிற்கின்றது. ஒரு பெண் செய்தியாளர், அந்தப் படத்தை எடுத்துக்கொண்டு அந்தக் காயப்பட்டவரை மாத்தளன் மருத்துவமனையில் சேர்க்கின்றார். அந்த செல் காலில் புகுந்து வெடிக்கும் நிலையில்தான் நிற்கின்றது. அது ஓர் அபாயகரமான நிலைமை. அது வெடித்தால் இன்னும் உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய சம்பவம். அந்த நேரத்தில் வைத்தியர் கதிர்ச்செல்வன் மருத்துவமனையில் நிற்கின்றார். ஒரு மருத்தவருக்கு இராணுவ ரீதியிலான முன்னறிவு இருக்காது என்பதே உண்மை. பொதுவாக சிந்தித்தால் ஆர்.பி.ஜி. என்பது பெரிய போர் ஆயுதம். அந்த செல்லை குறித்த வைத்தியரும் மருத்துவப் பணியாளர் ஒருவரும் சேர்ந்து



# லயம் அறிவிக்கப்பட்டதோ தாக்குதல் மேற்கொண்டது!



சந்திப்பு
கந்தரதன்

இரண்டாகக் கழற்றுகின்றனர். அதில் ஒருபக்கக் கால் பாதுகாக்கப்பட, மற்றைய கால் செல்லுடன் சேர்த்து வெட்டி அகற்றப்படுகின்றது. இதில் நேரடியாக சிகிச்சை வரை ஒரு செய்தியாளர் பங்குபற்றியிருக்கின்றார். இதனால்தான் இச்செய்தி வெளியில் வந்திருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பங்களில் கணிசமான ஊடகவியலாளர்கள் பங்குபற்றியிருக்கின்றனர். ஒரு செய்தியாளர், காயமடைந்தவரை தானே நேரடியாக வைத்தியசாலைக்கு கொண்டுவந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளது. இதில் ஈழநாதம், புலிகளின் குரல் இரண்டினது பணிகளும் குறிப்பிடத்தக்கது. இடம் பெயர்ந்து இடம்பெயர்ந்து குறித்த செய்திகளை வெளியுலகிற்கு கொண்டுசேர்க்கவேண்டும் என்பதில் இவர்களின் பணி குறிப்பிடத்தக்கது.

புலிகளின் குரல் பண்பலையில் ஒலிபரப்ப வேண்டும் என்றால், குறிப்பிட்டளவு உயரத்தில் அதன் ஒலிபரப்பு கம்பம் இருக்கவேண்டும். இருந்தாலும் இராணுவத்தினர் குறிப்பிட்ட தூரத்தில் இருந்த போதும், புலிகளின் குரல் தனது செய்தி வீச்சைப் பரப்பிக்கொண்டிருந்தது. புலிகளின் குரல் 2009 மே 15 இரவு வரை ஒலித்துக்கொண்டிருந்தது. அத்தோடு தனது சேவையை அது நிறுத்திக்கொண்டது. ஈழநாதமும் அவ்வாறேதான் இறுதிவரை வெளியாகிக்கொண்டிருந்தது. ஊடகவியலாளர்களின் பணி குறிப்பிடப்படவேண்டியது. செய்தியை வெளியுலகிற்குகொண்டுவருவதற்காக எத்தனையோ செய்தியாளர்கள் சாவடைந்துள்ளனர்.

**இன்றுவரை இறந்தவர்களின் எண்ணிக்கை சரியாகக் கணக்கிடப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். எஞ்சியவர்கள் காயமடைந்தவர்களையும் விட்டுவிட்டுத்தான் ஓடினார்கள். பின்னர் வந்து பார்த்தபோது சிதறி சின்னாபின்னமாகிக் கிடந்தார்கள். அவர்களைக் கணக்கெடுக்க முடியாமல் கூட்டிக் குவித்து எரித்தும், வெட்டித்தாட்டுவிட்டுத்தான் செல்லமுடிந்தது. அடையாளம் காணப்படாமலே அத்தனைபேரின் மரணமும் இடம்பெற்றது.**

காயமடைந்துமுள்ளனர். இவர்களில் சத்தியமூர்த்தி போன்ற பல ஊடகவியலாளர்கள் சாவடைந்து நாட்டுப்பற்றாளராக மதிப்பளிப்பு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, விடுதலைப் புலிகளின் பெரிய பிரிவுகளைக் குறிப்பிடவில்லை. ஏனைய சில பிரிவுகளைக் குறிப்பிடுகின்றேன். மூதாளர் பேணலகம், சிறுவர் இல்லங்கள், காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கும் இடமான நவம் அறிவுக்கூடம், முள்ளந்தண்டு பாதிப்புக்குள்ளான போராளிகளைப் பராமரிக்கும் இடமான சிறி மருத்துவ முகாம், முள்ளந்தண்டு பாதிப்புக்குள்ளான பெண் போராளிகளைப் பராமரிகும் இடமான மயூரி மருத்துவ இல்லம், பெண்கள் புனர்வாழ்வகத்தின் கீழ் இயங்கிய வெற்றிமனையையும் குறிப்பிடவேண்டும். அதாவது மனநலம் பாதிக்கப்பட்டு உறவினரால் கைவிடப்பட்டு நோய்வாய்ப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கு தகுந்த உளவள சிகிச்சை அளித்து பேணி இயல்புநிலைக்கு கொண்டுவருவதே வெற்றிமனையின் இலக்காகும். பின்னர் இவர்கள் தமது ஆற்றுகைகளை வெளிக்காட்டிய சிறப்புக்களும் நிகழ்ந்துள்ளன. தனிப்பட்டவர்களின் வாழ்வில் வெற்றியைக்கொண்டுவந்த மனை. அப்படிப்பட்டவர்களை பாதுகாப்பாக காயமடையாமல் கொண்டுசெல்லவேண்டிய தேவை அந்தந்தப் பிரிவு சார்ந்தவர்களிடத்தில் இருந்தது. மூதாளர் பேணலகங்கள் கூட அவர்களை இறுதிவரை பாதுகாத்து காயமடையாமல் கொண்டுவந்து, இயலாதவர்களை கப்பலில் அனுப்பிவைக்கும் பணியும் இடம்பெற்றிருந்தது. காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை என்பன மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து கடைசிவரை பயணித்துள்ளனர். அவர்களின் தற்போதைய நிலை தெரியவில்லை.

தமிழீழக் காவல்துறையினரின் பங்கையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும். காயமடைந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் வரும்போது, அதை ஒழுங்குபடுத்தவேண்டிய நிலை, தேவை இருந்தது. அதற்கு ஆளணிப் பற்றாக்குறை இருந்தது. காயமடைந்தவரைக் கொண்டுவரும் உறவினருக்கு மனவலி இருக்கும் தாங்கமுடியாத உணர்வு இருக்கும். அதைவிட அவர் ஏற்றுக்கொள்ளமுடியாத மனநிலைக்குள் இருப்பார். அப்படியானவர் ஒரு வாகனத்தில் காயமடைந்த தனது குடும்ப உறுப்பினரை கொண்டுவரும்போது, அவரைத் தடுத்து நிறுத்த முடியாது. அவர் எதுவரை மருத்துவமனைக்குள் காயமடைந்தவரைக் கொண்டுவரமுடியுமோ அதுவரை கொண்டுவருவார். அந்த ஒழுங்கு முறையை தமிழீழக் காவல்துறையினர் திறம்பட செய்துள்ளனர். இந்த சந்தர்ப்பங்களில் பல காவல் துறையினர் வீரச்சாவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

செல் விழுந்து வெடித்த இடத்தில் கூட தமிழீழ காவல்துறையினர் சீருடையுடன் நின்று வேலை செய்வதை படங்களில் பார்த்திருப்பீர்கள். முள்ளிவாய்க்கால் பாடசாலையின் முன்பகுதியில் செல் வீழ்ந்து வெடிக்கின்றது. அங்கு இயங்கிக்கொண்டிருந்த மருத்துவமனை உடனடியாக மாற்றப்பட்டு பாடசாலையின் பின்பக்கத்திற்கு மாற்றப்படுகின்றது. அந்த இடத்தில் காவல்துறையினர் சீருடையுடன் பணியாற்றுவதைக் காணக்கூடியதாக இருந்தது. மருத்துவமனைகளை உடனடியாக இடம்மாற்றுவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியது காவல் துறையினரே.

**இறுதியுத்த காலத்தில் நீங்கள் பெற்ற மருத்துவ அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்...**

மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது என்று சொன்னால், அதாவது கடைசி யுத்தத்தின் ஆரம்ப நாட்கள், கடைசி யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது கிழக்கு மாகாணத்தில் என்றே சொல்லலாம். கிழக்கு மாகாணத்திற்கு முன்னதாக சில சம்வங்கள் இடம்பெற்றிருந்தாலும், யுத்தம் என்று ஆரம்பிக்கப்பட்டது கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் தான். மூதூர், மாவிலாறு பகுதிகளில் இடம்பெற்ற சண்டைகளின் தொடர்ச்சிதான் முள்ளிவாய்க்கால். அந்தச் சண்டை ஆரம்பித்த காலப்பகுதியில் நான் கிழக்கு மாகாணத்தில் மருத்துவமனைகளில் மருத்துவராகக் கடமையாற்றியிருக்கின்றேன். பாட்டாளிபுரம் என்ற பகுதியில் மருத்துவராகக் கடமையாற்றிய போது, யுத்தம் ஆரம்பித்துவிட்டது. அதற்கு முன்னரே விமானத்தாக்குதலில் காயமடைந்த பலர் எமது மருத்துவமனைக்கு வந்திருக்கின்றார்கள். தொடர்ந்து மாவிலாறு, மூதூர் பகுதிகளில் வேறு வேறு திசைகளில் சண்டை நடைபெற்றுக்கொண்டிருந்தது. மாவிலாறை நிறுத்திவிட்டு மூதூர் பகுதியினால் இராணுவம் முன்னேறி வருகின்றது. அப்போது சில பகுதிகளை பாதுகாப்பு வலயமாக அறிவித்து, மக்களை அங்கே போகுமாறு இராணுவம் குறிப்பிடுகின்றது. அந்தவகையில் பாட்டாளிபுரத்தை பாதுகாப்புவலயமாக அறிவித்து, சம்பூர், கூனித்தீவு, கட்டைபறிச்சான் போன்ற இடங்களில் இருந்த மக்கள் அங்கு கூட்டம் கூட்டமாகச் செல்கின்றனர். பாதுகாப்புவலயமாக அறிவித்த பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலை மேற்கொள்கின்றனர். அதிலே பெரும் எண்ணிக்கையான மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். இது கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைக்குப் பின் இடம்பெற்ற மக்கள் படுகொலையாகும். பின்னர் இராணும் ஒவ்வொரு இடமாகப் பிடித்துக்கொண்டு வருகின்றது. பின்னர் கதிரவெளிப் பிரதேசத்தில் பாடசாலையை மையப்படுத்திய பகுதியை பாதுகாப்பு வலயமாக இராணுவம் அறிவிக்கின்றது. கதிரவெளி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உட்பட்டது. திருகோணமலை வெருகல் ஆற்றைத்தாண்டினால் மட்டக்களப்பு ஆரம்பிக்கிறது. அதற்குள் பெரும் எண்ணிக்கையான மக்கள் சேர்ந்துவிட்டார்கள். அந்தப்பகுதி மக்கள் அதைவிட கூனித்தீவு, சம்பூர், கட்டைப்பறிச்சான், பாட்டாளிபுரம், முகத்துவாரம், இலக்கந்தை போன்ற சின்ன சின்ன கிராமங்கள் நிறைய இருக்கின்றன. குறித்த பிரதேச மக்கள் நெரிசலாக கதிரவெளிப் பகுதியில் இருந்தபோது, ஒரு பிரதேசத்தை அழிப்பதற்கான தாக்குதல் முறையாகத் திட்டமிட்டு குறிப்பிட்ட ஒரு சதுரப் பரப்பை மையப்படுத்தி இயலுமானவரை செல்வீச்சு, விமானத் தாக்குதல் என குறித்த பாதுகாப்பு வலயப்பகுதியை மையப்படுத்தி நடாத்தப்படுகின்றது. அதாவது பல்குழல் பீரங்கி, ஆட்லறி எல்லாவற்றையும் ஒரு நிலைப்படுத்தி அரைமணிநேரத்திற்கு மேலாக சுமார் 600 முதல் 700 வரை செல்களை கொட்டுகின்றது. ஒரே நேரத்தில் அந்தப் பிரதேசம் வெடித்துச் சிதறுகின்றது. அங்கு காயமடைந்தவர்களை மீட்கமுடியாது, காயமடைந்தவர்கள் எழுந்து செல்லமுடியாமல் பெரும் எண்ணிக்கையானவர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். உண்மையிலேயே இன்றுவரை இறந்தவர்களின் எண்ணிக்கை சரியாகக் கணக்கிடப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். எஞ்சியவர்கள் காயமடைந்தவர்களையும் விட்டுவிட்டுத்தான் ஓடினார்கள். பின்னர் வந்து பார்த்தபோது சிதறி சின்னாபின்னமாகிக் கிடந்தார்கள். அவர்களைக் கணக்கெடுக்க முடியாமல் கூட்டிக் குவித்து எரித்தும், வெட்டித்தாட்டுவிட்டுத்தான் செல்லமுடிந்தது. அடையாளம் காணப்படாமலே அத்தனைபேரின் மரணமும் இடம்பெற்றது. அந்த ஒரு நாள் மட்டும் 600 பேருக்கு மேற்பட்டவர்கள் பாரிய காயமடைந்த நிலையில் எமது மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டனர். சின்னச் சின்னகாயக்காரர்கள் எவரும் வரவில்லை. எமது மருத்துவமனையும் இதே பகுதியில்தான் இருந்தது. இந்தக்காலப் பகுதியில் நாங்கள் செயற்படும்போது, வைத்தியர் வரதராஜா அவர்கள், ஈச்சிலம்பற்று மருத்துவமனையைப் பொறுப்பெடுத்து இயங்கிக் கொண்டிருந்தார். அதற்குத் தாக்குதல் நடாத்தப்பட பின்னர் வாகரை மருத்துவமனைக்குச் சென்றார்கள். வாகரை மருத்துவமனைக்கு நாங்கள் காயமடைந்தவர்களைக் கொண்டு சென்றோம். அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன், படகுமூலம் காயமடைந்தவர்களை வாழைச்சேனைக்கு அனுப்பிவைத்தோம். தொடர்ச்சியாக அங்கும் பல சம்பவங்களை சந்தித்தோம். அதேபோல பாற்சேனைப் பிரதேசமும் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு மக்கள் ஒன்றுகூடிய பின்னர் உச்சத்தாக்குதல் இடம்பெற்றது. அதிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கொல்லப்பட்டுப் படகாயமடைந்தனர்.

எங்கெங்கு பாதுகாப்புவலயம் அறிவிக்கப்பட்டதோ அங்கெல்லாம் இராணுவம் தாக்குதல் நடாத்தியது. எங்கெங்கு வைத்தியசாலைகள் இருந்ததோ அங்கெல்லாம் இராணுவம் தாக்குதல் நடாத்தியது. அதுதான் முள்ளிவாய்க்கால் வரை நடைபெற்ற உண்மை.

*(மேலும் பல அனுபவங்களுடன் அடுத்த இதழிலும் தொடரும்)*

# ஒப்ரேசன் டமிள் எட்ஜ்...

அதற்குப் பதிலளிக்க முடியாது சேகர் திணறியதும் வேறு கதை.

உண்மையில் சேகர் அவர்களை சிறுவர் மகிழ்வூட்டல் நிகழ்விற்குக் கேணல் கிட்டு அனுப்பியதன் நோக்கம் அங்கு பயன்படுத்தப்பட்ட சிறுவர் மகிழ்வூட்டல் இயந்திரங்களை அவதானித்து, அவற்றைப் படம் பிடித்து வருவதற்காகத் தான். கேணல் கிட்டுவின் நோக்கம் இவ்வாறான இயந்திரங்களைத் தமிழீழத்திற்கும் தருவித்து, அங்கு சிறுவர்களுக்கான பூங்காக்களை உருவாக்குவதாகும். இதனைப் புரிந்து கொள்ளாத சேகர், ஏதோ தன்னைப் பொழுது போக்கிற்காக கேணல் கிட்டு அனுப்பி வைத்துள்ளார் என்று எண்ணிச் சென்றதுதான் வேடிக்கையானது.

இது இவ்விதமிருக்க சேகர் அவர்களின் பெயரில் ஏறத்தாழ நாற்பதுனாயிரம் பவுண்கள் விலையில் 1990ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் வாங்கிய வீடு, 2009ஆம் ஆண்டு வைகாசி–ஆனி மாதங்களில் ஐந்து இலட்சம் பவுண்கள் பெறுமதியை எட்டியிருந்தது. கட்டிடத்திற்கான அடமானமும் முழுமையாக செலுத்தப்பட்ட நிலையில், அது பிரித்தானியாவில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பெறுமதி வாய்ந்த அசையாத சொத்து என்றே கூறலாம். அந்தக் கட்டிடத்தை எப்படியாவது சேகரிடம் இருந்து எடுத்து விட்டால் ஐந்து இலட்சம் பவுண்கள் சுளையாகக் கிடைக்கும் என்பதே விநாயகம் அவர்களின் எண்ணமாக இருந்தது. இந்த ஐந்து இலட்சம் பவுண்கள் பணத்தையும், கனடாவில் இருந்து மணி என்பவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஒரு மில்லியன் பவுண்கள் பணத்தையும் கையகப்படுத்தும் பொறுப்பு திரு என்பவருக்கே வழங்கப்பட்டிருந்தது. கொழும்பில் ஏதோ ஒரு பெரிய தாக்குதலை நடத்துவதற்கான நிதியைப் பெறுவதற்கே சேகரையும், மணியையும் தான் தேடுவதாகத் தனக்கு நெருக்கமானவர்களிடம் திரு என்பவர் கூறியிருந்தாலும், வெளிநாடுகளில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களைக் கையகப்படுத்தும் கோத்தபாய ராஜபக்சவின் மூலோபாயத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கே இதனை திரு என்பவர் ஊடாக விநாயகம் முன்னெடுத்தார் என்பது வெள்ளிடைமலை. ஏனென்றால் எவ்வளவுக்கு எவ்வளவு கோத்தபாய ராஜபக்ச கேட்பதைத் தான் செய்கின்றாரோ, அவ்வளவு விரைவாகத் தனது மனைவி – பிள்ளைகளை கோத்தபாய விடுதலை செய்வார் என்பதே விநாயகத்தின் நப்பாசையாகும்.

★★★★ ★★★★

சர்வே கொடுத்த யோசனைப்படி மாறனை அடையாளம் காண்பதற்கான ஏற்பாடுகளில் விநாயகத்தின் ஆட்கள் வேகமாக இறங்கினார்கள். இதன்படி ஸ்கைப் இணைவலை ஊடாக விநாயகத்தின் ஆட்களுக்கு நெருக்கமான ஒருவருடன் மாறன் உரையாடிய பொழுது அவரது குரல் ஒலிப்பதிவு செய்யப்பட்டு அதன் பிரதிகள் சர்வே அவர்களுக்கும், கே.பியின் இன்னொரு கரமான இன்பத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இதில் மாறன் என்பவர் யார் என்பதை இன்பம் அவர்களால் ஊகிக்க முடியவில்லை. 1997ஆம் ஆண்டு இலண்டனுக்கு ஒரு தடவை வந்திருந்த பொழுது அந்தக் குரலை செவிமடுத்தது போன்ற நினைவு இன்பம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தாலும், அவர் யாராக இருப்பார் என்பதைக் கிரகித்துக் கொள்வதென்பது இன்பம் அவர்களுக்கு கடினமாக இருந்தது.

ஆனால் ஒஸ்லோவில் இருந்த சர்வேயோ, அலாவுதீன் புதையலைத் தோண்டியெடுத்த மகிழ்ச்சியில் இருந்தது போல் காணப்பட்டார். மாறன் என்ற பெயரில் விநாயகத்தின் ஆட்களுடன் உரையாடியவர் தனக்குத் தெரிந்த, தனக்கு விசுவாசமான ஒரு செயற்பாட்டாளர் என்பதும், தான் சொன்னால் அதனை ஏற்று நடக்கக்கூடியவர் என்றும் சர்வே கருதினார்.

★★★★ ★★★★

ஆசனத்தில் இருந்து எழுந்து தனக்குக் கைலாகு கொடுக்க நடந்து வந்தவரை நேருக்கு நேர் பார்த்த பொழுது குபீர் என்று சிரிக்க வேண்டும் போன்று அவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்தவருக்கு இருந்தது.

ஒரு தடவை வன்னி சென்றிருந்த வேளையில் தளபதி சூசை அவர்களுடன் அவர் உரையாடிக் கொண்டிருந்த பொழுது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பற்றிய பேச்சு எழுந்த பொழுது 'அது ஒரு வெங்காய வேதாளம்' என்று தளபதி சூசை அவர்கள் நகைச்சுவையாகக் கூறியிருந்தார். அப்பொழுது அவுஸ்திரேலியாவில் வந்திருந்தவர் வெங்காய வேதாளம் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தார். அந்தக் கற்பனையில் தோன்றிய ஒரு உருவம் தன் முன்னால் சுகி என்ற பெயரில் நின்ற பொழுது, அவுஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்தவருக்கு சிரிப்பை அடக்குவது கடினமாகவே இருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதிபதி, அதுவும் முதலாவது நீதிபதி, என்று கூறப்படுபவர் கம்பீரமாக, அஜானபாகு தோற்றத்தில் இருப்பார் என்று நினைத்திருந்தவருக்கு தன் முன்னே நின்றவரைப் பார்த்த பொழுது கோமாளித்தனமாகவே இருந்தது. ஏற்கனவே சாறமும், கறுப்புக் கண்ணாடியும் அணிந்து தன்னை முதல் நாள் சந்தித்த கே.பியை விட மிகவும் கோமாளித்தனமாகவே சுகி என்பவரின் தோற்றம் இருந்தது.

★★★★ ★★★★

மாறன் என்பவர் தனக்குத் தெரிந்த செயற்பாட்டாளர் என்ற அசையாத நம்பிக்கையிலும், அவர் தனது சொல்லுக்குக் கீழ்படிந்து நெடியவனுக்கு எதிராகத் திரும்புவார் என்ற நப்பாசையிலும் இலண்டனில் இருந்த தனது இரண்டு நண்பர்களுடன் தொடர்பு கொண்ட சர்வே, குறித்த செயற்பாட்டாளரை எப்படியாவது தன்னுடன் தொலைபேசி மூலம் உரையாட வைக்குமாறு கேட்டுக் கொண்டார். இவ்வாறு சர்வே அவர்கள் தொடர்பு கொண்ட நண்பர்களில் ஒருவர் கூறிய தகவல் சர்வே அவர்களுக்கு இரட்டிப்பான நம்பிக்கையூட்டுவதாக இருந்தது. அந்தத் தகவல் இதுதான்.

இலண்டனில் இருந்த தனது நண்பருடன் சர்வே தொடர்பு கொள்வதற்கு சில நாட்களுக்கு முன்னர் அவரது வீட்டிற்கு வந்திருந்த அந்தச் செயற்பாட்டாளர், தன்னை ஒரு பரப்புரைச் செயற்பாட்டாளர் என்றே அறிமுகம் செய்து கொண்டார். விநாயகத்தின் ஆட்களுடன் உரையாடிய நெடியவனின் தொடர்பாளரான மாறன் அவர்களும் தன்னை அனைத்துலகத் தொடர்பகப் பரப்புரைப் பொறுப்பாளராக அறிமுகம் செய்து கொண்டதால், இரண்டு பேரும் ஒரே ஆட்களாக இருப்பார்கள் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது என்பதே சர்வே அவர்களின் கருத்தாக இருந்தது. இதேநேரத்தில் மாறனை எப்படிக் கையாள்வது என்பதும், அவரைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது சாத்தியமாகாது போனால், அல்லது அவரை நெடியவனிடம் இருந்து பிரித்தெடுப்பது முயற்கொம்பாகினால், மாறனை எப்படி செயலிழக்க வைப்பது என்ற திட்டமும் சர்வேயிடம் இருந்தது.

அந்தத் திட்டத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் பொறுப்பு கோலாலம்பூரில் கே.பியுடன் தங்கியிருந்த இன்பம் அவர்களுக்கே வழங்கப்பட்டிருந்தது.

ஏற்கனவே அம்புறூஸ் என்பவரைப் பயன்படுத்தி நெடியவன் பற்றியும், அவரது மனைவி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பற்றியும் அவதூறான செய்திகளையும், அவர்களுக்கு சேறு பூசும் வகையிலான சோடிக்கப்பட்ட நிழற்படங்களையும் வெளியிட்டு வந்த கே.பி–விநாயகம் அணியினர், தமது சேறுபூசும் படலத்தின் இன்னொரு அங்கமாகச் சிங்கள ஊடகங்களில் ஆங்கிலத்தில் கற்பனைப் புலனாய்வுப் பத்திகளை எழுதுபவரான கனடாவில் வசிக்கும் டி.பி.எஸ்.ஜெயராஜ் என்பவரை அணுகியிருந்தனர். இவரை அணுகும் பொறுப்பு இன்பம் அவர்களுக்கே வழங்கப்பட்டிருந்தது.

இதில் வேடிக்கை என்னவென்றால் 1997ஆம் ஆண்டு கே.பியின் பணிப்பின் பேரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டுவதற்காக இன்பம் இலண்டன் சென்றிருந்த பொழுது, அவர் யார் என்பதை அடையாளம் கண்டு, அது பற்றி த சண்டே லீடர் எனப்படும் ஆங்கில மொழியிலான சிங்கள ஊடகத்தில் கட்டுரை ஒன்றை எழுதி, அவரை அம்பலப்படுத்தி, அதன் மூலம் பிரித்தானிய புலனாய்வுப் பிரிவினருக்கு அவர் பற்றித் தகவல் வழங்கி, அவரை நாட்டை விட்டு வெளியேற்றிய சிறீலங்கா தூதரகத்தின் நடவடிக்கைக்குத் துணைபோனவர் டி.பி.எஸ்.ஜெயராஜ்.

இப்பொழுது தமக்கு எதிரானவர்கள் மீது அவதூறு பரப்புவதற்கும், அவர்களை செயலிழக்க வைப்பதற்கும் டி.பி.எஸ்.ஜெயராஜின் உதவியை இன்பம் நாடியிருந்தது ஒரு வரலாற்று நகைமுரண் என்றே கூற வேண்டும்.

இது இவ்விதம் இருக்க, மாறனை அடையாளம் கண்டு, அவரை நெடியவனிடம் இருந்து பிரித்து செயலிழக்க வைப்பதற்கான முயற்சியில் ஒரு புறம் சர்வே இறங்கியிருக்க, மறுபுறத்தில் மணி என்பவரை அடையாளம் கண்டு அவரிடம் இருந்து ஒரு மில்லியன் பவுண்களைக் கையகப்படுத்துவதற்கான பகீரத பிரயத்தனங்களில் இலண்டனில் இருந்த விநாயகத்தின் கையாட்கள் இறங்கியிருந்தார்கள். குருடன் இருட்டில் கரும்பூனையைத் தேடிய கதையாகவே ஒரு புறம் மாறனையும், மறுபுறம் மணியையும் இவர்களை தேடிக் கொண்டிருந்த சம்பவம் அமைந்திருந்தது.

ஏனென்றால் மாறனும், மணியும் ஒரே ஆட்கள் தான் என்பதையும், அதேநேரத்தில் மாறன் என்று தாம் இனம்கண்டு கொண்ட செயற்பாட்டாளர் மாறன் அல்ல என்பதையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

**(மடையுடைப்புத் தொடரும்)**



## செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** இலங்கை பிரிபடுவதை இந்தியா விரும்பவில்லை என தினக்குரலுக்கு வரதராஜப்பெருமாள் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** அப்ப போராளிகளை இந்திரா காந்தி அம்மையார் எதற்காக வளர்த்தாராம்..?

★★★★ ★★★★

**செய்தி:-** சமாதானத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் சிவில் சமூகம் அரசாங்கத்துடன் எவ்வாறு இணைந்து செயற்பட முடியும் என்பதற்கான சிறந்த உதாரணமாக சிறீலங்கா விளங்குகின்றது என ஐ.நா. பொதுச்சபையின் அதிகாரி மிரோஸ்லாவ் லஜ்கக் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** புகழ்வதிலேயே உங்கள் காலம் போய்விடுமோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** இந்த அரசாங்கம் எங்களை தொடர்ந்து ஏமாற்றினால் சர்வதேசத்துடன் இணைந்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டி வரும் என யாழ். நெல்லியடி மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** முயல் பிடிக்கிற நாயை மூஞ்சையிலை தெரிஞ்சு கொள்ளலாம், உங்களை எப்படித் தெரிஞ்சு கொள்ளுறதாம்..?

★★★★ ★★★★

**செய்தி:-** இலங்கை முஸ்லிம்களுக்கு வருடாந்தம் நன்கொடையாக வழங்கப்படும் பேரீச்சம்பழத்தை தாமதியாது உரிய காலத்தில் வழங்குமாறு சவூதி அரேபியா அரசாங்கத்திடம் சிறீலங்கா கோரியுள்ளது.

**எழும் கேள்வி:-** நன்கொடையை கேட்டு வாங்குகிற ஒரே நாடு சிறீலங்காவாகத்தான் இருக்குமோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஊற்றுப்புலம் ஒடுக்குப் பாலம் 90 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

**எழும் கேள்வி:-** 90 மில்லியனில் பாலம்! தங்கத்தால் கட்டியிருப்பார்களோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** நான் கண் மூடுவதற்குள் தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும் என நடிகர் ரஜினிகாந்த் தனது நடிப்பில் வெளியாகும் 'காலா' படத்தின் இசைவெளியீட்டு விழாவில் பேசும் போது தெரிவித்தார்.



**எழும் கேள்வி:-** கண்ணை மூடினால் தான் கனவில் இணைக்க முடியும் என்பது ரஜனிக்குத் தெரியாதோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** இலங்கை பயனாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக 'வைபர்' தகவல் தொடர்பாடல் செயலி சிறீலங்காவிற்கு உறுதிமொழி வழங்கியுள்ளது.

எழும்கேள்வி:- இதனை நாங்கள் நம்பவேண்டுமா..?

★★★★ ★★★★

**செய்தி:-** நாட்டின் பிரச்சினைகளைக் கொண்டு சென்று ஜெனீவாவில் பேச தான் விரும்பவில்லை என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** அப்ப எங்கு பேசுறதாக உத்தேசமாம்..?

★★★★ ★★★★

**செய்தி:-** வடக்கு, கிழக்கு மாகாணங்களில், புதிதாக பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்படுவதைத் தடைசெய்ய வேண்டுமென தான் கூறவில்லையெனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இவ்வாறு தான் தெரிவித்த கருத்தை ஊடகங்கள் சில திரிபுபடுத்தி வெளியிட்டதன் மூலம், பௌத்த மக்களைக் கோபப்படுத்திப் பார்ப்பதற்கு முயன்றுள்ளன என்றும் குற்றஞ்சாட்டினார்.

**எழும் கேள்வி:-** பௌத்த மக்களைக் கோபப்படுத்திவிடக் கூடாதென்பதில்தான் சுமந்திரன் பொறுப்போடு இருக்கின்றாரோ..?

ஒரு கதை

## சுட்டது சிகரெட் அல்ல...

ஒரு போக்குவரத்து சமிக்ஞையில் ஒரு ஊனமுற்ற சிறுமி நின்று கொண்டிருந்தாள். அங்கு ஒரு கார் வந்து நின்றது. அந்த சிறுமி சிறிது நேரம் அந்த காரில் உள்ள நபரை உற்று பார்த்துக்கொண்டிருந்தாள். பின்னர் அந்த காருக்கு அருகில் சென்று கதவை தட்டினாள். ஜன்னலின் கண்ணாடி திறக்கப்பட்டது. அங்கு புகை பிடித்தபடி ஒரு நபர் அமர்ந்திருந்தார். கிழிந்த ஆடைகளுடன் கையில் தடியுடன் இருந்த சிறுமியை பார்த்து


"என்னமா காசு வேணுமா?" என்று கேட்டார். சிறுமியிடம் இருந்து பதில் வரவில்லை. அந்த சிறுமி காரில் இருந்த அனைவரையும் சுற்றி சுற்றி பார்த்தாள். காருக்குள் ஒரு கைக்குழந்தையுடன் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். "இந்தா பொண்ணு உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டார். "எனக்கு எதுவும் வேணாம் அய்யா.. உங்க பசங்களுக்கு நீங்க எல்லாத்தையும் கொடுக்கணும்னு ஆசைப் படுறீங்களா அய்யா?" என்று கேட்டாள். "ஆமா... ஏம்மா இப்படி கேக்குற?" என்று கேட்டார். "உங்க பசங்களுக்கு எல்லாத்தையும் கொடுங்க ஆனா என்ன மாதிரி அவளுக்கும் வறுமையை கொடுத்துறாதீங்க அய்யா. இன்னைக்கு நீங்க என்ன பிச்சைக் காரின்னு நினைச்சமாரி நாளைக்கு உங்க மகளை யாரும் நினைத்து விடக் கூடாது இந்த புகை பிடிக்கும் பழக்கத்தை இன்றோடு விட்டுத்தள்ளுங்கள் அய்யா. உங்களைப் போன்ற ஒரு அப்பா எனக்கு இருந்ததால் தான் நான் இன்று உங்கள் முன் நிற்கிறேன் ஒரு அனாதையாய் ஒரு பிச்சைக்காரியை போல். இந்த நிலை உங்கள் மகளுக்கும் வர வேண்டுமா?" என்று கேட்டாள் அந்த சிறு பெண். சட்டென்று சிகரட்டை கிழே போட்டார். "என்ன அய்யா, சிகரட் சுட்டுருச்சா?" என்று அந்த சிறுமி கேட்க.. "இல்ல அம்மா நீ சொன்ன வார்த்தைகள் தான் என்னை சுட்டு விட்டது" என்றார்.



ஒரு விதை

## இந்த மாவீரர்களை இழந்து 30 ஆண்டுகள்...

மட்டக்களப்பு ஆலையடிவேம்பில் இந்தியப் படையினருடன் இணைந்து இனப்படுகொலையில் ஈடுபட்டுவந்த தமிழினத் துரோகக் குழுக்களுடன் இடம்பெற்ற மோதலின்போது அக்கரைப்பற்றைச் சொந்த இடமாகக் கொண்ட இவ்விரு போராளிகளும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.





**லெப்.மைக்கேல்**
ஜோசப்பிள்ளை தியாகராசா
10.01.1964 - 04.05.1988

**லெப்.சுரேஸ்**
குழந்தைவேல் தவராசா
02.05.1968 - 04.05.1988

ஒரு குறள்

அறத்துப்பால் – அடக்கமுடைமை



பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந்
தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

எந்தெந்த வழிகளில் ஆராய்ந்தாலும் வாழ்க்கையில் ஒழுக்கமே சிறந்த துணை என்பதால், எத்தகைய துன்பத்தை ஏற்றாவது அதைக் காக்க வேண்டும்.

ஒரு மருத்துவம்

## விதைகளின் மருத்துவ குணாங்கள்

காய்கறி மற்றும் பழங்கள் மட்டுமல்ல அதன் விதைகளும் உடலுக்கு மிகவும் ஆரோக்கியமானவை. அத்தகைய காய்கறி மற்றும் பழங்களின் விதைகளால், நமது உடலில் ஏற்படும் பல நோய்களைத் தடுக்கலாம். எனவே இனிமேல் காய்கறி மற்றும் பழங்களை சாப்பிடும் போது, அதன் விதைகளையும் கண்டிப்பாக சாப்பிடுங்கள்.

**குடைமிளகாய் விதைகள்**



தற்போது பல வகையான குடை மிளகாய் வந்துள்ளது. ஆனால் அதில் பெல் பெப்பர் என்னும் குடை மிளகாயில் தான் அதிகமான சத்துக்கள் நிறைந்துள்ளன. அதிலும் இதனை சமைத்து சாப்பிட்டால் மிகவும் சுவையானதாக இருக்கும். ஆனால் பெரும்பாலும்நிறைய பேர் குடைமிளகாயை சமைக்கும் போது, அதிலுள்ள விதையை தூக்கிப் போட்டுவிட்டு, அதன் சதையை மட்டும் தான் சமைப்பார்கள். இனிமேல் அவ்வாறு செய்ய வேண்டாம். ஏனெனில் அதன் விதையில் விட்டமின் ஏ, சி, கே இருக்கிறது. அதனால் உடலில் இரத்த ஓட்டம் சீராக இருப்பதோடு, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து, எளிதில் வயதான தோற்றத்தை தருவதையும் தடுக்கும். ஏனெனில் அந்த விதையில் வயதான தோற்றத்தை தடுக்கும் லைகோபைன் என்னும் பொருள் உள்ளது. ஆகவே இதை சாப்பிட்டால் இளமையோடு காட்சியளிக்கலாம்.

ஒரு தகவல்

## பாலைவனத்தில் 5 ஆயிரம் ஆண்டுகளாக குடிநீர் வழங்கும் கிணறு !

சம்சம் கிணறு (Zamzam Well,) அல்லது சம் சம் ஊற்று என்பது சவுதி அரேபியாவின் மக்காவில் உள்ள ஹராம் பள்ளிவாசலில் உள்ள கிணற்றைக் குறிக்கும். இசுலாமிய நம்பிக்கையின்படி இப்ராகிம் நபியின் புதல்வர் இசுமாயில் நபி தாகத்தினால் அழும்போது இக்கிணறு உருவானதாகக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஹஜ் மற்றும் உம்றாவின் போது முஸ்லிம்கள் இக்கிணற்றிலிருந்து தண்ணீர் அருந்துகின்றனர். கி.மு 2000 ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் இப்ராஹீம் (நபி) அவர்கள் தனது மனைவி ஹாஜரையும் மகன் பாலகன் இஸ்மாயிலையும் (நபி) சவூதி அரேபிய பாலைவனத்தில் விட்டுவிட்டு சென்றார்.



அந்த பாலைவனத்தில் தாகத்தினால் குழந்தை இஸ்மாயில் கதறி அழத்தொடங்கினார், தண்ணீரை தேடி தாய் ஸபா, மர்வா ஆகிய மலைகளுக்கு மேலே ஏழு முறை மாறி மாறி ஏறி தண்ணீரை தேடினார். அப்போது அந்த இடத்தில் வானவர் ஜிப்ரீல் வந்து இறைவனின் கட்டளைப் படி தனது காலால் மண்ணில் அடித்தார் உடனே ஒரு ஊற்று பீரிட்டுஎழுந்தது. அதைக் கண்ட அந்த தாய் ஓடிச் சென்று அந்த ஊற்றை அணைகட்டி 'சம் சம்' என்று கூறினார். அதன் பொருள் 'நில் நில்'. தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பொன்மொழி

**இல்லற வாழ்க்கையை வெற்றிகரமானதாக்க இருவர் தேவை. தோல்வியாக்க ஒருவர் போதும்!**
- ஸெர்வாண்டீஸ்

ஒரு பழமொழி


**கல்யாணவீட்டு வேலை, சும்மா சுற்றித் திரிந்தாலே நல்ல பெயர்.**

ஒரு வரலாறு

## பின் வாங்காத காந்தி

அண்ணல் காந்தியடிகளும் ஜவஹர்லால் நேருவும் ஒருசமயம் பாத யாத்திரை செய்து கொண்டிருந்தனர். வழியில் ஒரு பெரிய பள்ளம் இருப்பதைப் பார்த்த நேரு, சிறிது தூரம் பின்னோக்கிச் சென்று வேகமாக ஓடிவந்து பள்ளத்தைத் தாண்டினார். காந்தியடிகளோ ஒரு நீளமான மரப் பலகையைப் போட்டு அதன் மீது ஏறி அந்தப் பள்ளத்தைக் கடந்தார்.

இதைப் பார்த்த நேரு, என்னைப்போலவே இந்தப் பள்ளத்தை நீங்களும் தாண்டி இருக்கலாமே என்று அண்ணலிடம் கூறினார். இந்தப் பள்ளத்தைத் தாண்ட எவ்வளவு தூரம் நீங்கள் பின்னால் சென்று ஓடி வந்தீர்கள் தெரியுமா? அப்படி நான் பின் வாங்க விரும்பவில்லை. இருந்த இடத்திலிருந்தே முன்னேற விரும்புகிறேன் என்று சிரித்துக் கொண்டே கூறினார்.



– சான்றோர் வாழ்வில் சிரிப்பு சம்பவங்கள் என்ற நூலிலிருந்து

ஒரு பழமொழியும் விளக்கமும்

## மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.

நோயுள்ள ஒருவன் அதை தீர்க்கும் பொருட்டு உட்கொள்ளப்படும் வலி நிவாரணிகளுக்குதான் மருந்தென்று பெயர். அந்த மருந்தாக இருந்தாலும் விருந்தினருக்கு கொடுத்து உண் என்ற தவறான பொருளைத்தான் இப்பழமொழியை மேலோட்டமாக பார்ப்பவர்களுக்குத் தோன்றும். அப்படியில்லாமல் மருந்து சாப்பிட்டாலும் விருந்து சாப்பிட்டப் பிறகு சாப்பிடு என்றும் பொருள் எடுத்துக்கொள்ளலாம்.



ஆனால் இவ்விரு பொருளுமே பொருந்தாது. அழுதாலும் பிள்ளை தான்தான் பெறவேண்டும் என்பது போல், ஒருவர் நோயுற்றிருக்கும் போது அந்நோய் தீர அவர்தான் மருந்து சாப்பிட வேண்டும். அப்படி இருக்க மருந்தை எப்படி விருந்தினருடன் பகிர்ந்து சாப்பிட முடியும்? அத்துடன் நோயுற்றிருக்கும் போது பத்திய சாப்பாடும், எளிதில் செமிபாடு அடையக்கூடிய உணவாகப் பார்த்து தான் உண்ணவேண்டும். பலவகை காய்கறிகள், எண்ணெய் பதார்த்தங்கள், இனிப்புப் பண்டங்கள் எல்லாம் கலந்ததுதான் விருந்து சாப்பாடு. அந்த விருந்துணவு உடல் நிலை சரியில்லாத காலங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல.

ஆக மருந்துக்கு என்ன பொருள்? மருந்து என்றால் அமுதம் என்று பொருள். அமுதம் உயர்வகை சாப்பாட்டை குறிக்கும். அப்படி யாருக்கும் எளிதில் கிடைக்க முடியாத உயர்வகை அமுதமாக இருந்தாலும் அதை பிறர்க்கும் கொடுத்து உண் என்பதுதான் இப்பழமொழியின் கருத்தாகும்.

## ராஜீவ் கொலையில் தொட...

அவரிடத்தில் கார்த்திகேயன் விசாரணை நடத்தியிருக்க வேண்டுமல்லவா? ஆனால் அதனை கடைசி வரையில் செய்யவில்லையே. மேலும் ரங்கநாத்திடம் சித்திரவதை வாக்குமூலத்தினை பெற்றுக் கொண்டாலும் சந்திரசாமியிடத்தில் விசாரணை செய்யவில்லையே. அவ்வாறான நிலையில் விடுதலைப் புலிகள் மீது எவ்வாறு குற்றச்சாட்டுக்களை சுமத்தமுடியும்?

தலைவர் உயிருடன் இருக்கின்றார்

விடுதலைப் புலிகளின் தலைவர் உயிருடன் இருக்கின்றார். அதில் எனக்கு மாற்றுக்கருத்தில்லை. சரி, அவர் உயிருடன் இல்லை. புலிகளை




முழுமையாக அழித்து விட்டோம் என்றால் சிங்கள இராணுவத்துக்கு ஒரு இலட்சம் பேரை எதற்காக தற்போது இணைக்கின்றார்கள். அவர்களுக்கு இந்தியாவில் எதற்கு பயிற்சி அளிக்கின்றார்கள். அதற்கான அவசியம் என்ன? வடக்கில் எதற்காக இலட்சக்கணக்கான இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது. போராளிகள் இருந்தால் இராணுவம் இருக்க வேண்டும் என்பதில் நியாயம் உள்ளது. அப்பாவி மக்கள் இருக்கின்றபோது அங்கு எதற்காக இராணுவம் இருக்க வேண்டும்? பொதுமக்களை பார்த்து அச்சப்பட வேண்டிய அவசியம் என்ன?

இதுவொருவிடயம், பிரபாகரன் உயிரிழந்து விட்டதாக உடலொன்றை காண்பித்தார்கள். உண்மையில் அவருடைய உடலாக இருந்திருந்தால் ராஜபக்ச அரசாங்கம் அதனை கொழும்பிற்கு கொண்டு வந்து சர்வதேச ஊடகங்களுக்கு காண்பித்திருப்பாரா இல்லையா? அதனை ஏன் செய்யவில்லை. அதற்கு அடுத்ததாக மரபணுப்பரிசோதனை(டி.என்.ஏ) சோதனை செய்தாக கூறினார்கள். பிரபாகரன் இறந்த தருணத்தில் அவருடைய பெற்றோர்கள் வல்வெட்டித்துறையில் தான் இருந்தார்கள். அப்படியென்றால் அவர்களுடைய இரத்தமாதிரி பெறப்பட்டு சோதனை மேற்கொண்டிருக்க வேண்டுமல்லவா?

ராஜீவ் உடலத்தினை அடையாளப்படுத்திய வைத்தியநிபுணர் சந்திரசேகரனிடத்தில் இவ்விடயம் சம்பந்தமாக கேட்போது, டி.என்.ஏ.சோதனை நடத்தும் வசதியே இலங்கையில் இல்லை என்றும் அவ்வாறான சோதனைகள் சென்னையில் தான் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியாக கூறுகின்றார். இதனை விட ராஜபக்ச காண்பித்த உடல் பிரபாகரனின் உடல் அல்ல என்பதற்கு வேறு என்ன ஆதராம் தேவையாகவுள்ளது.

சர்வதேச சூழல்கள் மாறவேண்டியுள்ளது

பங்களாதேஷ் விவகாரம் சம்பந்தமாக வாஜ்பாய் இந்திராகாந்தியின் வீட்டை முற்றுகையிட்டபோதும் அவர் அமைதியாகவே இருந்தார். இரண்டு வருடமாக அப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அப்போராட்டம் வெற்றிபெற்றதற்கு அந்நாட்டு மக்கள் அமைப்புக்கள் இந்தியாவின் உதவி ஆகியன மட்டும் காரணமல்ல. சர்வதேசத்தில் மாற்றம் ஏற்றபட்டது. அக்காலத்தில் அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் சீனாவுக்கு விஜயம் செய்தார். இதனையடுத்து சோவியத் பிரதமர் இந்தியா வந்தார் ஒபந்தங்களைச் செய்தார்.

குறிப்பாக இந்தியாவை எந்தநாடு தாக்கினாலும் சோவியத்து துணையாக வரும் என்ற இராணுவ ஒப்பந்தம் முக்கியமானது. இதுவே இந்தியாவின் முதலாவது இராணுவ ஒப்பந்தமாகும். இதனையடுத்தே இந்திய படைகள் அங்கு சென்றன. நிக்சனின் சீன விஜயம் வரலாற்றினையே மாற்றியது.

அதுபோன்று வியட்நாம் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அமெரிக்க தேர்தலில் ஜோர்ஜ் கெனடி வெற்றி பெற்றமையால் படைகளை வாபஸ் வாங்கினால் இதனால் அப்போராட்டம் பெற்ற பெற்றது. ஆகவே சர்வதேச சூழல்கள் விடுதலைப்போராட்டங்களில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே சர்வதேச சூழல் மாற்றத்துக்கு அமைவாக பிரபாகரனின் பிரசன்னமும் இருக்கலாம்.

# தமிழ்ப் பெண் உட்பட 4 பெண்களுடன் பாலியல்

## அமெரிக்க சட்டமா அதிபர் பதவி விலகல்

அமெரிக்க நியூயோர்க் பிராந்திய சட்டமா அதிபர் (அட்டார்னி ஜெனரல் அல்லது அரசு தலைமை வழக்கறிஞர்) எரிக் ஸ்னெய்டர்மான் (Eric Schneiderman) இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ்ப் பெண்ணொருவர் உட்பட 4 பெண்கள் அவருக்கு எதிராக பாலியல் மற்றும் தாக்குதல் குற்றச்சாட்டை முன்வைத்ததையடுத்து பதவி விலகியுள்ளார்.

இலங்கை கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளரும் நடிகையும் தயாரிப்பாளருமான தான்யா செல்வரட்ணம், அமெரிக்க திரைப்படத் தயாரிப்பாளரும் இயக்குநருமான மிசெல்லி மான்னிங் பாரிஷ் மற்றும் எரிக் ஸ்னெய்டர்மானின் முன்னாள் காதலி ஒருவர், முன்னணி சட்டத்தரணியொருவர் ஆகியோரே மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்துள்ள 4 பெண்களுமாவர். இதில் 2 பெண்கள், அவர் குடிபோதையில் தங்கள் மீது பாலியல் ரீதியில் தாக்குதல் நடத்தியதாகவும் கூறியுள்ளனர். அவர்களில் இருவர் எரிக்



கின் முன்னாள் காதலிகள் என நியூயோர்க்கர் சஞ்சிகை தெரிவிக்கிறது.

தான்யா செல்வரட்ணம் 2016 மற்றும் 2017ம் ஆண்டு காலப்பகுதியில் எரிக் உடன் தொடர்பில் இருந்துள்ளார். தான்யா மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் தெரிவிக்கையில், எரிக் தன்னைப் பின் தொடர்ந்து தனது தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக் கேட்கப்போவதாக எச்சரித்திருந்ததாகவும் தான் அவருடனான உறவை முறித்துக்கொள்ளும் பட்சத்தில் தன்னைக் கொல்லப்போவதாக அச்சுறுத்தல் விடுத்திருந்ததாகவும் கூறினார்.

எரிக் தன்னை ‘பழுப்பு நிற அடிமை’ என அழைத்ததாகவும் சில சமயங்களில் அவர் தன்னை ‘எஜமானர்’ என அழைக்க தனக்கு வற்புறுத்தியதாகவும் தான் அவ்வாறு அழைக்கும் வரை அவர் தன்னை அடித்ததாகவும் தான்யா தெரிவித்துள்ளார்.

அதேசமயம் மிசெலி மான்னிங் பாரிஷ் கூறுகையில், தான் எரிக்குடன் சம்பந்தப்பட்டிருந்த நான்கு வாரங்களுக்குப் பின்னர் தாம் இருவரும் முழுமையாக ஆடை அணிந்த நிலையில் படுக்கைக்குத் தயாரான போது திடீரென எரிக் தனது முகத்தில் முழுப் பலத்தைப் பிரயோகித்து அடித்ததாகவும் பின்னர் அவர் தன்னைக் கீழே தள்ளி மூச்சுத் திணறச் செய்ததாகவும் தெரிவித்தார். இது பாலியல் ரீதியான நடிப்பு அல்ல. இது தவறான, கீழ்த்தரமான, அச்சுறுத்தும் நடத்தை. இந்தத் தாக்குதல் எனது ஒப்புதலின்றி இடம்பெற்றது. உத்தியோகத்தர் ஒருவரை இவ்வாறு அடிப்பது பெரும் குற்றம் என்று அவர் மேலும் கூறினார்.

எரிக்கிற்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைத்த அவரது முன்னாள் காதலி தெரிவிக்கையில், எரிக் தன் மீது உடலியல் ரீதியான வன்முறைகளை திரும்பத் திரும்ப மேற்கொண்டதாகக் கூறினார்.

அதேசமயம் நான்காவது பெண்ணான முன்னணி சட்டத்தரணி கூறுகையில், எரிக்கின் பாலியல் ரீதியான அணுகுமுறைகளுக்கு தான் மறுப்பைத் தெரிவித்ததையடுத்து அவர் தன்னை பலத்தைப் பிரயோகித்து அடித்ததாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்நிலையில் தன்மீது எழுந்து உள்ள பாலியல் குற்றச்சாட்டுகளை எரிக் ஸ்னெய்டர்மான் திட்டவட்டமாக மறுத்துள்ளார். அதில் அவர், என் மீது தீவிரமான குற்றச்சாட்டுகள் எழுந்து உள்ளன. எனக்கு எதிராக கூறப்பட்டுள்ள அந்த குற்றச்சாட்டுகளை நான் மறுக்கிறேன். இந்த குற்றச்சாட்டுகள் என் பணி நடத்தையுடன் தொடர்பு இல்லாதது, இருப்பினும் என்னை பணி செய்வதில் இருந்து இந்த நெருக்கடியான நேரத்தில் தடுக்கின்றனர். எனவே நான் பதவி விலகுகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நான் யார் மீதும் பாலியல் ரீதியில் தாக்குதல் தொடுத்தது கிடையாது. சம்மதம் இல்லாமல் யாருடனும் உடலுறவு வைத்துக்கொண்டதும்




இல்லை என்றும் கூறியுள்ளார். தனக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு எதிராக கடுமையாகப் போராடப்போவதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

2010ம் ஆண்டு சட்டமா அதிபராக தெரிவுசெய்யப்பட்டிருந்த எரிக், இந்த வருடம் மீளவும் மேற்படி பதவி நிலைக்கு மீளப் போட்டியிடத் திட்டமிட்டிருந்தார். எரிக்கிற்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டுக்களையடுத்து அவரைப் பதவி விலகுவதற்கு நியூயோர்க் ஆளுநர் அன்ட்றூ குவோமா அழைப்பு விடுத்திருந்தார்.



நியூயோர்க்கின் உயர்மட்ட சட்ட அதிகாரி உட்பட எவரும் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்லர். அதனால் எரிக் ஸ்னெய்டர்மான் சட்டமா அதிபராக சேவையைத் தொடருவது சாத்தியம் என நான் நம்பவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணையை மேற்கொள்ள ஒரு விசாரணையாளரை தான் கோரவுள்ளதாக அன்ட்றூ குவோமா கூறினார். இந்நிலையில் எரிக் ஸ்னெய்டர்மான் முன்னாள் மனைவியான ஜெனிபர் கன்னிங் ஹாம் கடந்த வெளியிட்டுள்ள அறிக்கையில், எனக்கு எரிக்கை ஒரு கணவராக, தந்தையாக, நண்பராக சுமார் 35 வருட காலமாகத் தெரியும். அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை என்னால் நம்ப முடியாதுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்ய ஏவுகணைக் கொள்வனவில் இந்தியாவுக்குத் தடை விதித்தால் பாதிப்பு அமெரிக்காவிற்காம்!

ரஷ்யாவிடம் இருந்து எஸ்–400 வகை ஏவுகணை வழிமறிப்புச் சுமைதளங்கள் (S-400 triumf air defence missile system) ஐந்தை, மொத்தம் 3 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பில் இந்தியா வாங்குவதற்கான இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறன. எதிரிநாடுகளிடம் இருந்து வரும் இரகசிய போர் விமானங்கள், உளவு விமானங்கள், ஏவுகணை போன்றவற்றை வானிலேயே இடைமறித்து தாக்கி அழிக்கக் கூடிய எஸ்.400– டிரையம்ப் வழிமறிப்பு ஏவுகணைகளை வாங்குவதற்கு ரஷ்யாவுடன் 2016 முதல் இந்தியா பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்றது. இதற்கான சில உடன்படிக்கைளும் எட்டப்பட்டுள்ளன. விலை நிர்ணயம் உள்ளிட்ட சில விடயங்கள் குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படாமல் உள்ளது. தற்போது இதற்கான இறுதிக்கட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று, இறுதி ஒப்பந்தம் விரைவில் செய்யப்படவுள்ளது.

வரும் ஒக்டோபர் மாதம் இந்தியா – ரஷ்யா இடையேயான ஆண்டு மாநாடு இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் மோடியும், ரஷ்ய அதிபர் புட்டினும் சந்தித்துப் பேச இருக்கின்றனர். இந்த சந்திப்புக்கு முன்பே இந்த ஏவுகணை ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



நவீன தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட இந்த சுமைதளத்தில் 3 வகையான ஏவுகணைகள் உண்டு. ஒரே சமயத்தில் 36 நிலைகளை நோக்கி இதிலிருந்து தாக்குதல் நடத்த முடியும். எதிரிநாட்டு விமானங்கள், ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை 400 கிலோ மீற்றர் தொலைவுக்கு அப்பால் சென்று வழிமறித்து தாக்கி அழிக்கும் வல்லமை இவற்றுக்கு உண்டு.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா இவ் எஸ்.400– டிரையம்ப் வழிமறிப்பு ஏவுகணைகளை வாங்குவதை அமெரிக்கா உன்னிப்பாக கவனித்து வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிகளையும் ஆராய்ந்து வந்தது. ஆனால், தற்போது ரஷ்யாவிடம் இருந்து எஸ்–400 என்ற ஏவுகணை சுமைதளத்தை இந்தியா வாங்குவது உறுதியாகிவிட்ட நிலையில், அதற்காக இந்தியா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா முற்பட்டுள்ளது. அவ்வாறான தடைகளை விதிக்க அமெரிக்கச் சட்டத்தில் இடமுண்டு.

பாதுகாப்புத் துறையின் அதிமுக்கிய விடயங்களில் ரஷ்யாவுடன் வர்த்தகம் மேற்கொள்ளும் பிற நாடுகளுக்கு, அமெரிக்க பாதுகாப்பு உபகரணங்களை

தொடர்ச்சி 22ம் பக்கம்

## கொழும்பு சென்ற ரஷ்ய போர்க் கப்பலும் மத்தள, ஜின்னாவில் தரையிறங்கிய விமானத்தின் மர்மமும்!

ரஷ்ய கடற்படையின் பயிற்சிக் கப்பலான Perekop நல்லெண்ணப் பயணமாக கொழும்பு துறைமுகத்தில் கடந்த மாதம் ஐந்து நாட்கள் தரித்துநின்றுவிட்டுத் திரும்பியுள்ளது. ஏப்ரல் 18ம் திகதி வந்த இந்தக் கப்பல் ஐந்து நாட்கள் கொழும்பில் தரித்து நின்றுவிட்டு கடந்த 22ம் திகதி புறப்பட்டுச் சென்றது. 138 மீற்றர் நீளமும், 17 மீற்றர் அகலமும் கொண்ட



Perekop கப்பல், 6900 தொன் நிறை கொண்டது. 399 கடற்படையினர் இதில் பணியாற்றுகின்றனர். ரஷ்யக் கடற்படையின் போல்டிக் படையணிக்கு சொந்தமான இந்தக் கப்பல் 1977ம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. ரஷ்யாவின் கடற்படை வீரர்கள் கடலில் பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக இந்தக் கப்பல் பயன்படுத்தப்படுகின்றது. நவீன ரேடார் கட்டமைப்பு, நவீன திசை காட்டிகள், தற்பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் ஆழமான கடலை கண்காணிக்கும் அதி நவீன வசதிகளையும் இக் கப்பல் கொண்டுள்ளது. பயிற்சிக் கப்பல் என்றபோதும் இந்த கப்பலுக்கு 16,000 வலுகொண்ட இரண்டு டீசல் இயந்திரங்கள் மூலம் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது. இக் கப்பல் 76 மில்லி மீற்றர் ரக நான்கு பீரங்கிகளையும் விமானங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள முடியுமான 30 மில்லி மீற்றர் ரக இரண்டு பீரங்கிகளையும் நீர்மூழ்கிக் கப்பல்களை தாக்கி அழிக்கும் ஆயுதக் கட்டமைப்பையும் கொண்டது. இந்தக் கப்பலின் வருகை நட்பு ரீதியானது எனவும், ரஷ்யக் கடற்படையினர் சிறீலங்கா கடற்படையினருடன் பல்வேறு விளையாட்டு, கலாசார பயிற்சி நிகழ்வுகளில் பங்கேற்றனர் என்று கூறப்பட்டுள்ளபோதும், இந்தக் கப்பலின் வருகை குறித்து பல்வேறு சந்தேகங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

ஏனெனில், இக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற அதே காலப்பகுதியில்தான் அதாவது ஏப்ரல் 18ம் திகதிதான் உலகின் மிகப்பெரியது, ஆறு இயந்திரங்கள் கொண்டதுமான ரஷ்யாவின் அன்டனோவ் ஏ.என்.225 ரக விமானம் மத்தள பன்னாட்டு வானூர்தி



நிலையத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது. இந்த வானூர்தி 2 இலட்சம் மெற்றிக் தொன் பொருட்கள் ஏற்றிச் செல்ல கூடியது. எரிபொருள் நிரப்பல் மற்றும் பணியாளர்களின் தேவை காரணமாக வானூர்தி தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மலேசியா கோலாலாம்பூரில் இருந்து பொருட்ளை ஏற்றிச் சென்ற வானூர்தியே இவ்வாறு இடையில் சிறீலங்காவில் தரையிறக்கப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையத்தில் மூன்று நாட்கள் தரித்து நின்றுவிட்டு, 20ம் திகதி புறப்பட்டு சென்ற இந்த விமானம், பாகிஸ்தானின் கராச்சியிலும் பின்னர் தரையிறக்கப்பட்டுள்ளது. இந்த விமானம் தரையிறங்கியது தொடர்பாக பாகிஸ்தான் ஊடகம் ஒன்று சந்தேகம் வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

## புட்டின் பதவியேற்பு

ரஷ்யாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், தற்போதைய அதிபர் விளாடுமீர் புட்டின் இதுவரை இல்லாத அதிக வாக்கு விகிதத்தில் வெற்றி பெற்றார். இதன் மூலம், ஏற்கெனவே 20ற்கும் மேற்பட்ட ஆண்டுகளாக ரஷ்யாவை ஆண்டு வரும் புட்டினின் தலைமைப் பதவி, மேலும் 6 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, கடந்த மார்ச் மாதம் நடந்த அதிபர் தேர்தலில் புட்டின் 75 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். இந்நிலையில், அவர் முறைப்படி கடந்த 7ம் திகதி 4வது முறையாக ர"?யாவின் அதிபராக பதவியேற்றுக்கொண்டார். அதிபர் புட்டினின் பதவி ஏற்பு விழாவில், சுமார் 5,000க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

4வது முறையாக ரஷ்ய அதிபராக புட்டின் பதவியேற்பதை கடுமையாக எதிர்த்துவரும் எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்தினர். ரஷ்யா முழுவதும் 19 நகரங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். எதிர்ப்புப்



போராட்டம் நடத்திய எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நாவல்னி அவரது ஆதரவாளர்களுடன் கைது செய்யப்பட்டார். அவர் விடுவிக்கப்பட்டபோதும் ஏனையவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## நோபல் பரிசு நிறுத்திவைப்பு

இலக்கியத்துக்கான நோபல் பரிசை இந்த ஆண்டில் நிறுத்தி வைப்பதாக அந்தப் பரிசை வழங்கும் சுவீடன் அகடமி அறிவித்துள்ளது. அந்த அகடமியுடன் தொடர்புடைய ஒருவர் பாலியல் குற்றச்சாட்டுக்குள்ளானதைத் தொடர்ந்து, பொதுமக்களிடையே கடும் அதிருப்தி எழுந்துள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து சுவீடன் அகடமியின் இடைக்கால செயலர் ஆண்டர்ஸ் ஆல்ஸன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது: இந்த ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு நிறுத்தி வைக்கப்படுகிறது. எனவே, 2018ம் ஆண்டில் அந்தப் பரிசு யாருக்கும் வழங்கப்பட மாட்டாது. இலக்கியத்துக்கான நோபல் பரிசை அறிவிப்பதற்கு முன்னர், பாலியல் குற்றச்சாட்டு காரணமாக சுவீடன் அகடமி மீது படிந்துள்ள கறை நீங்க, மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெறுவது அவசியம் என்று கருதுகிறோம். இதன் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த ஆண்டுக்குப் பதில், அடுத்த ஆண்டில் (2019) இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து இரு நோபல் பரிசுகள் இலக்கியத்துக்காக வழங்கப்படும் என்றார் அவர். இரண்டாம் உலகப் போர் சமயமான 1943ம் ஆண்டுக்குப் பிறகு தற்பொழுதுதான் விருதுகள் அறிவிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நோபல் பரிசுகளை தேர்ந்தெடுத்து வழங்கும் ஸ்வீடன் அகடமி அமைப்பிலிருந்து இதுவரை 6 நிரந்தர உறுப்பினர்கள் பதிவு விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுவீடன் அகடமியின் முதல் பெண் நிரந்தர உறுப்பினர் என்று சாதனை படைத்திருந்த சாரா டனியஸ் சமீபத்தில் பதவி விலகினார். அவரை தொடர்ந்து நோபல் பரிசு தேர்வு குழுவில் இருந்த மேலும் 5 பேர் தங்களத் பதவி விலகல் கடித்தத்தை அளித்தனர். இதை நுவீடன் அகடமியும் ஏற்றுக்கொண்டுள்ளது. தற்போது அகடமியில் 10 உறுப்பினர்கள் மட்டுமே இருந்து வருகின்றனர்.

### மேலும் குற்றச்சாட்டு

சிறையில் அடைக்கப்பட்டுள்ள பிரேசிலின் முன்னாள் அதிபர் லூலா டாசில்வா மற்றும் அவரது தொழிலாளர் கட்சியின் தற்போதைய தலைவர் கீஸி ஹாஃப்மனுக்கு எதிராக மேலும் ஒரு ஊழல் குற்றச்சாட்டை அந்த நாட்டு நீதித்துறை பதிவு செய்துள்ளது.

### 50 மில்லியன் டொலர் வரதட்சணை! 68 மணந்த 25 !

சவுதி இளவரசர் சுல்தான் பின் சல்மான் 25 வயது பெண்ணை திருமணம் செய்து கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்காக 50 மில்லியன் டொலர்களை வரதட்சணையாக பெண்ணுக்கு அவர் கொடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



திருமண நிகழ்வின் போது அதை சுற்றியுள்ள இடத்தில் 30 சொகுசு கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த வெள்ளை நிற சொகுசு பேருந்திலும், தங்க நிறத்தில் ஜொலித்த குதிரை வண்டியிலும் ஏராளமான பெட்டிகளில் பரிசுகள் கொண்டு வரப்பட்டன. இந்த பரிசுகள் மணப்பெண் வீட்டாருக்கு கொடுக்கப்பட்டன. இதோடு வைரங்களும் பெண்ணுக்கு தரப்பட்டது. மணப்பெண் வெள்ளை நிற ஆடையில் அழகாக ஜொலிக்கும் காணொளி வெளியாகியுள்ளது.

### பாக். உள்துறை அமைச்சர் மீது சூடு

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் அசான் இக்பால் (59) மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதால் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியை சேர்ந்தவர், பஞ்சாப் மாகாணம், நாரோவால் மாவட்டத்துக்குட்பட்ட கஞ்சரூர் பகுதியில் நடைபெற்ற தெருமுனை கூட்டத்தில் கடந்த 6ம் திகதி கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது, ஒரு இளைஞர் அவரை நோக்கு துப்பாக்கியால் சுட்டார். துப்பாக்கி தோட்டா அசான் இக்பாலின் வலதுகை தோள்பட்டையில் பாயந்தது. இதில் காயமடைந்த இக்பால், நாரோவால் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு வெற்றிகரமாக அறுவை சிகிச்சை நடந்ததாகவும், அபாய கட்டத்தை அவர் தாண்டியுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இச்சம்பவம் தொடர்பாக 20 வயதிற்குட்பட்ட இளைஞர் ஒருவர் உட்பட இருவரைக் கைது செய்துள்ளனர்.

### உலகின் உச்ச வெப்பம்

பாகிஸ்தானின் சிந்து மாகாண நகரமாக விளங்கும் நவாப்ஷா நகரில் ஏப்ரல் மாதத்தில் வரலாறு காணாத வெயில் பதிவாகியுள்ளது. பாகிஸ்தானின் தென் பகுதியில் அமைந்துள்ள நவாப்'ா நகரில் கோடை வெப்பமானது கடந்த ஏப்ரல் 30ம் திகதி சுமார் 50.2

20

பாகை செல்சியஸ் அளவுக்கு பதிவாகியிருந்தது. பாகிஸ்தான் நாட்டில் ஏப்ரல் மாதத்தில் பதிவான அதிகபட்ச வெப்பமாக மட்டும் இல்லாமல், ஒட்டுமொத்த ஆசிய கண்டத்தில் ஏப்ரல் மாதத்தில் பதிவான அதிகபட்ச வெப்பமாகவும் இது அமைந்துள்ளது. 2011ம் ஆண்டு மெக்சிகோவின் சான்டா ரோஸா பகுதியில் 51 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவானது. தற்போது பாகிஸ்தானில் பதிவாகியிருக்கும் 50.2 பாகை செல்



சியஸ் வெப்ப அளவே, ஏப்ரல் மாதத்தில் பதிவான அதிகபட்ச வெப்பமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புவி வெப்பமயமாதலின் முன்னுதாரணமே பாகிஸ்தானில் இந்த அளவுக்கு வெப்பம் பதிவாகக் காரணம் என புவியியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

---

## சீனாவின் ஒரு பகுதி தாய்வான்! அமெரிக்காவின் கருத்துக்கு கண்டனம்

தாய்வானை வெளிநாட்டு விமான சேவை நிறுவனங்கள் எவ்வாறு அழைப்பது என்ற விவகாரத்தில் அமெரிக்காவின் கருத்துக்கு சீனா தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இது




குறித்து சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் கெங் வங் தெரிவித்துள்ளதாவது: அமெரிக்கா என்னதான் கூறினாலும், எங்களது நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இந்த உலகில் சீனா என்பது ஒரே ஒரு நாடுதான். ஹொங்கொங், மாகு மற்றும் தாய்வான் சீன நிலப்பரப்பில் இருந்து பிரிக்க முடியாத பகுதிகள்.

சீனாவில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு நிறுவனங்கள் இதனை உணர்ந்து செயல்படவேண்டும். எங்களின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு அவை மதிப்பளிக்க வேண்டும். மேலும், அவை சீன சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, எங்கள் மக்களின் உணர்வுகளுக்கும் மரியாதை அளிக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

---

## சிறைச்சாலைக்குள் நுழைந்த கார்த் திருடர்கள்!

காரொன்றை களவாடிய 4 திருடர்கள் தம்மைத் துரத்தி வந்த காவல் துறையினரிடமிருந்து தப்பிக்க மேற்கொண்ட முயற்சியின் போது அந்தக் காரை தவறுதலாக சிறைச்சாலை வளாகத்திற்குள் செலுத்தி வந்து வசமாக சிக்கிக் கொண்ட விநோத சம்பவம் தென் ஆபிரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

→ 19

## கின்னஸ் சாதனை

சீனாவில் ஒரே நேரத்தில் 1374 டிரோன் விமானங்களை பறக்கவிட்டு வானில் வண்ண சாகசம் நிகழ்த்தப்பட்டது கின்னஸ் சாதனையில் இடம்பெற்றுள்ளது. சீனாவை சேர்ந்த ட்ரோன் தயாரிப்பு நிறுவனம் ஒரே நேரத்தில் 1374 விமானங்களை பறக்க விட்டு கின்னஸ் சாத்னை நிகழ்த்தி உள்ளது. இந்த சாகாசக் காட்சி, வானில் மின்மினிப் பூச்சிகள் நடனமாடுவதை போல பிரமிப்பாய் இருந்தது. சியான் நகரில், இரவு நேரத்தில் வெறும் 13 நிமிடங்களில் 1374 டிரோன்கள் வண்ண விளக்குகளை ஒளிரச் செய்து அழகிய ஒளி உருவங்களை உருவாக்கியவாறு பறந்தக் காட்சி வியப்பில் ஆழ்த்தியது. இதற்கு முன்னதாக அமெரிக்க நிறுவனம் ஒன்று 156 டிரோன் விமானங்களை பறக்க விட்டதும், தென்கொரிய குளிர்கால ஒலிம்பிக் போட்டியின்போது 1218 டிரோன் விமானங்களை பறக்க விட்டதுமே சாதனையாக இருந்தது.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய தடை

தேனீக்களைக் கொல்லும் அளவுக்கு நச்சுத் தன்மை வாய்ந்த பூச்சிக் கொல்லி மருந்துகளை விவசாயத்தில் பயன்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்துள்ளது. உலகிலுள்ள 90 சதவீத பயிர்களில் மகரந்த சேர்கை ஏற்பட்டு, அந்த பயிரினம் தழைத்தோங்குவதற்கு தேனீக்கள் மிகவும் உதவிகரமாக இருப்பதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிலையில், அண்மைக் காலமாக தேனீக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதாகவும், இதனால் சுற்றுச் சூழல் மிகவும் பாதிப்படைவதாகவும் இயற்கை ஆர்வலர்கள் குற்றம்சாட்டி வந்தனர். பயிர்களில் பூச்சிகளால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக தெளிக்கப்படும் சில பூச்சிக் கொல்லி மருந்துகளே, பயிர்களைக் காக்கும்



தேனீக்களுக்கும் எமனாகிவிடுவதாக அவர்கள் தெரிவித்தனர். இந்தச் சூழலில், தேனீக்களைக் கொல்வதாகக் கூறப்படும் மூன்று வகை பூச்சிக் கொல்லி மருந்துகளை திறந்த வயல்களில் பயன்படுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது. ஐரோப்பிய ஒன்றியத் தலைமையகத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில், குறிப்பிட்ட அந்த பூச்சிக் கொல்லிகளுக்கு தடை விதிப்பதற்கு ஆதரவாக ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் வாக்களித்தன. இதையடுத்து, சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் மூடப்பட்ட பயிர் வளர்ப்புப் பகுதிகளில் மட்டுமே அத்தகைய பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்த முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த நடவடிக்கையை சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர்.

## அதிக வட்டியால் கொல்லப்பட்ட யூதர்கள்!

### பாலஸ்தீன அதிபரின் கருத்துக்கு அமெரிக்கா, இஸ்ரேல் கண்டனம்

யூதர்கள் அதிக அளவில் வட்டி வசூலித்ததால்தான் படுகொலை செய்யப்பட்டனர் என்று பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் கூறியதற்கு அமெரிக்கவும், இஸ்ரேலும் கண்டனம் தெரிவித்துள்ளன. ஜெருசலேம் நகரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அதிபர் மஹ்மூத் அப்பாஸ்

# உலகின் இராணுவ பலம் வாய்ந்த நாடுகள்

உலகில் இராணுவ பலம் வாய்ந்த முதல் 50 நாடுகளின் பட்டியலை சர்வதேச ஊடகமான 'ரொய்டர்ஸ்' வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலில் பாதுகாப்பு செலவினம் (ஆண்டொன்றிக்கு), மொத்தப் படை பலம் (முப்படைகள்), மற்றும் போர்த் தளவாடங்களின் எண்ணிக்கை என்பவை பட்டியலிடப்பட்டு அதன் அடிப்படையில் இந்தப் பலம் குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் முதல் நாடாக எது இருக்கும் என்பது நீங்கள் அனைவரும் ஊகிக்கக்கூடியதே. எனினும், முதல் 50 நாடுகள் கொண்ட அந்தப் பட்டியலை மேலிருந்து கீழாக இங்கே தொடர்ந்து தருகின்றோம்.

**30வது இடத்தில்**

**உக்ரேன்**

பாதுகாப்புச் செலவு –
4.88 பில்லியன் டொலர் (4,880,000,000)
இராணுவ பலம் – 1,182,000 படையினர்
போர் விமானங்கள் – 238
டாங்கிகள் – 2,449
இராணுவப் போர் வாகனங்கள் – 8,217
கடற்படைக் கப்பல்கள் – 25
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 0



**29வது இடத்தில்**

**சுவீடன்**

பாதுகாப்புச் செலவு –
6.21 பில்லியன் டொலர் (6,215,000,000)
இராணுவப் பலம் – 43,875 படையினர்
போர் விமானங்கள் – 198
டாங்கிகள் – 120
இராணுவப் போர் வாகனங்கள் – 2,470
கடற்படைக் கப்பல்கள் – 63
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 5

**28வது இடத்தில்**

**கிரேக்கம்**

பாதுகாப்புச் செலவு –
6.54 பில்லியன் டொலர் (6,540,000,000)
இராணுவப் பலம் – 413,750 படையினர்
போர் விமானங்கள் – 600
டாங்கிகள் – 1,345
இராணுவப் போர் வாகனங்கள் – 4,209
கடற்படைக் கப்பல்கள் – 115
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 11

**27வது இடத்தில்**

**ஸ்பெயின்**

பாதுகாப்புச் செலவு –
11.6 பில்லியன் டொலர் (11,600,000,000)
இராணுவ பலம் – 174,700 படையினர்
போர் விமானங்கள் – 533
டாங்கிகள் – 327
இராணுவ போர் வாகனங்கள் – 2,493
கடற்படைக் கப்பல்கள் – 46
விமானம் தாங்கிக் கப்பல் – 2
நீர்மூழ்கிக் கப்பல் – 3



**26வது இடத்தில்**

**கனடா**

பாதுகாப்புச் செலவு –
15.5 பில்லியன் டொலர் (15,500,000,000)
இராணுவப் பலம் – 111,250 படையினர்
போர் விமானங்கள் – 414
டாங்கிகள் – 80
இராணுவப் போர் வாகனங்கள் – 3,004
கடற்படைக் கப்பல்கள் – 63
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 4

**25வது இடத்தில்**

**அல்ஜீரியா**

பாதுகாப்புச் செலவு –
10.5 பில்லியன் டொலர் (10,570,000,000)
இராணுவப் பலம் – 792,350 படையினர்
போர் விமானங்கள் – 502
டாங்கிகள் – 2,405
இராணுவப் போர் வாகனங்கள் – 6,754
கடற்படைக் கப்பல்கள் – 85
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 6

**24வது இடத்தில்**

**சவுதி அரேபியா**

பாதுகாப்புச் செலவு –
56.7 பில்லியன் டொலர் (56,725,000,000)
இராணுவப் பலம் – 256,000 படையினர்
போர் விமானங்கள் – 790
டாங்கிகள் – 1,142
இராணுவப் போர் வாகனங்கள் – 5,472
கடற்படைக் கப்பல்கள் – 55
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 0



**23வது இடத்தில்**

**வட கொரியா**

பாதுகாப்புச் செலவு –
7.5 பில்லியன் டொலர் (7,500,000,000)
இராணுவப் பலம் – 6,445,000 படையினர்
போர் விமானங்கள் – 944
டாங்கிகள் – 5,025
இராணுவப் போர் வாகனங்கள் – 4,100
கடற்படைக் கப்பல்கள் – 967
விமானம் தாங்கிக் கப்பல் – 2
நீர்மூழ்கிக் கப்பல் – 76

**22வது இடத்தில்**

**அவுஸ்திரேலியா**

பாதுகாப்புச் செலவு –
24 பில்லியன் டொலர் (24,100,000,000)
இராணுவப் பலம் – 81,000 படையினர்
போர் விமானங்கள் – 465
டாங்கிகள் – 59
இராணுவப் போர் வாகனங்கள் – 2,040
கடற்படைக் கப்பல்கள் – 47
விமானம் தாங்கிக் கப்பல் – 2
நீர்மூழ்கிக் கப்பல் – 6

**21வது இடத்தில்**

**ஈரான்**

பாதுகாப்புச் செலவு –
6.3 பில்லியன் டொலர் (6,300,000,000)
இராணுவப் பலம் – 934,000 படையினர்
போர் விமானங்கள் – 477
டாங்கிகள் – 1,616
இராணுவப் போர் வாகனங்கள் – 1,315
கடற்படைக் கப்பல்கள் – 398
விமானம் தாங்கிக் கப்பல் – 0
நீர்மூழ்கிக் கப்பல் – 33

# 60 ஆண்டுகளின் பின் மலேசியாவில் ஆட்சி மாற்றம்

## ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் வென்ற உலகின் மிகவும் மூத்த தலைவர் மகாதிர் முகம்மது

மலேசியாவில் 12 மாகாண பேரவைகளுக்குமாக நடந்த 14வது பொதுத் தேர்தலில் 92 வயதான மகாதிர் முகம்மது வெற்றி பெற்று அந்நாட்டு பிரதமராக கடந்த 10ம் திகதி வியாழன் பதவியேற்றுள்ளார். 222 உறுப்பினர்களைக் கொண்ட மலேசிய நாடாளுமன்றத்துக்குக் கடந்த 8ம் திகதி செவ்வாய்கிழமை தேர்தல் நடைபெற்றது. ஆளும் கட்சியான பிரதமர் நஜீப் ரசாக்கின் பி.என்.கட்சிக்கும், முன்னாள் பிரதமர் மகாதிர் முகம்மது தலைமையிலான மலேசிய ஐக்கிய உள்நாட்டுக் கட்சி (எம்யுஐபி) தலைமையிலான எதிர்க்கட்சிகள் கூட்டணி இடையே கடும் போட்டி நிலவியது. தேர்தலில் 69 சதவீதம் வாக்குகள் பதிவாகியது.

ஆட்சி அமைக்க 112 இடங்கள் இருத்தலே போதுமானது எனும் நிலையில், மகாதிர் முகமது தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணி 121 இடங்களைக் கைப்பற்றியது. இதன்மூலம் 1957ம் ஆண்டு மலேசியா சுதந்திரமடைந்து 61 ஆண்டுகளுக்குப் பின் முதன்முறையாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. மலேசியா வரலாற்றில் சுமார் 60 ஆண்டுகளுக்கு பிறகு எதிர்க்கட்சியினர் ஆட்சியை கைப்பற்றி உள்ளது குறிப்பிடத்தக்கது. ஆளும் கட்சியின் கூட்டணி 79 இடங்களில் மட்டுமே வென்றது. இதையடுத்து எதிர்க்கட்சிக் கூட்டணி தலைவரான 92-வயதாகும் மகாதிர் முகமதுவை ஆட்சி அமைக்க மன்னர் சுல்தான் முகம்மது அழைப்பு விடுத்தார். இந்த அழைப்பைத் தொடர்ந்து மன்னரின் அரண்மனைக்கு மகாதீர் முகமது சென்றார். அவருக்கு மன்னர் சுல்தான் முகம்மது பதவி பிரமாணம் செய்து வைத்தார். நாட்டின் 7வது பிரதமராக மகாதிர் முகமது பதவியேற்று, உலகின் மிகவும் வயதான பிரதமர் என்கிற பெருமையை பெற்றார் மகாதீர் முகமது.



பிரதமர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மகாதிர் முகமது, ஏற்கனவே 4வது பிரதமராக 1981ம் ஆண்டு முதல் 2003ம் ஆண்டு வரை மலேசியப் பிரதமராக பொறுப்பு வகித்தவர்தான். இரும்புக் கரம் கொண்டு ஆட்சி செலுத்தியதாகக் கூறப்படும் அவர், வயது காரணமாக அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தார். எனினும், அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் கோடிக்கணக்கான டொலர்கள் ஊழல் செய்ததாக முன்னைய பிரதமர் நஜீப் ரஸாக்குக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், மீண்டும் அரசியலுக்குத் திரும்பிய மகாதீர், நஜீபை எதிர்த்து பிரசாரத்தில் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளார். உலகில் 92வது வயதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் என்ற சாதனையுடன், மலேசியாவின் நீண்ட நாள் பிரதமர் என்கிற சாதனையையும் இவர் படைத்திருக்கின்றார்.

பிரித்தானிய கொலனியாக இருந்த மலேசியாவில், கொலனி ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடிய ஐக்கிய மலாய் தேசியக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களில் மகாதிரும் ஒருவர். 1981ல் மலேசியாவின் நான்காவது பிரதமராகப் பதவியேற்ற மகாதிர், அடுத்த 22 ஆண்டுகள் அசைக்க முடியாத செல்வாக்குள்ள தலைவராக வலம் வந்தார். அவருடைய பதவிக் காலத்தில்தான் மலேசியா மிகப்பெரிய பொருளாதார ஏற்றத்தைக் கண்டது. கோலாலம்பூரிலுள்ள பெட்ரோனாக் ரெட்டைக் கோபுரம் உள்ளிட்ட எத்தனையோ சாதனைகளை அவரது 22 ஆண்டுகால ஆட்சி நிகழ்த்திக் காட்டியது. மேலை நாடுகளுக்கு இணையாக மலேசியாவில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திய பெருமையும், கிழக்காசிய நாடுகளை ஒருங்கிணைத்த பெருமையும் மகாதிரையே சாரும்.

2003ல் பதவியிலிருந்து மகாதிர் முகமது விருப்பு ஓய்வு பெற விரும்பியபோது, ஐக்கிய மலாய் தேசியக் கட்சி அதற்கு அவரை அனுமதிக்கவில்லை. பதினாறு மாதங்களுக்குப் பிறகுதான் அவர் பதவி ஓய்வு பெற்றார். 2009ல் நஜிப் ரசாக்கை பிரதமராக்குவதற்குப் பரிந்துரைத்ததும் மகாதிர் முகமதுதான். ஆனால், கடந்த சில ஆண்டுகளாகவே அவரது ஆட்சியில் இலஞ்ச ஊழல் அதிகரித்திருப்பதாகப் பரவலான குற்றச்சாட்டு எழுந்தது.

நஜிப் ரசாக் ஆட்சியில் அரசு நிதியில் 4.5 பில்லியன் டொலர் காணாமல் போனது மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. அதே நேரத்தில் 700 மில்லியன் டொலர் நஜிப் ரசாக்கின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டிருப்பது வெளியில் வந்தபோது அது மிகப் பெரிய ஊழலாக வெடித்தது. இவை மக்கள் மத்தியில் ஆத்திரத்தையும் அரசுக்கு எதிரான மனோநிலையையும் ஏற்படுத்தி இருந்தது. அப்படிப்பட்ட சூழலில்தான் இனியும் தான் பேசாமல் இருக்க முடியாது என்று தான் வளர்த்த ஐக்கிய மலாய் தேசியக் கட்சிக்கு எதிராக மகாதிர் முகமது 'பகதான் ஹரப்பன்' என்கிற எதிர்க்கட்சிக் கூட்டணியை உருவாக்கி தேர்தலில் களம் இறங்கினார்.

தேர்தலில் தனக்கு எதிரான மனோநிலை காணப்படுவதைப் புரிந்துகொண்ட நஜிப் ரசாக் தனக்கு சாதகமான தொகுதிகளை மறு சீரமைப்பு செய்ய முற்பட்டார். வாக்கெடுப்பு தினத்தை விடுமுறை நாளில் வைக்காததும்கூட வாக்குப்பதிவு குறைவாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். குறைந்த வாக்குப்பதிவு தனக்கு சாதகமாக இருக்கும் என்று நஜிப் ரசாக் போட்ட திட்டத்தை முறியடிக்கும் விதமாக மக்கள் பெருமளவில் வாக்குப்பதிவில் கலந்து கொண்டதுதான் ஆட்சி மாற்றத்துக்கு மிக முக்கியமான காரணம்.

நடந்து முடிந்த தேர்தலில் ஓர் அரசியல் விசித்திரம் நிகழ்ந்திருக்கிறது. இதற்கு முன்பு மகாதிர் முகமது பிரதமராக இருந்தபோது அவரது எதிரியாகக் கருதப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட அன்வர் இப்ராஹிம் இப்போது மகாதிர் முகமது தலைமை தாங்கும் கூட்டணியில் இருக்கிறார். சிறை தண்டனை அனுபவிக்கும் அன்வர் இப்ராஹிமுக்கு பொது மன்னிப்பு அளித்து, அவர் விடுதலையானதும் அவரிடம் ஆட்சியை ஒப்படைக்க திட்டமிட்டிருக்கிறார் பிரதமராகி இருக்கும் மகாதிர். பொதுவாக சிறை தண்டனை அனுபவித்த ஒருவரால் 5 ஆண்டுகள் அரசியலில் ஈடுபட முடியாது என்பது மலேசிய சட்டம். அதேநேரத்தில் மலேசியாவின் மன்னர் பொதுமன்னிப்பு அளித்துவிட்டால் அந்த நபர் அரசியலில் ஈடுபட முடியும். அன்வர் இப்ராஹிமுக்கு பொதுமன்னிப்பு வழங்க அந்த நாட்டு மன்னர் முகமது ஒப்புக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றொரு புறம் மகாதிரால் அடையாளம் காணப்பட்டு பிரதமரான நஜிப் ரசாக் இப்போது அவரது அரசியல் எதிரியாக மாறியிருக்கிறார். 64 வயதான முன்னாள் பிரதமர் நஜீப் ரசாக் நாட்டை விட்டு வெளியேற புதிய அரசு தடை விதித்துள்ளது. நஜீப் ரசாக் மீதான ஊழல் புகார்கள் குறித்து விசாரணை நடத்தப்பட உள்ளதாகவும் நஜீப் வெளியேற தடை விதித்தது தான்தான் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், ஜேர்மனியில் 11ம் நூற்றாண்டில் இருந்து யூதர்கள் கொல்லப்பட்டனர். ஏன் அவர்கள் கொல்லப்பட்டார்கள்? யூதர்கள் என்பதால் கொன்றனர் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் கொல்லப்பட்டதற்கு மதம் ஒரு காரணம் அல்ல. அவர்கள் கடன் கொடுத்து, அதற்கு அதிக அளவில் வட்டி வசூலித்தனர். அவர்களின் சமூக செயல்பாடுகளால்தான் அவர்களுக்கு அந்த நிலைமை நேரிட்டது. இதற்கான ஆதாரங்கள் யூதர்களே எழுதிய 3 புத்தகங்களில் கிடைக்கின்றன. ஆனால், அரபு நாடுகளில் வசிக்கும் யூதர்கள் இதுபோன்ற அடக்குமுறைகளைச் சந்திக்கவில்லை என்றார் அவர்.

இதனிடையே, அதிபர் மஹ்மூத் அப்பாஸின் கருத்துக்கு அமெரிக்க தூதர் டேவிட் ஃபிரைட்மேன் கண்டனம் தெரிவித்துள்ளார். யூதர்கள் இனப்படுகொலை நிகழ்ந்த இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, அதற்கு புதிய விளக்கம் கொடுத்து, மிகவும் தரம் தாழ்ந்த செயலில் அப்பாஸ் ஈடுபட்டுள்ளார். இஸ்ரேல் மற்றும் யூதர்களுக்கு எதிராக வெறுப்புணர்வையும் அவர் தூண்டுகிறார் என்று டேவிட் ஃபிரைட்மேன் கூறினார். இதேபோல், அமெரிக்க தூதர் ஜேசன் கிரீன் பிளாட்டும் அப்பாஸின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதுபோன்ற கருத்துகளைத் தெரிவித்து வந்தால், பாலஸ்தீனம், இஸ்ரேல் இடையே அமைதியை ஏற்படுத்த முடியாது என்றும் அவர் கூறினார்.

## வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவோர் மீண்டும் முதலிடத்தில் இந்தியர்கள்!

வெளிநாடுகளில் இருந்து தங்கள் தாய் நாட்டிற்குப் பணம் அனுப்பவதில் எப்போதும் போல் இந்தியர்களே முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளனர். அந்த வகையில், 2017ம் ஆண்டில் 69 பில்லியன் (6,900 கோடி) டொலர்களை (இந்திய மதிப்பில் சுமார் 4.50 இலட்சம் கோடி ரூபா) இந்தியர்கள் தங்கள் தாயகத்துக்கு அனுப்பியுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. 613



பில்லியன் டொலர் பணம் உலகம் முழுவதும் அனுப்பட்டுள்ளது. அதில் 9.9 வீதமான பணம் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கு அடுத்தபடியாக, சீனா 64பில்லியன் டொலர் பங்களிப்புடன் இரண்டாவது இடத்திலும், பிலிப்பின்ஸ் 33 பில்லியன் டொலர் பங்களிப்புடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. மேலும், இப்பட்டியலில் மெக்சிகோ (31 பில்லியன் டொலர்), நைஜீரியா (22 பில்லியன் டொலர்) மற்றும் எகிப்து (20 பில்லியன் டொலர்) ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

2015ம் ஆண்டில் இந்தியர்கள் வெளிநாடுகளில் இருந்து 68.91 பில்லியன் டொலரை தாய்நாட்டுக்கு அனுப்பினர். ஆனால், 2016ல் இது 62.74 பில்லியன் டொலராக குறைந்து போனது. இருப்பினும், இந்த தொகை 2017ல் புதிய உச்சத்தைத் தொட்டது. அதேபோன்று பணம் அனுப்புவதற்கான செலவினமும் கணிசமான அளவில் உயர்ந்துள்ளது என்கிறது உலக வங்கி. ஐரோப்பா, ரஷ்யா, அமெரிக்க நாடுகளின் பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருந்த நிலையில் அங்கு பணிபுரிந்து தாயகத்துக்கு பணத்தை அனுப்புவதும் எதிர்பார்த்த அளவை விட அதிகமாகவே உள்ளது. இது, பொருளாதாரத்தில் பின்தங்கிய பல நாடுகளுக்கு பேருதவியாக இருந்தது. இதைத்தவிர, மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு, ஈரோ, ரூபிள் நாணய மதிப்புகள் உயரவும் வழி வகுத்துள்ளன என உலக வங்கி தெரிவித்துள்ளது.

காவல்துறையினர் குறிப்பிட்ட கார் திருடர்களை கேப் நகரில் துரத்திச் சென்ற போது காவல்துறையினரிடமிருந்து தப்பும் முகமாக பல்வேறு வீதிகளிலும் காரை வேகமாக செலுத்திய அந்தத் திருடர்கள் இறுதியில் தம்மை அறியாது அந்தக் காரை பொல்ஸ்மூர் சிறைச்சாலை வளாகத்திற்குள் செலுத்தி வந்துவிட்டனர். இதனால் அவர்கள் வசமாகச் சிக்கிக் கொண்டதாக கேப் நகர சட்ட நடைமுறைப்படுத்தல் அலுவலகத்தின் பேச்சாளரான வேன் டயஸன் தெரிவித்துள்ளார்.

### இராட்சத கொசு!

சீனாவைச் சேர்ந்த பூச்சியியல் வல்லுநர்கள் உலகின் மிகப்பெரிய இராட்சத கொசுவை கண்டுபிடித்துள்ளனர். இதுகுறித்து மேற்கு சீனாவில் உள்ள பூச்சியியல் அருங்காட்சியகத்தின் பொறுப்பாளர் சாவ் லி கூறியதாவது:

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் செங்குடுவில் உள்ள குயிங்செங் மலைப் பகுதிக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது இந்த இராட்சத கொசுவை



கண்டுபிடித்தோம். அதன் இறக்கையின் நீளம் 11.15 சென்டிமீற்றர். பார்ப்பதற்கு வேண்டுமானால் இந்த கொசுக்கள் பயங்கரமான தோற்றத்தைக் கொண்டவையாக இருந்தாலும் அவை உயிர் வாழ்வதற்கு இரத்தம் தேவையில்லை. தேனை மட்டுமே உண்டு அவை உயிர் வாழத் தக்கவை. இதுபோன்ற ஆயிரக்கணக்கான கொசு வகைகள் உலகில் காணப்படுகிறது. ஆனால், வெறும் 100 வகை கொசு இனங்கள் மட்டுமே இரத்தத்தை உணவாக உண்பதுடன் மனிதர்களுக்கும் மிகப்பெரும் பிரச்சனையாக உருவெடுத்து வருகின்றன.

இராட்சத கொசு முதலில் 1876ம் ஆண்டு ஜப்பானில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு ஹோலோருஷ்யா மிக்காடோ என பெயர் சூட்டியவர் பிரித்தானியாவைச் சேர்ந்த பூச்சியியல் வல்லுநர் ஜோன் ஒபடியாஹ். இவ்வகை கொசுக்களின் இறக்கையின் நீளம் சுமார் 8 சென்டிமீற்றர் அளவுக்கு இருந்தது. ஆனால், தற்போது சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இராட்சத கொசுவின் இறக்கையின் நீளம் அதைவிட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

### 140 குழந்தைகள் நரபலி

பெரு நாட்டின் வட பகுதியில் அமைந்துள்ள டுருஜிலோ நகரத்தின் லாஸ் லாமாஸ் பகுதியில் சுமார் 550 ஆண்டுகளுக்கு முன், ஒரே நேரத்தில் 140 குழந்தைகள் நரபலி கொடுக்கப்பட்டது ஆராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆய்வின் போது கிடைத்த எலும்புகள், மண்டை ஓடு ஆகியவற்றை கார்பன் பரிசோதனை செய்ததில் சுமார் 550 ஆண்டுகளுக்கு முன்பு (கி.பி 1450-ம் ஆண்டு கால கட்டத்தில்) ஒரு மாபெரும் நரபலி நிகழ்வு நடந்திருப்பது தெரியவந்துள்ளது. அந்த நரபலியில் 5 முதல் 14 வயதுக்குட்பட்ட சுமார் 140 குழந்தைகளின் எலும்புகளை கண்டுபிடித்துள்ளனர். இத்துடன் 200 இளம் ஒட்டகங்களின் எலும்புகளையும் கண்டுபிடித்துள்ளனர்.

# எட்காவைவிட சிங்கப்பூர் உடன்படிக்கை மோசமானது

**- விமல் வீரவன்ச**

சிங்கப்பூருடனான வியாபார உடன்படிக்கை சிறீலங்காவின் தேசிய வியாபார நடவடிக்கைகளை முழுமையாக அழிக்கும். இந்தியாவின் எட்காவை விடவும் சிங்கப்பூர் உடன்படிக்கை மோசமானதாக அமையும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சிறீலங்கா – சிங்கப்பூர் வியாபார உடன்படிக்கை ஒன்றை அரசாங்கம் செய்துகொள்ளவுள்ளது. இது சிங்கப்பூர் பொருளாதாரத்தில் வெற்றிகரமான நிலைமைகளை வெளிபடுத்த முடியும். ஆனால் சிறீலங்காவிற்கு இது சாதகமாக அமையாது. சிங்கப்பூரின் உடன்படிக்கை மூலம் நாட்டின் தேசிய உற்பத்தியை வீழ்த்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. தொழிற்சங்கங்கள் எதனையும் கவனத்தில் கொள்ளாது, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாது, அமைச்சரவை அனுமதி இல்லாது இந்த அரசாங்கம் சிங்கபூர் அரசாங்கத்துடன் பொருளாதார உடன்படிக்கையினை முன்னெடுத்துள்ளது.

இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கை செய்துகொள்ள அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தது. எனினும் தொழிற்சங்க அழுத்தம் காராணமாக அவை தடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்போது சிங்கப்பூர் அரசுடன் உடன்படிக்கை செய்து அவர்களின் தொழிலாளர்கள் இங்கு வந்து தொழில் செய்யும் வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கின்றனர். இதன் மூலம் இந்தியா, சீனா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தொழிலாளர்கள் இங்கு வந்து தொழில் செய்யும் வாய்ப்பினை அரசாங்கம் உருவாகி கொண்டுக்கின்றது.. இதனால் எமது நாட்டில் தொழிலாளர் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். எமது தொழிலாளர்கள் அனைவரும் நெருக்கடியினை சந்திக்கும் நிலைமை உருவாகும்.

இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டிய அவசியம் இனி இருக்காது. மாறாக சிங்கப்பூர் உடன்படிக்கை மூலமாக இந்தியாவும் நேரடியாக வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க வாய்ப்புகள் அமையும். இதனால் இலங்கையில் தொழில்வாய்ப்பு முழுமையாக பாதிக்கப்படும். சிங்கப்பூரில் இருந்து இங்கு நேரடியாக வியாபாரம் செய்ய முடியும். ஆனால் சிறீலங்காவில் இருந்து அங்கு சென்று தொழில் செய்ய முடியாது என்ற நிபந்தனையும் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கம் எமது மக்களை பழிவாங்கவா இவ்வாறு முயற்சித்து வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மே தினத்தின்...

இதனைச் செய்வதற்கு சிங்கள பேரினவாத சக்திகள் தயாராகயில்லை என்பது வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்றுவரும் சிங்கள மேலாதிக்க சக்திகளின் போக்கு தெட்டத்தெளிவாக உணர்த்துகிறது.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் இதய பூமியாக அழைக்கப்படும் மணலாறு, கொக்குளாய் போன்ற இடங்களில் இடம்பெற்றுவரும் பௌத்த மதத்தின் ஆதிக்கம், சிங்களவர்களின் அத்துமீறிய குடியேற்றம், கடல்வள அபகரிப்பு போன்ற நடவடிக்கைகளை சிங்கள அரசாங்கம் இன்னும் கைவிடவில்லை. இந்நிலையில், வெசாக் மற்றும் மே தின நிகழ்வுகளை மாத்திரம் நடத்தி தமிழர்களின் வடுக்களைக் குறைக்கலாம் என தப்புக்கணக்கு போடுகிறது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சொந்தங்கள் இன்றும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகிற போதும் அதற்கான ஒரு முடிவை எடுக்காத நிலையில், கொண்டாட்டங்களை நடத்தி மனங்களை வென்றெடுக்கலாம் என சிங்கள தேசம் கனவு காண்கிறது. கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களத்தின் ஆதிக்கம் மேல் ஓக்கியுள்ளது என்பதை அண்மையில் நடைபெற்ற மே தின நிகழ்வு எடுத்துக் காட்டுகிறது. தமிழர்களை அடிமையாக்கும் சிங்கள தேசத்தின் கருத் திட்டத்திற்குதான் தமிழ் அரசியல் வாதிகளும் சோரம் கோகிறார்கள். இவ்வாறான நடவடிக்கையானது ஒரு தனிமனிதன் நடவடிக்கையாகவே கொள்ளப்பட வேண்டுமே தவிர ஒட்டு மொத்த தமிழர்களின் விருப்பங்களும் அல்ல எனவே சிங்களவர்களின் பின்னால் வால்பிடிப்பவர்களை தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் எனக் கூற முடியாது.

தெருவில் குப்பை கூட்டுகிறவன், அரியணை அமர்ந்து அரசு புரியும் மன்னனைப் போன்ற பெருமையும் சிறப்பையும் உடையவன் என்றார் விவேகானந்தர். அத்தகைய சிறப்புடைய உழைக்கும் வர்க்கத்தினர் போராடி பெற்ற நாளே மே தினம், உழைப்பாளர் தினம் என உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

எல்லோரும் நினைப்பதுபோல மே தினம் என்பது முதன் முதலில் பொதுவுடமை புரட்சி நடந்த சோவியத் ரஸ்யாவிலோ அல்லது அதன் பிறகு பொதுவுடமை நாடான சீனாவிலோ பிறக்கவில்லை. மாறாக, பொதுவுடமைத் தத்துவத்திற்கு பெரும் எதிர்ப்பு காட்டிவரும் அமெரிக்காவில்தான் முதன் முதலில் உழைப்பாளர்களின் அடிப்படை உரிமை நிலைநாட்டப்பட்ட வேண்டும் எனத் தெரிவித்து உரிமை பெறப்பட்டது.

இவ்வாறு தொழிலாளர்கள் சிந்திய இரத்தம் மற்றும் வியர்வையின் பலன்தான் மே தினம். இவ்வாறு உரிமைகளை வழங்கிய அமெரிக்கா இன்று தமிழர் இனத்தின் அழிப்புக்கு காரணமாக இருந்தது மாத்திரமல்லாது, அவர்களுக்கான உரிமைகளை வழங்குவதற்கு தடையாக இருப்பதுதான் விந்தையாக உள்ளது. அதாவது, இன்றைய நிலையில் தமிழர்கள் சுயமாக வாழக் கூடிய சமஸ்ட்டித் தீர்வைக் கூட பெற்றுக் கொடுப்பதற்கு தயாராகவில்லை. வர்த்தக மயமான இன்றைய உலகில் தமிழர்களின் உரிமைப் பிரச்சினையையும் வர்த்தக ரீதியாக அணுக நினைப்பது சிங்கள தேசத்திற்கு வாய்ப்பாக உள்ளது.

உலக வல்லரசுகள் தமது பொருளாதார நலன்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு செயல்படுவதினால், ஒரு இனத்தின் உரிமைகள் முற்றிலுமாக மறுக்கப்படுவதுடன், பேரினவாத சக்திகளினால் நசுக்கப்படுவதற்கும் துணை போகிறது. இந்நிலைமை மாறவேண்டுமாக இருந்தால் பாதிக்கப்பட்ட சமூகத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் எமது கருத்தாகவுள்ளது.

# ரஷ்ய ஏவுகணைக்...

விற்பனை செய்வதில்லை என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தலைமையிலான நிர்வாகம் கடந்த ஆண்டு முடிவு செய்தது. அதன் அடிப்படையில், ரஷ்யாவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகளை தடை செய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கும் வகையில், புதிய சட்டத்தையும் டிரம்ப் அரசு 2017ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிறைவேற்றி, 2018 ஜனவரியில் இருந்து நடைமுறைக்குக் கொண்டுவந்தது. அமெரிக்காவின் எதிரிகளை எதிர்க்கும் சட்டம் (CAATSA) என்று இதற்குப் பெயர்.

இந்நிலையில், ரஷ்யாவிடம் இருந்து எஸ்–400 என்ற சுமைதளத்தை வாங்கவுள்ள இந்தியா மீதும், அந்நாட்டிடம் பாதுகாப்பு உபகரணங்களை வாங்கும் வேறு சில நாடுகள் மீதும் அமெரிக்கா தடை விதிப்பதால், அமெரிக்க பாதுகாப்பு வர்த்தகம்தான் பாதிக்கப்படும். இதனை அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர், ஜிம் மேட்டீஸ் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க கொங்கிரஸ் சபையில் பேசிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜிம் மேட்டீஸ், இந்தியா மீது தடை விதித்தால் அது அமெரிக்க பாதுகாப்புத் துறையின் வர்த்தக நலனுக்கு எதிராகவே அமையும் என்று தெரிவித்துடன், தேசிய பாதுகாப்பு கட்டுப்பாடுகளில் இருந்து இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ரஷ்யா எஸ்.400– டிரையம்ப் வழிமறிப்பு ஏவுகணைகளை இப்போது சிரியாவில் தன்னுடைய பாதுகாப்பு கட்டமைப்பை பாதுகாக்க நிலைநிறுத்தி உள்ளது. ரஷ்யாவிலும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. ரஷ்யாவிடம் இருந்து முதலாவதாக சீனா இந்த வழிமறிப்பு ஏவுகணைகளை வாங்கியுள்ளது. சவுதி அரேபியாவும் வாங்குவது தொடர்பான பேச்சுவார்த்தையை மேற்கொண்டது.




இதேவேளை, குறிப்பிட்ட ஆயுதங்களை பாகிஸ்தானுக்கு விற்கக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில், ரஷ்யாவுடன் இந்தியா ஆயுத ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறது. ஆனால் இந்தியா தொடர்ந்து மேற்கத்திய நாடுகளுடன் ஆயுத வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தால், பாகிஸ்தானுக்கு ஆதரவாக ரஷ்யா செயல்பட முடியும் என இலண்டனில் வெளியாகும் எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு சென்ற ரஷ்ய போர்க் கப்பலும்...

இந்த விமானம் கராச்சி ஜின்னா சர்வதேச விமான நிலையத்தில் இரகசியமாக தரையிறக்கப்பட்டதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. முன்கூட்டியே திட்டமிடப்படாமல், இந்த விமானம் எரிபொருள் நிரப்புவதற்காக தரையிறக்கப்பட்டதாகவும், பணியாளர்கள் ஓய்வெடுத்த பின்னர் இது, சவூதி அரேபியாவின் டமாம் நகருக்கு புறப்பட்டு செல்ல ஏற்பாடாகியிருந்ததாகவும் பாகிஸ்தான் சஹீன் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆனால், ஏற்கனவே எரிபொருள் நிரப்புவதற்காகவே சிறீலங்காவின் மத்தள விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்ட இந்த விமானம், மீண்டும் கராச்சியிலும் எரிபொருள் நிரப்புவதற்காக அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது ஏன் என்றும் பாகிஸ்தான் ஊடகம் கேள்வி எழுப்பியுள்ளது. இந்த விமானத்தில் கொண்டு செல்லப்படும் பொருட்கள் பற்றிய எந்த விபரங்களும் வெளியிடப்படவில்லை எனவும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.



இதுஇவ்வாறிருக்க, இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக பேச்சுக்களை நடத்துவதற்கு சிறீலங்கா அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவொன்று ரஷ்யா சென்று திரும்பியுள்ளது. பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலர் சரத் குமார, பாதுகாப்பு அமைச்சின் வான் பாதுகாப்பு ஆலோசகர் விங் கொமாண்டர் டில்சான் வாசகே ஆகியோரை உள்ளடக்கிய குழு ரஷ்யா சென்றிருந்தது. ரஷ்யாவிடம் இருந்து போர் விமானங்கள், போர்க்கப்பல் மற்றும் ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வது பற்றிய பேச்சுக்களை நடத்தவே இவர்கள் மொஸ்கோ சென்றிருந்தனர். போர்த்தளபாடக் கொள்வனவுகள் தொடர்பாக ரஷ்யாவின் உயர்மட்டத்துடன் பேச்சுக்களை நடத்திவிட்டு இந்தக் குழு நாடு திரும்பியிருக்கிறது. எனினும், எந்தெந்த ஆயுத தளபாடக் கொள்வனவுகள் பற்றி இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன என்ற தகவல்கள் வெளியிடப்படவில்லை.

# பாலைவனத்தில் 5 ஆயிரம் ஆண்டுகளாக...

அந்த ஊற்று அப்படியே நின்றதாம்.

ஒரு வினாடிக்கு 8 ஆயிரம் லீற்றர் என்ற அளவில், தினமும் 691.2 மில்லியன் லீற்றர் தண்ணீர் இந்த கிணற்றில் இருந்து சவூதி மக்களின் தண்ணீர் தேவைக்காக எடுக்கப்படுகின்றது. ஆனாலும் அதில் நீரின் மட்டம் குறையவேயில்லை. ஒரு முறை ஐரோப்பா மருத்துவர்கள், சுகாதாரத்திற்காக இந்த கிணற்றினை சுத்தப்படுத்த வேண்டும் என்று சவூதி அரசுக்கு ஆலோசனை கூறினார்கள். இதை ஏற்றுக் கொண்ட சவுதி அரசு 8 அதி நவீன இறைக்கும் இயந்திரங்கள் கொண்டு தொடர்ந்து இரவும், பகலுமாக 15 நாட்கள் இந்த நீரை இறைத்தது. ஆனால் நீரின் அளவு குறையவில்லை. மாறாக நீரின் மட்டம் ஒரு அங்குலம் உயர்ந்துள்ளது.

இதேவேளை, பாலைவனத்தில் அமைந்துள்ள இந்தக் கிணறு, அருகில் ஏரிகளோ, குளம் குட்டைகளோ இல்லாத நிலையிலும் தண்ணீர் குறையவில்லை. பெரும்பாலான நீர் ஊற்றுகள் சில வருடங்களிலோ பல வருடங்களிலோ செயலிழந்து போய் விடும். ஆனால் இந்த ஊற்று பல ஆயிரம் ஆண்டுகளாக வற்றாமல் இருப்பது ஆச்சரியப்படவைக்கின்றது.

அத்துடன், சம்சம் கிணறு அருகே எந்த தாவரமும் வளருவதில்லை. எந்த ஒரு நீர் நிலையாக இருந்தாலும் பாசி படிந்து போவதும் கிருமிகள் உற்பத்தியாவதும் இயற்கை. இதனால் தான் குளோரின் போன்ற மருந்துகள் நீர் நிலைகளில் கலக்கப்படுகின்றன. ஆனால் சம்சம் தண்ணீரில் அது உற்பத்தியான காலம் முதல் இன்று வரை எந்த மருந்துகள் மூலமும் அது பாதுக்காக்கப்படாமல் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வது.

மருந்துகளால் பாதுகாக்கப்படாத தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதாக இருக்காது என்பது அறிவியலின் முடிவாகும். ஆனால் இந்தத் தண்ணீர் 1971ம் ஆண்டு



ஐரோப்பிய சோதனைச் சாலையில் சோதித்துப் பார்க்கப்பட்ட போது இது குடிப்பதற்கு மிகவும் ஏற்ற நீர் என்று நிருபிக்கப்பட்டது. பூமியிலுள்ள நீரில் மிகச்சிறந்தது சம் சம் நீர் என்று நபிகள் நாயகம் கூறியதாகவும் கூறப்படுகின்றது.

பொதுவாக மற்ற நீரில் இருந்து சம்சம் தண்ணீர் வேறுபட்டுள்ளதும் சோதனையில் தெரியவந்துள்ளது. கால்சியம் மற்றும் மக்னீசியம் எனும் உப்பு மற்ற வகை தண்ணீரை விட சம்சம் தண்ணீரில் அதிகமாக உள்ளது தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உப்புக்கள் புத்துணர்ச்சியைக் கொடுக்கக் கூடியவை என இத்தண்ணீரை பருகியவர்கள் தெரிவிக்கிறார்கள். மேலும் இந்தத் தண்ணீரில் ஃபுளோரைட் உள்ளது. இது கிருமிகளை அழிக்க வல்லது. உலகம் முழுவதும் ஏராளமான ஆச்சரியங்களும் அற்புதங்களும் நிகழ்ந்து வந்தாலும் தினசரி இலட்சக்கணக்கான மக்களுக்கு அந்தத் தண்ணீர் குடிநீராகப் பயன்படுவதும் அதுவும் பாலைவனத்தில் இந்த அதிசயம் பல்லாயிரம் ஆண்டுகள் நடந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவையின் மாபெரும் பட்டமளிப்பு விழா 2018 பிரான்சில்!



தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவையும், தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைக்கழகமும் இணைந்து தமிழ்மாணி பட்டயக்கல்வி பட்டமளிப்பு விழா தமிழர்களின் தமிழ் உணர்வு விழாவாக மிகவும் சிறப்பாக கடந்த சனிக்கிழமை (28.04. 2018) 13.00 மணிக்கு பிரான்சின் தலைநகராம் பாரிசில் Eurosites மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. தமிழர் கலைகளான பறைமுழக்கத்துடனும், மங்கள நாதசுவரத்துடனும், பொய்கால்குதிரையாட்டம், போன்றவற்றுடன், நிகழ்வின் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், மதிப்புக்குரியவர்கள், கட்டமைப்புப் பொறுப்பாளர்கள் அன்றைய நாளில் பட்டம் பெற வந்திருந்த பிரித்தானியா, பிரான்சு, இத்தாலி, நோர்வே, நெதர்லாந்து, டென்மார்க் நாடுகளிலிருந்து வந்தவர்களும் நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அரங்கு நிகழ்வாக தமிழர் வரவேற்பு நிகழ்வுகள் நடைபெற்று சுடர்ஏற்றல் நிகழ்வு நடைபெற்றது. சுடர்களினை விழாவின் முதன்மை விருந்தினர் தமிழீழப்பெண்மணி திருமதி உதயா வேலுப்பிள்ளை அவர்கள், பிரான்சின் Inalco அரசபல்கலைக்கழக இணைப் பேராசிரியர் தமிழ் (மொழி, இலக்கியம், நாகரிகம், தெற்காசியத்துறை) அவர்களுடன், அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரியர் மணிவண்ணன் அவர்கள், பேராசிரியர் ஜெயச்சந்திரன் பத்மநாதன், அண்ணாமலைப் பல்கலைக்கழக பதிவாளர் திரு. கல்யாண சுந்தரம் அவர்கள், ஜேர்மன் நாட்டிலிருந்து முனைவர். நா.சி. கமலநாதன் ஐயா அவர்கள், தாய்த் தமிழ்நாட்டிலிருந்து பேராசிரியர் அறிவரசன் ஐயா அவர்கள், பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழுப் பொறுப்பாளர் திரு. மகேசு அவர்களும், தமிழ்ச் சோலைத் தலைமைப்பணியகப் பொறுப்பாளர் திரு. ஜெயக்குமாரன் அவர்கள், அனைத்துலகத் தொடர்பகப் பொறுப்பாளர் திரு.மகேசுவரன் அவர்களும், நெதர்லாந்து திருவள்ளுவர் கல்விக் கழகப் பொறுப்பாளர் திருவாட்டி மேரி ஜெரால்ட், நோர்வே கல்விப் பொறுப்பாளர் திரு.நிர்மலன், டென்மார்க் கல்விப் பொறுப்பாளர், இத்தாலி மேல்பிராந்திய திலீபன் தமிழ்ச்சோலைப் பொறுப்பாளர் திரு.குமாரமூர்த்தியும், கீழ்ப் பிராந்திய பொறுப்பாளர் திரு. கோணேசுவரன், பிரித்தானியா கல்வி மேம்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் திரு.ஞானவேல் தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திருவாட்டி நகுலா அரியரத்திணம் அவர்களும் பிரான்சு நாட்டின் பல்கலைக்கழக முக்கியமானவர்களும் சுடரினை ஏற்றி வைத்திருந் தனர். தொடர்ந்து பல்சுவை நிகழ்வுகளுடன் பட்டமளிப்பும் இடம்பெற்றிருந்தது.

நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பட்டத்தை பெற்றுக்கொண்ட அதேவேளை பலநூற்றுக்கணக்கான இளையவர்கள் அதனை பார்த்து பூரிப்பு அடைந்ததை பார்க்கக் கூடியதாக இருந்தது. இந்த பட்டமளிப்பு விழா என்பது தனியே பட்டமளிப்பதற்கு மாத்திரமல்ல நம் தமிழர்கள் வீரத்திலும், விவேகத்திலும், தியாகத்திலும் மட்டுமல்ல தம் உயிரான தாய்மொழியை அழியவிடா, அழிக்க விடாது பாதுகாப்பார்கள், உலகில் உன்னதமானதொரு இடத்திற்கு கொண்டு செல்வார்கள். அந்நிய நாட்டில் பிறந்து தம் வாழ்விட மொழிபேசியும், கற்றும் பலபட்டங்களை ஆண்டுதோறும் எமது தேசக்குழந்தைகள் பெற்றுக்கொண்டுதான் வருகின்றார்கள் ஆனால் அவைகளோ பெற்றோர்கள், சுற்றத்தவர்கள் மட்டத்திலே நிறைவடைந்து போகின்றன. தன்தாய் மொழியை கற்றவர்கள் பல அறிவாளிகளின் ஆசிகளையும், அறிவுரைகளையும், இனத்தின் வாழ்த்துக்களையும் ஒரு மானிடன் மண்ணில் பிறந்ததற்கான பெரும் பேற்றை இப்படியான நேரத்தில்தான் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதே இன்றைய உண்மையான வரலாறாகின்றது.

# பிரான்சில் மேதினப் பேரணி!

பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழீழ மக்கள் பேரவை, பிரான்சு தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் கடந்த மே1 தொழிலாளர் நாள் பேரணி பல்லின மக்களின் பிரமாண்ட பேரணியோடு எழுச்சியாக இடம்பெற்றிருந்தது.










# பிரான்சில் நடைபெற்ற புலன்மொழி வளத்தேர்வு 2018

தமிழர் கல்விமேம்பாட்டுப்பேரவையின் ஏற்பாட்டில் பிரான்சு தமிழ்ச்சோலைத் தலைமைப்பணியகம் வருடாந்தம் நடாத்தும் புலன் மொழி வளத்தேர்வு 2018, கடந்த வாரங்களில் நடைபெற்றது. இதேவேளை, தமிழ்மொழி பொதுத் தேர்வு வரும் 02.06.2018 சனிக்கிழமை LA MAISON DE EXAMENS 7,RUE RUE ERNEST RENAN 94114 ARCEIL (RER – B LA PLACE) என்ற முகவரியில் இடம்பெறவுள்ளதாகவும் தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகம் தெரிவித்துள் ளது.









# இவ்றி சூர் சென் நகர சபையினால் Féte de Quartier நிகழ்வு!






Ivry sur seine நகர சபையினால் Féte de Quartier நிகழ்வு கடந்த மே 05 சனிக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் இவ்றி சூர் சென் தமிழ்ச்சங்கமும் கலந்து கொண்டு இவ்றி சூர் சென் தமிழ்ச் சோலை மாணவர்களினால் தமிழர்களின் பாரம்பரிய நடனமான காவடி நடனம் வழங்கப்பட்டது. இன் நிகழ்வில் நகரபிதா M.Philippe Bouyssu, val de marne பிராந்திய உறுப்பினர் Mme. Lamya Kirouani அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.





# திரான்சி மாநகர சபையின் 'வசந்த கால கலாச்சார விழா'

கடந்த மே 05 அன்று திரான்சி மாநகர சபையினால் முதன்முதலாக 'வசந்த கால கலாச்சார விழா' திரான்சி நகரில் பல்லின மக்களோட அவர் அவர்களது கலாச்சார நிகழ்வோடு நடைபெற்றது. இந் நிகழ்வில் நகரபிதா Mme.Aude Lavail Lagarde அவர்களும் திரான்சி பாரளுமன்ற உறுப்பினர் M. Jean Christophe Lagarde ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர். இதில் திரான்சி தமிழ்ச் சங்கமும் பங்குபற்றி. திரான்சி தமிழ்ச்சோலை மாணவர்களினால் தமிழர் கலாச்சார நடனங்கள் பலவற்றை இணைத்து புதுமையான நடன நிகழ்வு நடைபெற்றது. பல் இன மக்களின் பாராட்டையும் இவ் நடன நிகழ்வு பெற்றது குறிப்பிடதக்கது.





பரம் திருமண சேவை
யாழ்ப்பாணம், பிரான்சு போன்ற நாடுகளிலிருந்து மணமகன், மணமகளை தெரிவு செய்ய தொடர்புகொள்ள வேண்டிய சேவை
தொடர்புகளுக்கு: 0753844284
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

Bbaira Universal Services
TEMPO
Ria
•Devenir agent de RIA et TEMPO.
•To become agent of RIA and TEMPO.
நீங்கள் உங்கள் வர்த்தக நிறுவனங்களில் RIA மற்றும் TEMPO பணமாற்று சேவையை எடுத்து செய்து உங்கள் வருமானத்தை அதிகரித்து கொள்வதற்க்கு Bbaira நிறுவனத்தை தொடர்புகொள்ளுங்கள்!
Téléphone: Chargeurs, écouteur, etc.....
Ordinateur: Claviers, Souris, Cartes mémoire, etc...
Contactez : Mobile : 07 82 37 51 43
Email: bbairauniversalservices@gmail.com

Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost, 93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சமயம்சார்ந்த நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்க இன்றே செல்ல வேண்டிய இடம்.

திருமணம் மற்றும் விழாக்களுக்கான ஏற்பாடுகள்
9710142049 / 9710770399
Manavarai
Makeup
Photos & Video
Registration
Natheswaram & Melam
Guest House
Travels
Reception Cake
Balloon Decoration
Srilankan Foods
K.Lalithakumar 153, Gangai Street, Santhosh Nagar, Porur - 116
lalithniro 9789877848

Baby Baloon
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

மாங்கல்யம் நகை மாடம்
தரம் - நேரம் - விலை - டிசைன் - உத்தரவாதம்
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
உடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
122 Av Paul Vaillant Couturier - 93120 La Courneuve
Tél & Fax: 01 48 36 40 75
email: mangalyam93120@gmail.com
www.mangalyam-jewels.com

பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
திரு.சகாதேவன்
எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
நேரில் வரமுடியாதவர்களுக்கு தபால் மூலம் மொழிபெயர்ப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்.
தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

RAJINTTA CASH AND CARRY
BOBIGNY வாழ் மக்களுக்காக...
வெற்றிலை, இந்திய, ஆசிய மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள், இன்னும் பல ...
Tel. : 09 87 03 70 07
1 Ave. Edouard Vaillant - 93000 Bobigny

வீட்டு திருத்தவேலைகள்
உங்கள் வீட்டு திருத்த வேலைகள் அனைத்தும் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்களால் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு : 07 51 20 27 28

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்
29 rue Philippe de Girard, 75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

பரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலைபேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS

ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்
STOP !
• எலிகள் – சுண்டெலிகள்
• கரப்பான் பூச்சிகள்
• தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம் ஒரே தடவையில் பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V, 75004 Paris.
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
Tél.: 01 60 07 34 29
சுதா / விமல் : 06 34 18 80 04